முகத்தார்
எஸ்.ஜேசுறட்ணம்
அவர்களின்
ஓராண்டு
நினைவாக..



# நானும் நீயும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நீயும்

# நானும் நீயும்

"ஈழத்தமிழ்விழி" "கலைமாமணி"

## "முகத்தார்" எஸ்.யேசுரட்ணம்

எழுத்திலும், வாய்மொழியாக சொல்ல, அவற்றை செவிமடுத்தும்
நூலாக தொகுத்தவர்

"கலைஞர் காவலர்" "மனிதருள்"

## வண்ணை தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும், நீயும்..
"முகத்தார்" எஸ்.யேசுறட்ணம் அவர்களின் கலைத்துறை வரலாறு

எழுத்து
"முகத்தார்" எஸ்.யேசுறட்ணம்

தொகுப்பு – உருவாக்கம்
வண்ணை தெய்வம்

உரிமை
ஜீவா-மரியதாஸ்
2-Rue de L' Egalite - 95500 Gonasse
France
Tel:- 0139870838

முதல்ப்பதிப்பு
மார்கழி – 2011

பக்கங்கள்-128

அட்டை வடிவமைப்பு
"ஓசை" மனோ

புத்தக வடிவமைப்பு
கொப்பி லா,சப்பல்

நன்றிகள்
"அப்புக்குட்டி" ரி.ராஜகோபால்
ரவி மாஸ்டர் (E.T.R. Radio)
வண்ணை தெய்வம்

வெளியிடுவதில் அனுசரணை

ஐரோப்பிய தமிழ் கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்
L'Art de Tamoul et La Littiérature des Amis de L'Europe
7 - Allee Auguste Renoir - Batiment:- Savoie. 93420 - Villepinte. France



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி

1-நினைவுரை-1 07
யேசுவோடு பேசும் மதியழகன்- (கனடா) (இலங்கை வானொலியின் முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்,)

2-நினைவுரை-2. 12
யார் இந்த முகத்தார்? டேவிட்-ராஜேந்திரன்- (பிரான்ஸ்)
(முன்னாள் இலங்கை வானொலி, ரி.ரி.என் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்)

3-நினைவுரை-3 14
முகத்தார் ஒரு ராஜவிருட்சம் விக்கி-நவரட்ணம- (சுவீஸ்)
(கவிஞர், எழுத்தாளர்)

4-நினைவுரை-4 16
அன்ரன்- செல்வக்குமார்- (இளவாலையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் கட்டாரில் பணிபுரிந்த காலத்தில் எழுதியது)

5-நினைவுரை -5 19
“பல்துறைக் கலைஞர்” கே.பி.லோகதாஸ் (பிரான்ஸ்)
(மேடை, வானொலி, திரைப்படக் கலைஞர்)

6-நட்புரை 21
“அப்புக்குட்டி” ரி.ராஜகோபால் (பிரான்ஸ்) (மேடை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படக் கலைஞர் முகத்தாரின் உயிர் நண்பன்)

7-நினைவுரை-6 23
“கலாநிதி” கல்லாறு சதீஸ் (சுவீஸ்)(எழுத்தாளர்)

8-நினைவுரை-7 25
திருமதி.பொன்மணி.குலசிங்கம்
(கனடா) (இலங்கை வானொலி முன்னாள் பணிப்பாளர்)

9-முன்னுரை 26
திருமதி.கலா-லோகநாதன்
(முகத்தார் அவர்களின் மூத்த மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்வது முகத்தாரின் கதை

10 -கேள்வியும் நானே, பதிலும் நானே! 35

11 -என் மனைவிக்கோர் கடிதம் 36

12 -திரும்பிப் பார்க்கின்றேன். 43

13 -கலை வாழ்க்கையில் என்னுடன் இணைந்தவர்கள் 48

14 -பூவாடை வீசிவரும் தமிழ் ஓடை அமுது அண்ணா!. 98

## முகத்தார் விட்ட இடத்தில் இருந்து....

15 -கலையும் தொண்டும் யேசுறட்ணம் காட்டிய நல்வழிகள். 107

S.J.V.S. சந்திரகாசன். ஈழ எதிலிகள் மறுவாழ்வுக்கழக நிறுவனர்

16 -நீங்கள் மறையவில்லை எங்கள்........... 110
தேன்மொழி (ஈழ எதிலிகள் மறுவாழ்வுக் கழகம்- சென்னை)

17 -முடிவுரை 112
வண்ணை தெய்வம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஐம்பத்திநான்கு (54) வருடங்கள் (23-12-1951 – 15-12-2005) தாம்பத்திய உறவில் என்னுடன் சங்கமித்துவிட்டு என்னையும் என் பிள்ளைகள் ஐந்தையும் (கலாராணி, ஜீவராணி, பிறேம்ராஜ், மகாராஜ், செல்வராஜ்) என் பேரப்பிள்ளைகள் பதினொன்றையும் (ஜோயல், மார்ஷல், ஜானியல், ஸ்ரெபன், ஜெரா, ஐஸ்மின், குளோறியா, ஜெயஷின், கெவின், ஷேர்லி, பீலிக்ஸ், டானியல், அலன், ஜெனலின், ஆஞ்சலின், லவ்லின்,) மருமக்கள் ஐவரையும் (லோகன், மரியதாஸ், பிறேமிளா, மானல், மஞ்சுளா) இத்தனை அன்பு உள்ளங்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சடுகதியாய் எம்மைவிட்டு மண்ணுக்கு விதையாகிய எனது துணைவியார் அயறின்-வில்லவரசிங்கம் அவர்கட்கு இந்நூல் பாசச் சமர்ப்பணம்!.



**ஆயிரம் முத்தங்களுடன் உம் பத்தா**
**"முகத்தான்" எஸ்.யேசுறட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றோர்கள் திரு,திருமதி சந்தியாப்பிள்ளை- மரியப்பிள்ளை ஆகியோருடன் "முகத்தார்" எஸ்-யேசுறட்ணம் அவர்கள்



பதின்நான்கு வருடங்களுக்குப்பின் பிரான்ஸில் தனது மனைவி பிள்ளைகளுடன் ஒன்றுகூடியபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுரை -1

# யேசுவோடு பேசும் மதியழகன்

1971ம் ஆண்டு யூலை மாதம்

ஜே.வி.பி யின் ஏப்பிரல் கிளர்ச்சியை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் அடக்கி ஒடுக்கிய மூன்றாம் மாதம்.

நாட்டில் அமைதி திரும்பி வழமையான நிர்வாக நடவடிக்கைகள் மீண்டும் தொடங்குகின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எப்போது நடத்தும் என நான் விரும்பிக் காத்திருந்த நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய அழைப்பு வருகின்றது.

அறுநூறு பேர் தோற்றுகின்றார்கள். பதினெட்டுப்பேரே தேறுகின்றார்கள்! அவர்களில் நானும் ஒருவனாகினேன்.

பயிற்சிக்காலம். ஆறாம் இலக்க கலையக வாசலில் புதிதாக இணைந்துகொண்ட நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கின்றேன்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கே உரித்தான பிரத்தியேகமான அலுவலக தோல்பை ஒன்றை கையில் தூக்கியவாறே ஒருவர் தமிழ்ச்சேவை நோக்கி விரைகின்றார். அவர் நடந்து செல்லும் பாங்கு என்னை வியக்க வைக்கின்றது. இவர் யார்? ஒரு உயர் போலிஸ் அதிகாரியாக இருக்கக்கூடுமோ? என்ற நினைப்பு வருகின்றது. அருகிலிருந்த ஒருவரை உசாவிப்பார்க்கிறேன்.

“என்ன மதி... இவரைத் தெரியாதா உமக்கு! இவர்தான் “முகத்தார்” யேசுறட்ணம் என்றார் அந்த மூத்த ஒலிபரப்பாளர். முகத்திற்கும், பார்ப்போரை அப்படியே வசீகரித்துக் கொள்ளும் தேகக் கட்டமைப்பிற்கும் சம்மந்தமில்லாத பெயராக இருக்கின்றதே என வியக்கின்றேன்.

“இன்காம்ரக்ஸ் டிப்பாட்மென்ரில் நல்ல வேலையில் இருக்கின்றார். எங்கடை றேடியோ ஆட்டிஸ்ற். இனிமேல் நீர் அடிக்கடி சந்திக்கப்போகும் ஆட்களில் இவரும் ஒருவராக இருப்பார். ஆள் இளவாலை. இன்றஸ்ரிங்கான கரக்டர்! நல்ல நடிப்புத்திறன் மிக்கவர்.” தொடர்ந்தார் ஒலிபரப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி நாடகங்களில் நான் கேட்டுவந்த பழக்கப்பட்ட குரலுக்குரியவரை அன்று நேரில் கண்டுகொண்டேன் நிலையக் கலையகங்களில் முகத்தார் எஸ். யேசுறட்ணத்துடன் படிப்படியான பழக்கம் ஏற்பட்டு முப்பத்தியேழு வருடங்கள் ஓடிச்சென்றுவிட்டன.

யேசு, யேசுவென நான் விழித்துப் பழகி வந்தவரின் அனுபவங்கள் நூலாகின்றன என அறிந்து எனது பேனாவை எடுத்துள்ளேன். உன்னதமான ஒரு பிறவிக் கலைஞனோடு ஏற்பட்ட மனப்பதிவுகளை வெளிப்படுத்த…

இலங்கை வானொலி நாடகங்களின் பிதாமகர் என போற்றப்படும் “சானா” சண்முகநாதனின் மாணவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்பவர் “கலைமாமணி” ‘முகத்தார்’’ யேசுறட்ணம் அவர்கள்.

இவரால் எழுதி நடிக்கப்பட்டு வந்த “முகத்தார் வீடு” என்ற வானொலி நாடகமே இவருக்கு “முகத்தார்” என்ற அடையாளத்தை கொடுத்திருக்கிறது.

நாடகத்தின் இலக்கண வரையறை தெரிந்து வானொலிப் பிரதியினை அமைக்கும் திறன்மிக்கவர் என்பதாலும், வானொலி நாடக தேவை கருதி குரலின் ஏற்ற இறக்கங்களை ஒலிவாங்கியின் இலத்திரனியல் தொழில் நுட்பம் புரிந்து நடிக்கும் ஆற்றல் உள்ளவர் என்பதாலும், உன்னதமான கலைஞன் என்ற நிரந்தர புகழைச் சம்பாதித்திருக்கின்றார் எஸ்.யேசுறட்ணம். இவரது நாடகங்களை செவிமடுக்க பல்லாயிரக்கணக்கான நேயர்கள் திகதி, நேரம் குறித்து காத்திருப்பார்கள்.

நாடகப்பிரதி ஒன்று வெற்றிகரமாக வானொலி வடிவம் பெறுவதற்கு ஆரம்பம் Start. முன்னேற்றம் Progress. முரண்பாடு Confict. முடிவு Conclusion. செய்தி Message. என்பதை புரிந்தவர் யேசுறட்ணம் என்பதனால் முகத்தார் வீடு மட்டுமல்ல ஏனைய அவரது நாடகங்களும் வெற்றி பெற்றன. கால் மணிநேரம், அரை மணிநேரம் செல்லும் நாடகங்களில் இந்தப் பண்புகளை அனுசரிப்பதற்கு தனியான ஆழுமை வேண்டும்.

முகத்தார் வீட்டில் செய்தி Message முக்கியத்துவம் பெறவேண்டும். விவசாயிகளுக்கு நன்மை அளிப்பதாக அது அமைய அமையவேண்டும் என்பது விவசாயத் திணைக்கள பண்ணை ஒலிபரப்பு பிரிவின் எதிர்பார்ப்பு. அந்த நிறுவனமே நிகழ்ச்சிக்கு அனுசரணை அளித்து வந்தது.

“முகத்தார் வீடு” வாரா,வாரம் வானொலியில் ஒலிபரப்பாகி வந்த நகைச்சுவை நாடகம். விவசாய உத்தியோகத்தர்களின் துணை நாடுதல், நிலத்தை தெரிவு செய்தல், பண்படுத்தல், பல்வேறு பயிர் உற்பத்திகளுக்குரிய காலத்தை கண்டறிதல், பொருத்தமான விதையினங்களை தெரிவு செய்தல். நீர்ப்பாசன முறைகள், கிருமிநாசினிப் பாவனை, களையகற்றல், பசளைப் பிரயோகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடை, சந்தைப்படுத்தல் என்பனவே முகத்தார் வீட்டினூடாக வழங்கப்படும் செய்தி.

இது ஒரு ஜனரஞ்சகமான விடயமல்ல! பிரச்சார வகையானது. வானொலியில் பிரச்சாரம் என்பது கத்திமுனையில் நடப்பது போலானது! நம்பகத்தன்மை பேணப்பட வேண்டும். அந்த நம்பகத் தன்மைக்கு ஆதாரமாக "கமத்தொழில் விளக்கம்" என்ற சஞ்சிகை, மற்றும் விவசாயப் பிரசுரங்கள் யேசுறட்ணத்திடம் கொடுக்கப்படும். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல அவற்றை விவசாயிகளுக்கு புரியவைக்கவேண்டும்.

இதற்காக யேசுறட்ணம் துணைக்கொண்டது கிராமியப் பேச்சு வழக்கு, நகைச்சுவை, கிண்டல், கேலி. இவைகள் மூலமாக கனகச்சிதமாக பிரதி உருவாக்கி வானலைகளில் தவழவிடுபவர் முகத்தார், அவர்கள்.

வானொலி நாடக கட்டுப்பாட்டு விதிகளை அவ்வப்போது சாடைமாடையாக மீறி சற்று இரட்டை அர்த்தமுடைய வசனங்களையும் நகைச்சுவையாக இழையோடவிட்ட சந்தர்ப்பங்களும் நடந்தது உண்டு. அதை பிழையென தயாரிப்பாளர்கள் கொள்வதில்லை. இருந்தாலும் தயாரிப்பாளர்களின் மேலதிகாரியான இயல், நாடகக் கட்டுப்பாட்டாளர் "விரசமாகிப்போய்விடும் யேசுறட்ணத்தை சற்று குறைக்கச்சொல்லுங்கள்" என சொல்லிக்கொள்வார்.

ஒரு தடவை முதல்வாரம் ஒலிபரப்பாகிய முகத்தார் வீட்டில்.. அப்பாவிப் பாத்திரமான சரவணைக்கு திருமணம் இடம்பெற்றது. மறு வாரத்தில் சரவணைக்கு நாடகப் போக்கின்படி குளிர் காய்ச்சல்! "ஏன் எப்படி காய்ச்சல் வந்தது?" என அவரது நண்பர் பரிவோடு விசாரிக்கின்றார். முகத்தார் சொன்னார் "ஏதோ காணாததைக் கண்டிட்டான் போலை கிடக்குது!" என்று. இப்படியான வசனங்கள் சாதாரணமாக பேசப்படும் பேச்சுவழக்குச் சொல் என்பதால் முகத்தார் அதை தனக்கு சாதகமாக பாவித்துக்கொள்வார்.

யேசுறட்ணம் வட்டார வழக்குகளை, சமுதாய வழக்குகளை நன்கறிந்தவர். நாடகப் பாத்திரங்களுக்கிடையே அவற்றை நன்கு பயன்படுத்தினார். இதனால் முகத்தார் வீடு நாடகம் தனித்தன்மை பெற்றிருந்தது. கேட்போர் மனங்களில் தான் விரும்பும் உணர்வை அவரால் உருவாக்க முடிந்தது. இதனால் முகத்தார் வீட்டினூடாக வழங்கப்படும் செய்திகளுடன் அவர்களால் ஒன்றுபட வாய்ப்பு உருவாகியது. பண்ணை ஒலிபரப்பு சேவையின் நோக்கமும் நிறைவேறி வந்தது.

நாட்டுப்புற மக்களை மாத்திரமல்ல கொழும்பு-7 கறுவாக்காட்டு வாசிகளையும் தமிழ் தேசிய சேவையை கேட்க வழியமைத்த நாடகம் முகத்தார் வீடு,தான்!. அவர்கள் விவசாயம் செய்பவர்கள் அல்லர். ஆனாலும் அவர்கள் முகத்தார் வீடு நாடகத்தை தவறவிடுவதில்லை. அந்த அளவிற்கு கவர்ச்சிகரமாக, அனைத்து நேயர்களையும் தன்பால் ஈர்த்தவர் யேசுறட்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் என பல்வேறு பிரதேச விவசாயிகளும் ஒரே முறையில் விவசாயத் தகவல்களை புரிந்து கொள்ளும் வகையில் எழுதும் திறன் இவருக்கு இருந்தது. அவரது பிரதியை அப்படியே நடித்துக் காட்டக்கூடிய திறமைமிகு நடிகர்களை வானொலித் தயாரிப்பாளர்கள் தேர்நதெடுத்துக் கொள்வார்கள்.

கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர் டேவிட்-ராஜேந்திரன் முகத்தார் வீடு நாடகத்தை தயாரித்து வந்தார். அவர் புலம் பெயரவே அந்தப் பொறுப்பை என்னிடம் தந்தார்கள். இதன் தயாரிப்பை விவசாய உத்தியோகஸ்த்தர் வரணி சி.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் அனுசரணை அளிக்க, யேசுரட்ணம் பிரதி அமைக்க, முகத்தார் வீட்டை தொடர்ந்து பாதுகாத்து வந்தேன்.

யேசுரட்ணமும் புலம் பெயரவே முகத்தார் வீடு என்ற மாளிகை தொடரமுடியாமல் பாழடைந்தது. யேசுரட்ணம் போன்ற மற்றுமொரு எழுத்தாளரை எம்மால் தேடிக் கண்டுகொள்ள முடியவில்லை. நேயர்கள் திருப்தியடையாது ஏமாற்றமடைந்தனர்! எங்கே முகத்தார்? என எம்மைத் துளைத்தெடுத்தனர்.

மயில்வாகனம் சர்வானந்தா அவர்களைக் கொண்டு விவசாயத் தகவல்களை வழங்குவதற்காக அதற்கு மாற்றீடாக "வயலோடு வசந்தங்கள்" என்ற பெயரில் ஒரு சிறு குடிசையையே என்னால் போடமுடிந்தது. நான் புலம் பெயர்ந்தபின் அந்தக் குடிசையும் கலையாமல் உள்ளதா? என்பதை தற்போதைய இயல் நாடகக் கட்டுப்பாட்டாளர் ராஜபுத்திரனிடம்தான் கேட்டுப்பார்க்க வேண்டும்.

எழுபதுகளின் இறுதிப் பகுதியில் "கமலாலயம்" எஸ்.சிவதாசன் அவர்கள் எழுத்தாளர் பிலகரி அவர்கள் எழுதிய கதையொன்றை மேடை நாடகமாகத் தயாரிக்க முன்வந்தார். அதனை "பாசச்சுமை" என்ற பெயரில் வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை நெறியாழ்கை செய்தார். இவரும் (Income Tax Department) இன்கம்ரக்ஸ் டிப்பான்மென்ரில் பணியாற்றியவர், இலங்கை வானொலி நாடகக் கலைஞராக விளங்கியவர். பாசச்சுமையில் எஸ்.யேசுரட்ணம் அவர்கள் முக்கிய பாத்திரம் ஏற்றார். அறிவிப்பாளர் விமல் சொக்கநாதன் கதாநாயகன். இரண்டாவது கதாநாயகனாக என்னை தேர்ந்தெடுத்தார்கள். அதுவே நான் நடித்த முதல் நாடகமாகும்.

மேடை நாடகத்தில் முன்பின் அனுபவம் இல்லாத இளைஞனாக இருந்த எனக்கு அதன் போக்குகளை பக்குவமாக எடுத்துச் சொல்லி எஸ்.எஸ்.கணேசபிள்ளையுடன் நடிக்கவைத்தவர் யேசுரட்ணமே!. நானும் மேடை நாடகத்தில் நடித்தவன் எனக்கூறி எனது ஒலிபரப்பு அனுபவத்திற்கு பலம் சேர்க்க இது உதவியது. இந்த நாடகத்தில் கே.எஸ்.பாலசந்திரன், சந்திரப்பிரபா, மாதவன் போன்ற அனுபவம் மிக்க கலைஞர்கள் எல்லாம் நடித்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்திலேயே ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா என அனுமதிச் சீட்டுக்கள் விற்கப்பட்டு கொழும்பு ராமகிருஸ்ண மண்டபம், றோயல் நவ அரங்க சாலை, லயனல் வென்ற் அரங்குகளிலும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி திறந்தவெளி மைதானம் என்பவற்றிலும் பாசச்சுமை அடிக்கடி அரங்கேறியது. பாசச்சுமை மட்டுமல்ல யேசுறட்ணத்திற்கும் எனக்கும் இடையிலான மனப்பதிவுகள் மேலும் மேலும் அதிகமாக உள்ளன.

யேசு! நீர் நாடக உலகில் தனித்துவமானவர். உமக்கு ஈடு இணை என்பதே கிடையாது. உம்மோடு பேசிப் பழகிய நாட்கள் இனித் திரும்புமா?

ஈழத்தாய் பெற்ற இணையற்ற கலைஞனே! உம்மை நினைக்கும்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதலாம், ஐந்தாம், ஆறாம் இலக்க கலையகங்கள். கலையகம் நோக்கிச் செல்லும் விறாந்தைகள், கன்ரீன் என்பன எனது மனதில் நிழலாடுகின்றன. நாடகத் தயாரிப்பாளர் கே.எம்.வாசகர், பி.விக்கினேஸ்வரன், போன்றோர் சகிதம் அப்புக்குட்டி ரி.ராஜகோபால், பி.என்.ஆர் அமிர்தவாசகம், சி.மார்க்கண்டு, விஜயாள்-பீற்றர், எஸ்.எஸ்.கணேசபிள்ளை, கே.எஸ்.பாலச்சந்திரன். செல்வம்-பெர்னாண்டோ, என அப்போதைய அற்புதமான கலைஞர்களோடு நீர் தமாசாகப் பேசிச்செல்லும் நாட்கள் மனதில் அலை மோதுகின்றன. அவர்கள் எல்லோரும் எப்போதும் எமக்கு தனி மதிப்பு அளித்து வந்தவர்கள்.

அது மட்டுமல்ல.. நாடகத் தயாரிப்பாளர்கள் ஜோர்ஜ் சந்திரசேகரன் நோய்வாய்ப்பட்டிருந்த சுமார் ஏழு வருட காலப்பகுதியில் நான் நாடகங்களை தயாரிக்கவென அப்போதைய இயல், நாடக கட்டுப்பாட்டாளர் வி.ஏ.சிவஞானம் அவர்களால் கேட்கப்பட்டிருந்தேன். எனது நெறியாழ்கையில் நீரும் உம்மைப்போன்ற மூத்த நாடக கலைஞர்களும் நடித்து நான் நாடகத் தயாரிப்பு அனுபவம் பெற்றதை இன்றும் மனதில் பதிந்து வைத்துள்ளேன்.

இளவாலையில் உள்ள உமது வீட்டில் விருந்துண்ட ஞாபகம் இன்னமும் மனதில் உள்ளது. உமது அழகான அன்புத் துணைவியின் கரங்களால் பரிமாறப்பட்ட உயர் விருந்து அது.

உமக்கு ஆறுதல் அளித்துவந்த அவரது நினைவோடு வாழ்ந்திடுவீர் நூற்றாண்டு காலம்..

இவ்வண்ணம்
சில மணிநேரம் உமது நினைவில் நனைந்த.

**"தமிழ் அழகன்" வி.என்.மதிஅழகன்**
முன்னாள் தமிழ்ச்சேவை பணிப்பாளர்
முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொறன்ரோ மாநகர் கனடா ஒக்ரோபர் 1- 2008

# நினைவுரை -2

# யார் இந்த முகத்தார்?

## டேவிற் -ராஜேந்திரன்

இன்று நம் ஈழத்துக் கலைஞர்கள், மற்றும் நாடக ரசிகர்கள் மத்தியில் மட்டுமல்ல நம் தொப்புள் கொடி உறவுகள் வாழும் தமிழக ரசிகர்கள் மத்தியிலும் பேசப்படும் பெயர் 'முகத்தார'' யேசுறட்ணம்..

நான் வானொலியில் பணியாற்ற ஆரம்பித்த வேளையின் போது இந்த முகத்தார் பிறக்கவே இல்லை! ஈழத்து நாடகக் கலை வரலாற்றில் அழியாத முத்திரை பதித்துவிட்ட முகத்தாருக்கு வயது முப்பது மட்டுமே என்று நான் சொல்வதிலும் அர்த்தமுண்டு. பழுத்த ஞானப்பழமாக நாம் காணும் இந்த முகத்தார் பிறந்ததே 1978ம் ஆண்டில்த்தான்.

முகத்தாருக்கு முந்தியவர்தான் எஸ்.யேசுறட்ணம். இலங்கை வானொலியில் நாடகங்களை எழுதி பங்கேற்று நடித்து வந்த யேசுறட்ணம் எனது தயாரிப்பில் ஒலிபரப்பான "முகத்தார் வீடு" விவசாய நாடக தொடருக்குப் பின்னர்தான் முகத்தாராக மறுபிறப்பெடுத்தார். அவரது முகத்தில் இலட்சணை போல நிரந்தரமாக ஒட்டிக் கொண்டுவிட்ட தும்புக்கட்டை மீசைபோல யேசுறட்ணம் என்னும் பெயருக்கு முன்னால் "முகத்தார்" என்னும் பெயரும் ஒட்டிக்கொண்டதும் அப்போதிலிருந்துதான்.

விவசாயத் திணைக்களத்தின் ஆதரவுடன் இலங்கை வானொலிக்காக எனது எண்ணத்தில் கருவாகி அவரது எழுத்தில் உருவாகிய "முகத்தார் வீடு" விவசாய நாடகம் இலங்கையின் அத்தனை மூலை, முடுக்கு, பட்டி, தொட்டிகளையும் தாண்டி வயல் வரப்பிலெல்லாம் ஒலித்து மகிழ்வித்து, அத்துடன் விவசாயிகளுக்ப் பயன்தரும் தகவல்களையும் தாராளமாக வழங்கியது.

தமிழ் ஒலிபரப்பின் பொற்காலத்தின்போது திருமதி பொன்மணி-குலசிங்கம் தமிழ்ச்சேவை அதிகாரியாக பணிபுரிந்த வேளையில் ஒலிபரப்பான முகத்தார் வீடு நாடகம் 80ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக ரசிகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் முதலிடத்தை பெற்றுக் கொண்டதிலும் அதிசயமிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தார் யேசுறட்ணம் அவர்களின் அற்புதமான புரிந்துணர்வும், தன்னைவிட அனுபவத்திலும், வயதிலும் இளைய கலைஞர்களுக்கும் மதிப்பளித்து, ஊக்குவித்த அரிய பண்பும், முகத்தார் வீடு நாடகத் தயாரிப்பின்போது நான் கண்டு வியந்த அதி சிறந்த தகுதிகள்.

பூவோடு கூடிய நார் மணம் பெறுவதற்கு பூவின் அனுமதியை வேண்டுவதில்லை. முகத்தாரின் புகழ் மணத்தை முகர்ந்து பகிர்ந்து பெருமிதம் கொள்ள எனக்கு அவரது அனுமதி வேண்டும்.

ஈழத்து தமிழ் நாடகக் கலை வாழும் வரையில் 'முகத்தார'' என்னும் பெயரும் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பது உறுதி.

**டேவிட்-ராஜேந்திரன்**
**(முன்னாள் இலங்கை வானொலி, ரீ.ரீ. என். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்)**

**சுமதி நாடகத்தில்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுரை -3

# முகத்தார் யேசுறட்ணம் ஒரு ராஜ விருட்சம்!.

## கவிஞர், விக்கி-நவரட்ணம்

இந்த மாபெரும் கலைஞனின் நாடகங்களை என் இளமை துள்ளும் வயதில் இலங்கை வானொலியில் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். இவருடைய "முகத்தார் வீடு" நாடகம் அந் நாளில் பெருமளவில் பேசப்பட்டது. இவரது நடிப்பின் உத்வேகம், ஆவேசம், பல நாடகங்களை பெருமழையாக கொண்டுவந்து கொட்டிய வேகம், நாடகப் பிரியர்கள் எல்லோருக்கும் புரியும். இவருடைய அந்த தீவிர சிந்தனைகள் என்னை எப்போதும் திகைக்கவைத்திருக்கின்றது!.

நாடகம் என்பது ஒரு தீச்சுடர்! அது எந்த உருவத்தில் பற்றுகின்றதோ? அந்த உருவமாக முகத்தார் யேசுறட்ணம் அவர்கள் மாறிவிடுவார். அந்த சுவாலைகளால் அவர் எந்தப் பாத்திரத்தை ஏற்றாலும் அந்தப் பாத்திரம் தக,தகவென்று ஜொலிக்கின்றது. எனவேதான் நான் அந்தக்காலத்தில் இவரது நாடகங்களை தவறாது கேட்பேன்.

கேட்டவன் எழுதுகின்றேன். இவர் வாயிதழ் வசனங்களைச் சிந்தும், கொஞ்சி விளையாடும், கேட்பவர்கள் மனங்களை குளிரவைக்கும். இவர் நாடகங்களை வானொலியில் கேட்டு மகிழ்ந்த பொழுதெல்லாம் அப்பொழுது நான் நினைத்திருக்கவில்லை இப்படியானதொரு பெரும் கலைஞனை என் வாழ்நாளில் சந்திப்பேன் என்றும்! அவருடன் கலந்துரையாடி மகிழ்வேன் என்றும்! பழகுவதற்கு இனிமையானவர்! பண்பு நிறைந்தவர்! ஒருவரோடு பழகிவிட்டால் அவரை வாழ்நாளில் மறக்கமாட்டார். அப்படிப் பழகியவர்களில் ஒருவன்தான் நான்.

இந்த புதுமைக் கலைஞனின் நாடகங்கள் புதிய பார்வையில் பார்க்கப்படவேண்டியவை! கரும்பு சக்கையாக மாறும்வரை சுவைப்பதுபோல இவரது நாடகங்களை வாழ்நாளெல்லாம் சுவைக்கலாம்! ஆழமான கருத்துள்ள கதைகளோடு நளினம், நகைச்சுவையென பல நாடகங்களை ஏடுகளில் அடுக்கி வைத்துள்ளார். அவைகள் அச்சுப்பொறியைக் கொண்டு அழியா வாழ்வு பெறவேண்டுமென்பதே எனது ஆவல்.

நடிக்கத் தெரிந்த ஒரு கலைஞனின் கைகளில் கிடைத்த அற்புதமான வைரம்தான் நாடகம். அதனால்த்தான் இவர் ஒரு ராஜவிருட்சமாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ராஜ விருட்சத்தில் வந்திருந்து கலைஞர்களாகிப் பறந்த பறவைகள் இவரைத் தங்கள் வாழ்நாளில் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்பதே உண்மை.

இவருடைய நாடகங்களின்பால் கவனம் பதித்த இளமைப் பருவத்தில் எனது வாலிப இரத்தம் துள்ளிய துள்ளல்களால் நுரைத்துக் கொண்டாடும் சப்த கோலங்களாக எனது மனதிற்குள் பழைய வாசனைகளைப் பரப்பும் அந்த நேரத்தில்த்தான் திருமதி. நவாஜோதி அவர்களால் நடாத்தப்பட்ட ஏ.பி.சி. வானொலி மூலமாக இவரோடு முதல் தொடர்பு தொலைபேசி மூலம் கிடைத்தபோது எனது மனசு துள்ளி விளையாடியது.

அந்த நேரத்தில் எனக்கிருந்த ராட்சத உணர்ச்சிகள் எனது வாழ்நாளில் ஒரு முறையாவது இந்தக் கலைஞனை நேரில் சந்தித்து விடவேண்டும் என்பதுதான். எதிர்பார்ப்பது எல்லாம் எல்லோருக்கும் எழிதில் நடப்பதில்லை. ஆனால் எனது "ஆகாய கங்கை" கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா 2002ம் ஆண்டு ஆவணி மாதம் சுவிஸில் நடைபெற்றபோது இவர் நேரில் வருகை தந்து சிறப்பித்திருந்தார். அதுமட்டுமல்ல ஜேர்மனியின் ஹம் மாநிலத்தில் நடைபெற்ற அந்த நூலின் அறிமுக விழாவிற்கும் வருகை தந்து சிறப்பித்து என்னை கௌரவப்படுத்தியிருந்தார்.

எனது மகளின் திருமண நிகழ்வின்போது எனது அழைப்பை ஏற்று திரு.அப்புக்குட்டி ராஜகோபால், திரு. விசு-செல்வராஜா, திரு.அருணகிரிநாதன், என ஏ.பி.சி வானொலிக் கலைஞர்களோடு ஐயாவும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பித்தபோது எனக்குள் அந்த நேரம் எழுந்த சந்தோஷத்தை கலாபூர்வமாக பதிவுசெய்து வைத்திருக்கின்றேன்.

ஒரு கவிஞனாக திரு.வண்ணை தெய்வம் அவர்கள் என்னை "மண்வாசனைக் கவிஞன்" என்று பாராட்டியபோது "உனக்கு பொருத்தமானதைத்தான் வண்ணை தந்திருக்கின்றார்" என ஐயா பாராட்டியபோது வசிஷ்ட்டரின் வாயால் வாழ்த்து கிடைத்த பெருமையை அடைந்தேன்.

எனக்குள் எழுந்த வார்த்தைகளை வர்ண ஜாலங்களாக வாரி இறைக்க நான் ஒன்றும் பெரிய கவிஞன் அல்ல. எனது இதயத்துக்குள் அண்ணனாக இருக்கும் முகத்தார் திரு.யேசுறட்ணம் அவர்களைப்பற்றி கொஞ்சம் கிறுக்கியிருக்கின்றேன். அவரது ரசிகனாக!.

**மண்வாசனைக் கவிஞன்**
**விக்கி-நவரட்ணம்**
**சுவீஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை
# முகத்தார் வாழி

## கவிஞர். அன்ரன்.செல்வக்குமார்

ஈழத்தின் சிகரமென இலங்குகின்ற யாழ் மண்ணில்
முக்கனித் தோப்புக்கள் கட்டியம் கூறிநிற்கும்
தேங்காய் விழுந்தவுடன் மாங்காய் சிதறுகின்ற
சீரும் சிறப்புமிக்க இளவாலையில்
நல்முத்தாய் உதித்த முகத்தாரே வாழி!

இலங்கை தமிழ் திரைப்படமாம் வாடைக்காற்றில்
பொன்னுக் கிழவராக வந்த உம் நடிப்பை
செப்புதல் எளிதோ ஐயா!
வாரங்கள், மாதங்கள், ஐந்து வருடங்களாய்
முகத்தார் வீடு என்னும் விவசாய நாடகத்தை
ஒலிபரப்பிய உந்தன் மகத்தான சாதனை
முறியடிக்கப்படாமல் இன்றுவரை உள்ளதை
கூறாமல் இருக்கவும் முடியுமா ஐயா!

விவசாயக் குடும்பத்தை சார்ந்தவராயினும்
விவசாயத்தைப்பற்றி அரிவரிகூடத் தெரியாமல்
முகத்தார் வீடு நாடகத்தின் சாதனைக்காக
1982ல் ஜனாதிபதியின் கரங்களால்
விவசாயத் திணைக்களம் வழங்கிய
"விவசாய மன்னன்" என்னும் பட்டமும் விருதும் வழங்கி
நீவீர் கொழும்பில் கௌரவிக்கப்பட்டதை
எம்மால் இலகுவில் இன்றளவும்
மறந்திடத்தான் முடியுமா ஐயா!

இலங்கை வானொலியூடாக
ஞாயிறு கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில்
இளவாலைத் தமிழின் சிறப்பும், வனப்பும்
உலகமெல்லாம் ஒலித்ததை மறந்திடுவோமா?
தணியாத தாகம் முதல், அலைகளின் குமுறல்வரை
சாய்த கோபுரம் முதல், எரிமலை வெடித்தபோது,வரை
கடல் காற்று முதல், கன்னியின் காதல்,வரை
உந்தன் நடிப்பின் சிறப்பை மறந்திடுவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் மாப்பிள்ளை முதல், மாடிவீட்டு மரிக்கொழுந்து,வரை
புறோக்கர் பொன்னம்பலம் முதல், போச்சடி பத்தாயிரம்,வரை
பண்டாரவன்னியன் முதல், சண்டியன் சின்னத்தம்பி,வரை
ஐரோப்பாவில் களம் பல கண்ட உந்தன் நாடகங்களையும்
சிம்மக்குரலையும் மறந்திடுவோமா? ஐயா!

பாரிஸ் மாநகரை நல்ல தளமாகக் கொண்டு
இருபத்தி நாலு மணி நேரமும் ஒலிபரப்பாகும்
தமிழ் வானொலியின் கட்டுப்பாட்டாளராயிருந்து
தமிழ் அன்னைக்கு நீ செய்த சேவையை மறந்திடுவோமா?
சத்தியகீதை, புயல், தீமழையென...
ராஜாவின் ராகங்கள், இன்னுமொரு பெண்ணென்று
சின்னத்திரைகளில் சிறந்த நடிகனாய் வலம் வந்து
எண்ணற்ற ரசிகர்களை மகிழ்வித்ததைத்தான் மறந்திடுவோமா?

ஆயிரத்து தொளாயிரத்து எழுபதில் இருந்து
ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி ஏழுவரை
கொழும்பு பழைய மாணவர் சங்க நிர்வாக சபையில்
முதுபெரும் தூணாய் இருந்துகொண்டு
ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தைந்தில் -நாம்
அகில இலங்கை பாடசாலைகளின்
உதைபந்தாட்டத்தில் சம்பியனாகியபோது
கோட்டேல் ரப்ரபோனில் (Tabrabane) இரவு உணவு தந்தெம்மை
கௌரவப்படுத்தியதைத்தான் மறந்திடுவோமா ஐயா!

கென்றிஸ்டேக்கு மறுநாள் காலை
கொழும்பில் இருந்து வந்த எங்கள் பழைய மாணவர்கள்
ஒடியல் கூழ் குடிக்கவேண்டுமென பிடிவாதம் பிடிக்க
ஒரு நொடியில் ஆம் என்று ஆமோதித்து
நீங்களும், ஜெயபாலன் அண்ணாவும்
கப்ரன் அங்கிளும், இமானுவேல் மாஸ்ற்ரரும்
ராஜேந்திரன் அண்ணாவுடன் நானும்
மூன்று மோட்டார் பைக்கில்களில் பறந்துபோய்
சேந்தாங்குளத்தில் நண்டு, இறால், கணவாய் மீன்வகைகள்
கூடை நிறைய வாங்கிவந்து கொடுக்க
உங்கள் வீட்டில் இருந்த ஒடியல் மாவுடன்
உங்கள் வீட்டு வாளைக்காயுடன், மரவெள்ளிக் கிழங்கும் போட்டு
“அயறீன் அன்ரி” சுடச்சுட ஒடியல்க்கூழ் காச்சித்தர
உங்கள் வீட்டு மாமரத்துக்குக் கீழே
நாமெல்லாம் கதைச்சு சிரித்து சுவைத்துக் கொண்டு
ஒடியல்க்கூழ் குடித்ததைத்தான் மறந்திடுவோமா ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அறுபது வருடங்கள் கலைத்துறையில்
ஒரு முதிர்ந்த ஞானி! ஆயினும்
தலைக்கனம் இல்லாது பழகுவதில் ஒரு குழந்தை!
பாசத்தைக் காட்டுவதில் தாய்!
நட்புக்கு இலக்கணமான கர்ணன்!
எல்லாவற்றிற்கும் மேலாகி
யார் மீதும் கோபம் கொள்ளாத
ஒரு உயரிய பண்பாளர்!

பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்
இளவாலையம்பதியும், மக்களும்...
நீங்கள் கலையுலகில் கால் பதிக்க
கன்னிக்கால் நட்டுவைத்த
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும்
பழைய, புதிய மாணவ, மாணவிகளும்
இறைவன் உங்களுக்கு நீண்ட ஆயளைத் தரவேண்டுமென
வாயார, மனமார வாழ்த்துகின்றோம்.

**அன்புடன்**
**கவிஞர். அன்ரன்-செல்வக்குமார்**
**டோகா -கட்டார்**
**(25-07-2008)**

கவிஞர் செல்வக்குமார் அவர்கள் முகத்தார் அவர்கள்மீது அளவில்லா நேசம் கொண்டவர். முகத்தார் ஐயா அவர்கள் இந்தப் புத்தகத்தை எழுத ஆரம்பித்த காலத்தில் நான் அவரிடம் இந்தப் புத்தகத்திற்காக ஒரு வாழ்த்துக் கேட்டிருந்தேன். அப்பொழுது அவர் யேசுநாதரின் வாழ்க்கையை கவிதையில் எழுதிக்கொண்டிருந்தார். அப்படியான நெருக்கடியான நேரத்திலும் ஒரு வாரத்தில் இந்த வாழ்த்தினை எனக்கு அனுப்பியிருந்தார். சில மாதங்களின் பின்னர் என்னுடன் தொலைபேசியில் உரையாடும்போது "யேசு காவியத்தை எழுதி முடித்துவிட்டேன். கவிஞர் வைரமுத்து அவர்கள் வாழ்த்துரை தந்திருக்கின்றார், நூலாக்கும் பொறுப்பை யாழ் திருமறைக்கலா மன்ற இயக்குனர் பா.ஃ.தர் மரியசேவியர் அவர்கள் ஏற்றிருக்கின்றார்" என மகிழ்ச்சி பொங்க கூறினார். அதன்பின் சில தினங்களில் அவர் மாரடைப்பால் இறந்த செய்தியை முகத்தர் ஐயா எனக்கு அழுதபடி கூறுகின்றார்..... மறைந்த அந்தக் கவிஞனுக்கு என் இதயம் கனத்த அஞ்சலிகள்.

**வண்ணை தெய்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுரை! 5

# தேசம் விட்டு வந்தாலும் மண் வாசம் மாறாத கலைஞர்!

### கே.பிலோகதாஸ்.

நண்பர்கள் இருவர். ஒருவர் கனடாவில் வாழ்பவர், மற்ரவர் பிரான்ஸில் வாழ்பவர்.

இருவரும் ஊரில் வாழ்ந்த காலத்தில் ஈ.ஃ.பில் கோபுரத்தின் சிறப்பை பாடசாலைப் பாடப்புத்தகத்தில் படித்து, பிரமித்து அதிசயப்பட்டவர்கள்! அந்த உலக அதிசயத்தின் சிறப்பை நேரில்ப்பார்க்க ஆசைப்பட்டவர்கள்... (கூட)

பிரான்ஸில் வாழ்ந்துகொண்டிருக்கும் நண்பரிடம் கனடாவில் இருந்து விடுமுறைக்காக வந்த நண்பன் உலக அதிசயத்தில் ஒன்றான ஈபிள் கோபுரத்தை பார்க்க வேண்டுமென ஆசையோடு கேட்டான்.

பிரான்ஸில் வாழ்கின்ற நண்பன் சொன்னான் "மச்சான் நான் ஈ.ஃ.பிள் கோபுரத்திற்கு அருகிலுள்ள உணவு விடுதியில்த்தான் வேலை செய்யிறனான் தினமும் இரவிலை வேலை முடிஞ்சபிறகு பியர் குடிச்சிட்டுத்தான் வருவன். அப்படி வரும்போது சிலவேளையிலை அடக்கேலாமல் சிறுநீர் வரும். இந்த ஈ.ஃ.பிள் கோபுரத்திற்கு கீழைதான் டெய்லி சிறுநீர் கழிக்கிறநான். இதைப்போய்ப் பாக்கப்போறன் எண்டுநிக்கிறாய்" என்றான்.

அப்போ கனடா நண்பனது மனதிற்குள் இப்படியான எண்ணம் தோன்றியது..."முற்றத்து மலருக்கு மணம் இல்லையென சிலர் நினைப்பதுபோல எதுவும் கிட்டவாயிருந்தால் கிராக்கியில்லைத்தான்!"

என்னதான் இருந்தாலும் தான் சிறுநீர் கழிக்கும் இடமெனக்கூறி அதை சிறுமைப்படுத்த நினைத்தாலும் உலக அதிசங்களில் ஒன்றான ஈபிள் கோபுரத்தின் சிறப்பும், மதிப்பும், பெருமையும் எந்தவிதத்திலும் குறைந்து விடப்போவதில்லை.

இந்த சம்பவம் ஏன் சொல்லப்பட்டது என்பதை புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் நாம் பார்த்து பிரமித்த! ஏன்? பாக்க ஆசைப்பட்ட பல்துறைசார் ஆழுமையாளர்கள் பலர் புலத்தில் சிலரால் இப்படியாக அவமதிக்கப்படுவதை நினைத்து எங்கள் மனங்கள் வலித்ததுண்டு.

ஆனால் இப்படியான அவமதிப்புக்கள் எதனையும் சந்திக்காமல் அனைவராலும் இறுதிவரை மதிக்கப்பட்டு வாழ்ந்து மறைந்தவர் அமரர் "ஈழத்தமிழ்விழி" முகத்தார் எஸ்.யேசுறட்ணம் அவர்கள்.

அடுத்தவர் மனம் நோகாத பேச்சு, புறம் சொல்லாமை, பொறுமை, ஆழுமை, சகிப்புத்தன்மை, பிறர் நேசிப்பு, அன்பு, காரூண்யம், தட்டிக்கொடுப்பு இப்படியாக மனிதகுல பெருமை சேர்க்கும் அம்சங்கள் அனைத்தும் இவரின் தனிச் சிறப்பான அணிகலங்கள்.

இன்னும் சிறப்பாக சொல்வதனால் வித்துவக் காய்ச்சல் இல்லாத வித்துவான் எங்கள் முகத்தார் எஸ்.யேசுறட்ணம் ஐயா அவர்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஒரு அரங்கப்படைப்பை படைத்துவிட்டு இன்றுவரை அதுதான் புலத்தாரின் படைப்பின் உச்சம் என்று பெருமை பேசிக்கொள்ளும் ஒருசில நண்பர்கள் மத்தியில்....

இலங்கை வானொலியில் 263 வாரங்களாக நமது சமூகத்தின் சம்பவக் கூறுகள் பலவற்றையும் பதிவாக்கிச் சிறப்பித்தவர். இப்படியாக இன்னும் ஏராளமான சிறப்புக்களுக்குச் சொந்தக்காரரான இவர் தான் ஒன்றுமே சாதிக்காதவர் என்பதுபோல மௌனமாக வாழ்ந்து சென்றதுதான் மனிதப்பண்பின் உச்சம் என்று சொன்னால் அது மிகையானதல்ல!.

வானமே அண்ணாந்து பார்க்கும் அதிசய மனிதக் கலைஞன்!
தேசம் விட்டு வந்தாலும் மண் வாசம் மறவாக் கலைஞன்!
முத்தமிழை மூச்சுக் காற்றாய்க் கொண்ட முகத்தார் எஸ்.யேசுறட்ணம் அவர்கள் இன்றைய தலைமுறைக் கலைஞர்களுக்கெல்லாம் முன்மாதிரியானவர்.... வாழ்க முகத்தார் யேசுறட்ணம் அவர்களது புகழ் உலகமெல்லாம்...!

ஓராண்டு நினைவில் வெளிவரும் எங்கள் முகத்தார் அவர்களின் "நீயும், நானும்" என்னும் நூல் மூலமாக அவரது வரலாற்றுப் பதிவை வெளிக்கொணடுவர உழைக்கும் அனைவருக்கும் எனது மரியாதைக்குரிய வணக்கங்கள்.

**அன்பிற்கினியவன்**
**கே.பி.லோகதாஸ்**
**ஊடகவியலாளர், பல்துறை ஆர்வலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புரை...

# இலங்கை வானொலியில் இணைந்த நாங்கள் கலையுலகில் இரட்டையர்கள் ஆனோம்!

## 'அப்புக்குட்டி" ரி.ராஜகோபால்.

எனது இனிய ஆயட்கால நண்பன் யேசுறட்ணம் அவர்களின் கலைப் பயணத்தில் இணைந்து பயணித்த கலைஞர்களின் பிரபலங்களடங்கிய தொகுப்பாக அவரது கைவண்ணத்தில் பதிவாகும் இந்த நூலுக்கு அனுசரணை வழங்கும் கலைத்துறை நண்பர்களுக்கு முதலில் எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

நட்பிற்கு இறுதிவரை உண்மையான கௌரவம் செய்தவர்கள் வரிசையில் எனக்கும், யேசுவிற்கும் எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த அற்புதமான நட்பு என்ற பந்தம், பிணைப்பு அதிசயமானது!, ஆழமானது!, அசைக்க முடியாதது!, அழிக்கமுடியாதது! உணர்ச்சி மேலிட்டு சொல்கின்றேன். ஒரு சிலருக்கே இத்தகைய உறுதியான, அபூர்வமான, நெஞ்சைவிட்டு அகலாத நட்பு அமைந்து விடுவது, எல்லாம் வல்ல இறைவனின் வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும்! சொல்வதென்ன? உண்மையும் அதுதான்!.

நானும் யேசுவும் முதன் முதலில் சந்தித்துக்கொண்டு உரையாடிய அந்த நன்நாளை இரைமீட்டிப் பார்க்கின்றேன். (என்ன யேசுவுடன் உரையாட முடியுமா? என நீங்கள் வியப்பது எனக்குப் புரிகின்றது! ஆம் நான் குறிப்பிடுவது ஆண்டவர் யேசுவை முழுமையாக நேசிக்கும் எனது நண்பன் யேசுறட்ணத்தைத்தான்!

கல்லூரி நாடகங்கள், வினோத உடைப் போட்டிகளென பங்குகொண்டு பரிசில்களைப் பெற்ற எனக்கு உலகப்புகழ் பெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு கலைஞனாக இணைந்துவிட வேண்டுமென்ற எனது நீண்ட நாள் கனவு நனவாகி தேர்வுக்கான அழைப்பு வந்த அந்த நன்நாள் 26ம் திகதி ஆடி மாதம் 1966ம் ஆண்டு

அன்று மிகுந்த மகிழ்ச்சியும், பதட்டமும் நிறைந்த உணர்வுடன் தேர்வு நடைபெறும் ஒலிபரப்புக் கூட்டுத்ஸ்தாபன கலையகத்துக்கு முன்னால் நான் காத்திருந்த வேளை கருணையே வடிவமான ஒரு முகம் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தது. பதிலுக்கு நானும் சிரித்து கைலாகு கொடுத்து அறிமுகம் செய்து கொள்கின்றோம். அன்று ஆரம்பமான எங்கள் நட்பென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் நீண்டு, நெடுந்தூரம் விரிந்து, வளர்ந்து நாம் புகழ்பெற்ற நாடகங்களில் நடித்த பாத்திரங்களின் பெயரான "முகத்தார்" "அப்புக்குட்டி" என மிகவும் நெருக்கமாகியது.

அன்றையதினம் நடிகர் தேர்வில் வானொலியில் தெரிவு செய்யப்பட்ட எங்களை அடைமொழியான முகத்தார், அப்புக்குட்டி, என அழைப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்ளும் ரசிகர்களும். தொடர்ந்து நாம் பங்களிப்புச் செய்த மேடை, திரைப்படம், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களினால் ஈர்க்கப்பட்டு எம்மை கலைத்துறை இரட்டையர்களென அழைப்பதுவும் நெஞ்சம் நிறைந்த திருப்தி.

இலங்கையில் ஆரம்பமான எங்கள் நட்பு பரந்து, விரிந்து குடும்ப உறவாக ஆத்மார்த்தமாக வளர்ச்சி பெற்று இன்று புலம் பெயர்ந்து பாரீஸிலும் அன்பும், மரியாதையும் நிறைந்து தொடர்கின்றதும் பிராப்தமென்றே சொல்லலாம்.

நல்ல கல்விப் பின்னணியும், அதிகார மட்டதிலான அரசாங்க தொழில் வாய்ப்பும், நற்பண்புள்ள பெற்றோரும், அன்பான மனைவியும், பெற்றவரை நேசிக்கும் குழந்தைகளுமென நிறைவான வாழ்க்கை அமைந்த ஒரு மனிதநேயம் கொண்ட நண்பன் யேசு எனக்கு நெருங்கிய நண்பனாகவும், பக்கபலமாகவும் அமைந்திருந்ததுவும் நான் பெற்ற பாக்கியம்!.

இந்த ஆயுட்கால நண்பனுடன் கலைத்துறையில் மட்டுமல்லாது நிஜ வாழ்க்கையிலும் இணைந்திருந்த பெருமையுடன் அவரது நீண்ட அமைதிக்கும் நிறைவான மகிழ்விற்கும் இறைவனை வேண்டி இந்த நூல் சிறப்பாக அமைய நெஞ்சார வாழ்த்தி நிமிர்ந்து நிற்கின்றேன்

**அன்புடனும், பிரியமுடனும்**
**உனது ஆயுட்கால நண்பன்**
**அப்புக்குட்டி ரி.ராஜகோபாலன்**



முகத்தார் வீட்டு இல்ல விழா ஒன்றில் நண்பர்கள் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை வென்ற முகத்தார்!

## “கலாநிதி” கல்லாறு சதீஸ்

“முகத்தார்” என்னும் வார்த்தை காதுகளில் கடக்கையில் எனக்குள் ஏனோ எப்போதும் சங்கீதம் ஒலிக்கும்! காதல் கொள்ளும் பருவத்தில், காதலி இல்லாத காலத்திலே, இலங்கை வானொலியை அணைத்திருக்கையில், “முகத்தார்” அடிக்கடி ஒலித்து உள்ளத்தையும் உணர்வையும் நிறைத்தவர்.

வானலைகளில் ஒலிக்கும் குரல் விண்ணில் இருந்து மண் வரும் குரலாகவன்றி, தேவலோகத்தில் இருந்து வீடு வரும் குரல்களாக பரவசப் பிரபஞ்சத்தில் நான் கழித்த காலங்களில் “முகத்தார் எஸ்.யேசுறட்ணம் என்னும் நாமம். எனது இதயத்துக்குள்ளும் அவரை நட்சத்திரமாய் இருத்திப்போனது.

கனவுகள் நிஜமாவது எனது வாழ்வில் பலமுறை நடந்தேறியுள்ளது! அப்படி என் பதின் பருவத்தில் நான் பார்த்து மகிழ ஆசைப்பட்ட முகத்தார் எஸ்.யேசுறட்ணம், அப்புக்குட்டி-T. ராஜகோபாபல், B.H. அப்துல் ஹமீட், போன்ற கலைஞர்களுடன் மேடைகளில் அமரவும். அவர்களுடன் நேரிலே பேசி மகிழவும், அவர்களின் இதயங்களில் உறவாடவும், வாய்ப்பாக அமைந்த இந்தப் புலம்பெயர் வாழ்வை நாம் வரம் என்பதா!? சாபம் என்பதா!? நன்றாகக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் புலம்பெயர் வாழ்வு எமக்கு வரம்தான்

ஒருமுறை எனது துணைவியாருடன் பாரிஸ் வந்திருந்தபோது எனது மதிற்பிற்குரிய நண்பர் வண்ணை தெய்வம் அவர்கள் முகத்தார் ஐயாவின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த வேளையிலே முகத்தார் ஐயா தனது பாரியாருடனும், குடும்பத்தினருடனும், எம்மை வரவேற்று உபசரித்த அன்பு இன்னமும் எமது இதயங்களுக்குள் பொக்கிஷமாக இருக்கின்றது. ஆனால் எம்மை வரவேற்று உபசரித்தவர்களில் ஒருவரான ஐயா முகத்தார் அவர்களின் பாரியார்தான் இன்று உயிரோடு இல்லை. ஐயாவின் மனைவியின் மரணச் செய்தி இன்னமும் எங்கள் இதயத்திற்குள் உறைந்து கிடக்கின்றது.

வாழ்வும் மரணமும் இயற்கையே! இவ்விதியை நன்குணர்ந்த ஐயா முகத்தார் அவர்கள் முன்னமே தனது படைப்புக்களில் சிலவற்றை நூலாக வெளியிட்டிருந்தாலும் இப்பொழுது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிக்கொண்டிருக்கும் அவரின் கலை வாழ்வு பற்றிய "நானும் நீயும்" என்னும் நூலை படித்துப் பயன்பெற பட்டறிவு பெற்ற மகா கலைஞனின் வாழ்வு அனுபவத்தை சுவைப்பதற்காக அன்றி படிப்பதற்காகவும் காத்திருக்கின்றேன்.

"முகத்தார் எஸ்.யேசுறட்ணம்" என்னும் காந்தர்வக் குரலோன் உலகத் தமிழர்களின் இதயங்களில் தனது கலைப் பயணத்தால் மணம் செய்துகொண்டிருக்கும் பொக்கிஷத் தமிழோன் எல்லோர் மனங்களிலும் நினைவுகளிலும் வாழவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

என்றும் கனிந்த அன்புடன்
**கல்லாறு சதீஸ்** (சுவிஸ்)
**27-09-2008**



"கலைமாமணி" விருது கிடைத்தபோது அமரர் கீழ்க்கரவை பொன்னையன், முகத்தார், "கலைமாமணி" பெஞ்சமின்-இமானுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**FORMER DIRECTOR**
**(TAMIL SERVICES)**
**SRI LANKA BROADCASTING CORPORATION**

**Mrs P. Kulasingam**
**Unit 2/40 King Street**
**Dandenong VIC 3175**
**Melbourne (03)97915508**

I have known Mr.S.Jesuratnam here the onset of his career. He has always been an unmatched artiste and proved himself to be a rare job. The officers of Radio Ceylon used his expertise without limitation.

He wrote dreams as that captured the audienceshere start to finish. They incorporated all incidents that related to everyday life. MuhatharVeedu and Kathambam were the most popular. The former went on for 268 weeks but the listeners were not saturated. He held their interest in jobs of laugher here beginning to end. Since he also took a leading role in his dramas it added extra luster. He has a natural humorous tent in his voice which makes him an unique character. His artistic pursuits have been tabled in his book. Besides, so many titles and accolades have been earned in all the countries he has performed. That alone speaks for itself.

As the Director Tamil Service I always believed that a talented artist is God's gift and did all I could to promote their Mr. Jesuratnam was no expectation. As always I wish Mr. Jesuratnamas a born talented artist the very best in his future creations too.

**Ponmani-Kulasingam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

# எங்கள் பப்பா.....

### திருமதி.கலா-லோகநாதன் (முகத்தார் அவர்களின் மூத்த மகள்)

எங்கள் மம்மியின் மறைவிற்குப் பின் பப்பாவின் ஒரே ஆசை, குறிக்கோள் இப் பதிவை எழுதி முடிப்பதுதான். ஒருமுறை வைத்திசாலையில் இருக்கும்போதுதான் இதனை எழுதவே தொடங்கினார்.

கண் பார்வை குறையவும் எழுத்தை நிறுத்திவிட்டுப் பார்வையை மீட்டெடுக்கப் பல வழிகளிலும் முயன்று முடிவில் சத்திரசிகிச்சைக்கும் உடன்பட்டார். என்னிடம் அடிக்கடி "மகளே என் பார்வை முன்பு மாதிரி மீண்டும் வருவதற்கு நீதான் உதவவேண்டும். என் கையால் நான் மீண்டும் எழுதவேண்டும்" என்று கூறுவார். ஆனால் இறைவன் போட்ட கணக்கோ வேறுவிதமாக முடிந்துவிட்டது.

அவரது கண்பார்வையை எழுதுவதற்குத்தான் மீட்டுக்கொடுக்க முடியவில்லை ஆனால் பார்ப்பதற்கு முடிந்தது. அவரது கடைசி ஆசையான இந்த மலரை மலர்விற்பதற்காக அவரை நேசித்தவர்கள் எடுக்கும் முயற்சியில் நானும் பங்குகொண்டு மறக்கமுடியாத, புதைந்துபோன, வசந்தகாலக் கோலங்கள் சிலவற்றிற்கு உயிரூட்ட விளைகின்றேன்.

எங்களின் இளமைக்காலம் எனும்போது எனது நினைவில் வருவதெல்லாம் இளவாலை வீடு, இளமையான பப்பா, மம்மி, பார்ப்போர் மனதையெல்லாம் பக்திப் பரவசமூட்டும் நமது அன்னம்மாள் ஆலயம், எங்கள் ஊரின் இரு கண்களான புனித ஹென்றியரசர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மட மகளீர் பாடசாலை. இவற்றை மையமாக வைத்து ஊருடனும், உறவுகளுடனும் பின்னிப் பிணைந்த நம் வாழ்க்கை. கவலைகள் அற்ற கஸ்ரறங்கள் புரியாத மகிழ்ச்சிகள் நிறைந்த காலமது.

நமது வசந்த காலத்தை அசைபோடும் முன்பாக முகத்தாரின் முத்தான காலம் பற்றிய ஒரு சிறு மேலோட்டம்.

பப்பாவின் தந்தையார் ஒரு வியாபாரி. தாயாரும் அவரது சகோதரியாரும் தலைமை ஆசிரியர்கள். தாயாரின் சகோதரர் இவரும் ஒரு ஆசிரியர் கத்தோலிக்க சமய தொண்டிற்காகத் தன்னை அர்ப்பணித்தவர். இவர்கள் எல்லோரினதும் உதயசூரியன் எங்கள் பப்பாதான்!

பப்பாவின் தந்தையார் வியாபாரம் காரணமாக அடிக்கடி வெளியூர்களுக்குப் பயணம் செய்வதனால் பப்பாவின் இளமைக்காலம், இவர் நடை பயின்றது எல்லாம் இவர் தாயார் கடமையாற்றிய பாடசாலையின் வகுப்பறைகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வகுப்பறையிலும் சென்று தனது இஸ்றரம்போல் அமரும் இச் சிறுவனை யாரும் கண்டுகொள்வதில்லை! ஆனால் அச் சிறிய மூளையோ அங்கு பேசப்படுவதையெல்லாம் கிரகித்துக்கொண்டே இருந்தது! அந்தக் காலங்களில் கல்வி இலாக்காவிலிருந்து அதிகாரிகள் (பரிசோதகர்கள்) பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மாணவர்களை பரிசோதிப்பது வழக்கம். ஒருநாள் இவரின் தாயார் கடமையாற்றிய பாடசாலைக்கு விஜயம் செய்த பரிசோதகர்கள் மாணவர்களிடம் கேள்வி கேட்க அந்தக் கேள்விக்கு ஒரு மூலையிலிருந்து சின்னக்குரலொன்று பதிலளிக்க, வகுப்பாசிரியரோ பேசவேண்டாம் எனச்சைகை காட்ட, பரிசோதகரோ "ஏன் தடுக்கின்றீர்கள் அச் சிறுவன் சரியாகத்தானே பதிலளிக்கின்றான்" என்று கேட்க, ஆசிரியரோ "அவன் இவ்வகுப்பு மாணவன் அல்ல தலைமை ஆசிரியையின் மகன் வீடு பக்கம்தான் இங்கு வந்து விளையாடிக் கொண்டிருப்பான்" எனக்கூற, "ஏன் பள்ளியில் சேர்க்கவில்லை " என்ற கேள்வி எழ, "வயது போதாது" எனப் பதில் வர, "அதனால் என்ன அவனது மூளை நன்றாகக் கிரகித்துக் கொள்கின்றது, நீங்கள் பாடசாலையில் சேர்க்கலாம்" என்று அனுமதி வழங்கப்படவும் இவர் அன்று முதலே மாணவனாகி தனது பதினாறு வயதினில் இளவாலைப் புனித கென்றியரசர் கல்லூரியில் ஆசிரியராகவும் பதவியேற்றார்.

பப்பாவை நினைக்கும்போது என் கண்முன் தெரிவதெல்லாம் அவரது கம்பீரமான தோற்றம், கறுத்த அலையலையான அடர்ந்த சுருள்முடி, அகன்ற நெற்றி, அதில் முத்து முத்தாக அரும்பும் வியர்வைத் துளிகள், அன்பு ததும்பச் சிரிக்கும் கண்கள், அறிமுகமில்லாதவர்களைச் சற்று பின்னடையச்செய்யும் கட்டப்பொம்மன் மீசை, அகன்ற தோள்கள், திறந்த மேனி, கழுத்திலிருந்து பொக்கிள்வரை நீண்டிருக்கும் தங்கச் சங்கிலி, மம்மியின் உபசரிப்பால் மெருகேறிய ஒரு செல்ல வண்டி, (வயிறு) மொத்தத்தில் பலரும் பார்த்து ரசித்த ஒரு ஆணழகன் அவர்.

இவர் கொண்டவளோ அழகுப்பதுமை! அன்பின் கடல்! பொறுமையின் சிகரம்! இவர்கள் இருவரினதும் ஜோடிப் பொருத்தத்தைப் பற்றி பேசாதவர்களே இல்லையாம் அந்தக் காலத்தில்!

பொருத்தம் மனதிலும் வேண்டும், புரிந்தவர் துணையாக வேண்டும். பப்பாவினது குடும்ப வாழ்வு, கலை வாழ்வு இரண்டுமே வெற்றிகரமாக அமைந்ததென்றால் அதற்கு எல்லாவற்றுக்குமே வளைந்து கொடுத்தும், பக்கபலமாகவும், இருந்த மம்மியும் ஒரு முக்கிய காரணமாகும்.

எங்கள் பப்பா வளர்ந்த விதம்! எங்களை வளர்த்த விதம்! பொது வழக்கத்தைவிட கொஞ்சம் வித்தியாசமானது! பப்பா, மம்மி இருவருமே தங்கள் தாய் தந்தையர்க்கு ஏக புதல்வர்கள். பிள்ளையை அடித்து வளர்க்க வேண்டும், முருங்கையை முறித்து வளர்க்க வேண்டும், அன்பு நெஞ்சிலேயும், கம்பு கையிலேயும் இருக்கவேண்டும் என்னும் முதியோர் கூற்றுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது அகராதியில் இடம்பெறவில்லை! பப்பாவின் பெற்றோர்களோ கடும் வார்த்தைகளைக்கூட உபயோகிக்க மாட்டார்கள்.

குறும்பு செய்யாத சிறுவர்களே இருக்கமுடியாதல்வா? சிறுவர்கள் பெரியவர்களாக சிறு குறும்புகளும் பெரும் குறும்புகளாகும்! பருவமோ வெளியுலகை அறியும் பருவம்! புது உறவுகளைத் தேடும் பருவம்! வீட்டின் கட்டுப்பாடுகளைத் தாண்டும் பருவம்! இதற்கு முகத்தார் மட்டும் என்ன விதிவிலக்கா? ஒருமுறை கோவில் திருவிழாக் காலத்தின்போது நள்ளிரவு நேரம் நண்பர்களோடு சின்னமேளம் பார்க்கச் சென்றிருக்கின்றார். இதை எப்படியோ அவதானித்த அவரது தந்தையார் மறுநாள் இரவு நண்பர்களின் விசில் சத்தம் கேட்டவுடன் படுக்கையில் இருந்து எழுந்து பதுங்கி சென்ற மகனை தானும் பின்தொடர்ந்திருக்கின்றார். சின்னமேளம் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பின்னாலிருந்து பலத்த குரலில் யாரோ உரையாடுவது பப்பாவின் காதுகளில் எட்ட அதேநேரம் இது நன்றாகப் பழகிய குரலாயிற்றே என்று திரும்பிப்பார்க்க இவரின் தந்தையாரோ இவர்களைக் கவனிக்காதவர்போல தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்க பப்பா மெல்ல நழுவி வீட்டிற்கு வந்து படுக்கையில் விழுந்தவர்தானாம்! மறுநாள் காலையில் வழமைபோல முட்டைக்கோப்பி சகிதம் தந்தையாரே வந்து துயில் எழுப்பினாராம் இவரும் ஒன்றும் தெரியாதவர்போல கோப்பியை வாங்கிக் குடித்துவிட்டு அன்றிலிருந்து இரவுச் சுற்றுலாக்களையே மறந்துவிட்டாராம்.

சாதாரணமாக வேறு குடும்பங்களில் என்றால் அந்த இடத்திலேயே வைத்து பிடரியைப்பொத்தி இரண்டு கொடுத்ததோடு நிற்காமல் சாமம் சாமமாய் இவரின் கூட்டாளிகளின் வீடுகளுக்கும் போய் விசயத்தைக் கூறி விளக்கம், விசாரணை, தண்டனை என்று நீடித்திருக்கும். அப்படி நடந்திருந்தால் தப்புகளும் தொடர்ந்திருக்கும்!

எங்கள் வீட்டிலோ நாங்கள் ஐவர். தொல்லைகள் எல்லை மீறும்போது மம்மியின் சத்தமும் கொஞ்சம் பலமாகவே வரும். உடனே பப்பா எல்லோரையும், முக்கியமாக எனது தம்பிகளைக் கூப்பிட்டு முழங்காலில் இருத்துவார். இதைத் தாங்கிக்கொள்ள முடியாத பப்பாவின் தந்தையாரோ தானும் வந்து இவர்களுடன் முழந்தாள் படியிட, இக் காட்சியைக் கண்டு பொறுக்க முடியாத எங்கள் பப்பா தண்டனையை ரத்து செய்ய அப்புவும் எதுவும் பேசாமலேயெ சென்றுவிடுவார்.

இல்லறவாழ்வில் இணைந்து ஆறு வருடங்கள் கழிந்த பின்பே நான் பிறந்தேன். பிறந்தும் நான்கு வருடங்கள் தனியாட்சியே. முத்துக்கு முத்தாக, கண்ணுக்கு கண்ணாக, இதனாலோ என்னவோ என்மேல் அழவு கடந்த பிரியம். எனக்கு ஆறு வயது ஆகும்வரை நாங்கள் கொழும்பில்த்தான் வசித்துவந்தோம். பப்பா ஒரு மோட்டார் சைக்கிள் பிரியர். தினமும் அலுவலகத்திற்கு அதில்த்தான் செல்வது வழக்கம். நானோ சிறுபிள்ளை. மோட்டார்ச்சைக்கிள் சத்தம் கேட்டதும் பப்பா வருகின்றார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொண்டு வாசலுக்கு ஓடிச்சென்று வரவேற்பது வழமை. ஒருநாள் வழமைபோல பப்பா வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே செல்ல நான் ஒரு துணியை எடுத்துவந்து பப்பா செய்வதைப்போல வண்டியைத் துடைக்க சூடான வாகனம் என்ன செய்யும்? எனது கைகள்தான் பலி! என்னுடைய தவறுக்கு பப்பாவே தண்டனையை அனுபவித்துக்கொண்டார்! எப்படித் தெரியுமா? அன்றிலிருந்து பப்பா மோட்டார் சைக்கிலை தொடுவதே இல்லை! அந்த ஆசையையே கைவிட்டுவிட்டார். ஆம் பிள்ளைகளைவிட அவருக்கு எதுவுமே பெரிதாக இருந்திருக்கவில்லை.

சொந்த ஊரில் தான் படித்த, படிப்பித்த பாடசாலையிலேயே நாங்களும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகவே எங்களை ஊருக்கு அனுப்பிவிட்டார். தான் மட்டும் கொழும்பில் தனியாகத் தங்கிவிட்டார். பொதுவாக கொழும்பில் வேலை பார்க்கும் குடும்பஸ்த்தர்கள் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டுமுறை அதுவும் முக்கியமான பண்டிகைகளை முன்னிட்டுத்தான் ஊருக்கே வருவார்கள். ஆனால் பப்பாவோ ஒவ்வொரு வார விடுமுறைக்கும் தவறாமல் வந்துவிடுவார். சனி காலையில் வந்து மீண்டும் ஞாயிறு மாலையில் புறப்படும் இவர் சில சமயங்களில் ஞாயிறு காலையில் வந்து மீண்டும் ஞாயிறு மாலையே புறப்படுவதும் உண்டு!

இவரது வருகையை நாங்கள் மட்டுமல்ல ஊரில் பலரும் எதிர் பார்த்திருப்பார்கள். தபால் அட்டைகளைக் கட்டுக்கட்டாகத் தன் கைவசம் வைத்திருக்கும் இவர் தான் வரும் நாள், நேரம் என்பவற்றை எங்களுக்கு மட்டுமல்லாமல் ஊரில் பலருக்கும் தெரியப்படுத்திவிடுவார். இதனால் பப்பா வீடு வந்து சேர்வதற்கு முன்பதாகவே ஒருசிலர் 'மாஸ்ற்ரர் வந்துவிட்டாரா" என்று கேட்டபடியே படையெடுக்கத் தொடங்கிவிடுவார்கள். ஏனென்றால் இவர் ஒரு உள்நாட்டுத் தூதுவர்! எல்லா அராசாங்க அலுவலகங்களும் கொழும்பில் அமைந்துள்ளமையால் சாதாரண குடும்ப்ஸ்தர்கள் கொழும்பிற்குச் சென்று வருவதானால் போக்குவரத்துச் செலவு, அங்கு தங்குமிட வசதி, இவர்களைக் கூட்டிச்சென்று அங்கு அலுவல் பார்க்க ஆள்த்துணை, என்று இப்படி ஏகப்பட்ட சிரமங்களையெல்லாம் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் நிவர்த்திசெய்யும் ஒரே நபர் எங்கள் பப்பாதான்.

"தம்பி ஊதியப்பணம் வரவில்லை" என்போர், "வேலைமாற்றம் வந்திருக்கு ரத்துசெய்ய வேண்டும்" என்போர், "வேலைமாற்றம் வேண்டும்" என்போர், "மகனிடமிருந்த கனநாளாகக் கடிதம் வரவில்லை ஒருக்கா விசாரிச்சுச் சொல்லு தம்பி" என்போர், கொழும்பில் வசிக்கும் பிள்ளைகளுக்கு மிளகாய்த்தூள், அரிசிமா, முருக்கங்காய் என்று கொடுத்துவிடுவோர் இப்படியாக ஒவ்வொருவருடைய தேவைகளும் வகைவகையாக இருக்கும். பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்! இறைவனும் எங்களை நிறையவே ஆசீர்வதித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பாவின் இறுதிச் சடங்கின்போது அவரின் நண்பர் ஒருவர் கூறினார் "இவர் வாழ்நாளில் ஒரு எதிரியைக்கூட சம்பாதிக்கவில்லையென்று. ஆம் எங்கள் பப்பா பிரச்சனைகளைப்பற்றி சிந்திப்பதும், பிரச்சனைகளை கையாள்வதும் வித்தியாசமானதாக இருக்கும்! எனக்கு ஒரு பதின்மூன்று வயதிருக்கும் நான் இளவாலையிலிருந்து பெரியவிளானுக்கு மம்மியின் தாய் தந்தையர் வீட்டிற்கு சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது வீதியோரமாக நின்று கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் நான் வருவதைப் பார்த்த பின்னரும் தொடர்ந்து வீதியில் கற்களைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருகல் எனது சைக்கிலின் முன் சில்லில் படவே நான் சைக்கிளை நிறுத்தி அவர்களை கோபமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு பப்பா இன்று வீட்டில்த்தானே நிக்கின்றார் அவரிடம் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நினைத்தபடி சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வீட்டிற்கு வந்து பப்பாவிடம் நடந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் முளங்கித் தள்ளினேன். பப்பாவோ ஆத்திரப்படாமல் சிரித்தபடியே கேட்டுக்கொண்டு நின்றார்! எனக்கு பப்பாமீது ஆத்திரமாகவும், அதேநேரம் ஆச்சரியமாகவும் இருந்தது! அந்த நேரம் வீட்டு வாசலில் "மாஸ்ற்ரர், மாஸ்ற்ரர்" எனக் கூப்பிடும் சத்தம் கேட்டது. கூப்பிட்டவர்கள் வேறு யாரும் அல்ல எனக்குக் கல்லால் எறிந்தவர்கள்தான்! அங்கு நின்றுகொண்டிருந்தார்கள்.

சரி இதுவும் நல்லதிற்குத்தான், வலியவந்து மாட்டிக்கொண்டார்கள் நன்றாக வாங்கிக்கட்டட்டும் என்று கொஞ்சம் அமைதியடைய பப்பாவோ அதே சிரிப்புடன் "வாங்கோ தம்பியவை இருங்கோ, வெய்யிலுக்குள்ளாலை வந்தநீங்கள் என்ன குடிக்கிறியள்? மம்மி குடிக்கிறதுக்கு குளிரா ஏதும் கொண்டுவாரும் என்று சொல்லி உபசரிக்கின்றார். எனக்கோ எதுவும் புரியவில்லை! அவர்கள் தயங்கியபடி "மகள் வந்து என்ன சொன்னவவோ தெரியவில்லை, நாங்கள் இவ வந்ததைக் கவனிக்கேல்லை சும்மா றோட்டிலை இருந்து கதைச்சுக்கொண்டு இருந்தநாங்கள் நாங்கள் தூக்கிப்போட்ட கல்லொன்று பிள்ளேன்ரை சயிக்கில் சில்லிலை பட அவ எங்களைக் கோபமா பாத்திட்டு சயிக்கிளைத் திருப்பிக்கொண்டு வந்திட்டா, எங்களுக்கு கவலையாப் போட்டுது. அதுதான் நாங்கள் உங்களை நேரிலை பாத்துச் சொல்லிப்போட்டு போவம் எண்டு வந்தநாங்கள்" என்று கூற பப்பாவும் "தம்பியவை நான் உங்களை தப்பா நினைக்கேல்லை, நினைக்கவும் மாட்டன். நானோ கொழும்பிலை இருக்கிறன். இஞ்சை என்னுடைய மகள் வீதியிலை போகும்போது ஏதாவது ஆபத்து, அல்லது பிரச்சனையள் வந்தால் முதல்லை ஓடியாறதும், கை,கொடுக்கப் போவதும் நீங்கள்தானே. பாக்கப்போனா அவள் வீட்டைவிட்டு வெளியில் வீதியிலை போகும்போது நீங்கள்தான் அவளுக்கு காவல்! அந்த நம்பிக்கையிலைதான் நானும் இவையளை இங்கை விட்டிட்டு கொழும்பிலை வாழுறன்." என்று கதையை முடித்துவிட்டார். பின்பு என்னைப்பார்த்து "பிள்ளை ஆத்திரப்படாமல் நிதானமாக யோசிச்சுப்பார் பிரச்சனை எடுத்தால் அது வளர்ந்துகொண்டே போகும். நீயோ பெண்பிள்ளை அது உனக்கு ஆபத்தாகவும் முடியலாம்! நட்புக்கரம் நீட்டு நீ மீண்டும் சென்றுபார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு எல்லாமே புரியும்" என்றார். மறுநாள் நான் அவ்வழியாகச் செல்லும்போது அவர்கள் நின்றார்கள் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஒரு சிரிப்பு சிறு தலையசைப்பு, நாளடைவில் எனக்குப் பக்கபலமாகிவிட்டார்கள்!

இந்த விடயத்தை நான் சற்று வித்தியாசமாகச் சிந்தித்துப் பார்த்தேன். அன்று பப்பா வீட்டில் இல்லாமல், நானும் சைக்கிளை வீட்டிற்குத் திருப்பாமல் நேரே சென்று மம்மியின் தந்தையிடம் பிரச்சனையைக் கூறியிருந்தால் எடுத்த எடுப்பில் துவக்கைத் தூக்கும் அவர் துவக்குடன் அவர்களை நோக்கி வந்திருந்தால், பிரச்சனைகள் திசைமாறி விபரீதத்தில் முடிந்திருக்கும். "கல்லுக்கு கல்லு, பல்லுக்கு பல்லு" என்பது அவர் வாதம், "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்பது இவர் வேதம்!

என்னதான் பப்பாவைச் சுற்றி எப்பொழுதும் நண்பர்கள் , உறவினர்கள் என்று பலர் இருந்தாலும் அவர் வீட்டில் இருக்கும்போது பிள்ளைகள் எல்லாம் அவரின் முன்னால் நிற்கவேண்டும். ஒவ்வொரு கிழமையும் வரும்போது மூலிகைகள் போட்டுச் சுட வைத்த நல்லெண்ணையை எங்கள் தலையில் வைத்துத் தப்பி எங்களைக் குளிப்பாட்டுவது முதல் எங்களுக்கு உணவு ஊட்டிவிடுவதுவரை எல்லாமே செய்வார். பிள்ளைகளுக்கு, பிள்ளைகளுக்கு என்று தானே சந்தைக்குப்போய் எல்லாவிதமான உணவுவகைகளையும் வாங்கி வருவார். ஒருபக்கம் மீனைப்பொரித்து தட்டில் வைக்க அடுத்தகணம் பப்பா அதை எங்கள் எல்லோரினது வாயிலும் ஊட்டிக்கொண்டே இருப்பார். நாங்கள் விளையாட வேண்டுமா? எதற்கும் தடயில்லை. கிணற்றில் தண்ணி அள்ள மட்டும்தான் சிறியவர்களுக்குத் தடை.

Table tennis, Batminton, Cards , கரம்போட், இப்படி எல்லாவிதமான விளையாட்டு உபகரணங்களும், அதற்குரிய இடங்களையும் செப்பனிட்டு நாங்கள் எங்கள் நண்பர்களுடன் விளையாட எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்திருப்பது மட்டுமல்ல சில சமயங்களில் தானும் எங்களுடன் சேர்ந்து விளையாடுவார்! அதே நேரம் ஊரோடு ஒத்து எல்லோரையும் போலத்தான் வாழவேண்டும், வசதியிருக்கு என்பதற்காக எங்களை வித்தியாசப்படுத்திக் காட்டக்கூடாது என்பதில் கண்டிப்பானவர்.

என்னிடம் வெளிநாடுகளிலிருந்து வந்த உறவினர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த நவீன உடைகள் இருந்தன. ஆனால் அவற்றை ஊரில் போடுவதற்கு ஒரு காலமும் அனுபதிப்பதில்லை. ஒவ்வொரு பாடசாலை விடுமுறைக்கும் கொழும்பு, கண்டி இப்படி வெளியூர்களுக்கு போகும்போது நீ ஆசைதீர அணிந்துகொள். ஊரில் எப்போ மற்றவர்களும் இப்படியான மேல்நாட்டு உடுப்புக்களை அணிகின்றார்களோ? அப்பொழுதுதான் நீயும் அணியலாம் என்று ஒரேயடியாகத் தடைவிதித்தார். அவர் பக்கம் இருந்த நியாயத்தையிட்டுப் பெருமைப்பட்டுக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீடு, தனது பிள்ளைகள் என்பதைத் தாண்டி தனது ஊர், தனது பாடசாலைகள், என்று அவரது குடும்பம் விசாலமானது. பாடசாலைகளில் என்ன விழாக்கள் நடந்தாலும் பப்பா அங்கே முன்நிற்பார். எங்களை மட்டுமல்லாமல் எல்லோரையும் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பார். ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் நடைபெறும் புனித ஹென்றி அரசர் திருநாளை எவருமே மறக்கமுடியாது. ஊரே விழாக்கோலம் கொள்ளும் பெருநாளது! கல்லூரியின் பழைய மாணவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும், முக்கியமாக கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் (கொழும்புக் கிளை) முதல்நாளே வந்து விடுவார்கள். இளவாலைக்குள் எங்கு சென்றாலும் வீடுகள், வீதிகளெல்லாம் ஒளிமயமாகவும், சமையல் வாசனையுமாகத்தான் இருக்கும்! சிறுவர்கள் முதல் முதியவர்கள்வரை ஆரவாரக் குரல்களுடன் மேடை போடுதல், அலங்கரித்தல், இப்படியாகப் பல வேலைகளை தங்கள் தலையில் போட்டுக்கொண்டு அங்கும் இங்குமாக அலைந்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பார்கள்.

எங்களது வீட்டிலோ, மாமரத்தின் கீழ் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், என ஒரு பெரும் கூட்டமே கூடிவிடும். இவர்களைச் சந்தோஷப்படுத்த பனம் பானம் நிரம்பி வழியும். அதற்குச் சுவை சேர்க்க பலவிதமான அறுசுவைப் பதார்த்தங்களும் போட்டி போடும்! இருக்கைகள் பற்றாக்குறையை பாடசாலை வாங்குகள் வந்து நிவர்த்தி செய்யும். பிரிந்தவர்கள் கூடினால் கேட்கவும் வேண்டுமா? இளமைக்கால, இனிமையான அனுபவங்களெல்லாம் அசைந்தாடும். சுதி ஏற ஏற சுருதியில்லாமலேயே சங்கீதமும் முழங்கும். நேரம் நள்ளிரவைத் தாண்ட கொஞ்சம் கொஞ்சமாக அமைதி மேலோங்கும். மறுநாளோ காலை பத்து மணிக்குத் திருப்பலி, பின்பு மதிய உணவு. ஒவ்வொரு வகுப்பறையிலும் அவ் வகுப்பு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இரவிரவாக சிறுவர்களின் ஆரவாரத்திற்கு இதுவும் ஒரு காரணம்.

மதிய போசனத்தை அடுத்து இல்லங்களுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள், உதைபந்தாட்டம், நிறைவாக மாலை நேரக் கலை நிகழ்ச்சிகள் என அந்த நாள் இனிதே முடிவடையும். பலரும் பிரிய மனமில்லாமல் சோகத்துடனும், அடுத்த ஆண்டை எண்ணிய ஏக்கத்துடனும் விடைபெறுவார்கள். அந்த சோகங்களும், ஏக்கங்களுமே சுகமானவைதான்! அவை இரத்தத்தில் ஊறிவிட்டவை.

இங்கும் ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர்கள் பப்பாவின் இறுதி யாத்திரையை தமது ஆசிரியனாக, தம் மூத்தவனாக, தம்முள் ஒருவனாக, அவர்தம் பிள்ளைகளாக நின்று மிகவும் நேர்த்தியாககவும், கௌரவமாகவும், சிறப்பாகவும் செய்து முடித்தார்கள். அவர்களுக்கு நாம் தலை வணங்கி நன்றி கூறுகின்றேன். வாழ்க ஹென்றி அரசர் கல்லூரியும் பழைய மாணவர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலவே இங்கு பப்பாவின் நண்பர்களும், சக கலைஞர்களும் உண்மையான விசுவாசத்துடன் கூடிநின்று அஞ்சலித்தார்கள். ஐரோப்பாவில் தமிழ் வானொலிகள், தொலைக்காட்சிகள் மட்டுமல்ல பத்திரிகைகள்கூட பப்பாவின் மரணச் செய்தியையும், கலை வாழ்வின் நினைவுகளையும் கூறி பெருமைப்படுத்தியிருந்தார்கள் இவர்களுக்கெல்லாம் எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

"மம்மி" இந்தச் சொல்லே இனிமையான, இதமான சாமரம்தான்! மம்மியின் பிரிவை நினைத்தால் இதயம் சுக்கு நூறாக வெடித்துச் சிதறுகின்றது. ஏன் சென்றாய் தாயே? தாங்க முடியவில்லையே? ஆண்டுகள் பல கடந்த போதிலும் தங்களது நினைவுகளின் தாக்கங்களும், ஏக்கங்களும், நிரந்தரமாகவே நிலைகொண்டுள்ளன!

பிரிந்த நீங்களிருவரும் மீண்டும் இறைவனடியில் ஒன்று சேர்ந்துவிட்டீர்கள். நாங்களும் ஒவ்வொருவராக உங்களிடம் வந்து சேரும்வரை காத்திருக்கின்றோம்.

**நீங்காத நினைவுகளுடன்**
**மூத்த மகள்**
**கலா.- லோகநாதன்**




**படிக்கின்ற காலத்தில் முகத்தாருடன் மகள் கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2001ல் 50வது திருமண நாளின்போது



15-08-2005ல் மம்மியின் கடைசி பிறந்தநாளின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வியும் நானே! பதிலும் நானே!!

## முகத்தார் எஸ்.யேசுரட்ணம்



சீசரைப் பெற்ற தாயும் சிறப்புப் பெற்றாள்!
நாசரைப் பெற்ற தாயும் நலமே பெற்றாள்!
காமராஜரைப் பெற்ற தாயும் நாட்டுக்காய் பெற்றாள்!
என்னைப் பெற்ற தாய் ஏன்தான் என்னைப் பெற்றாள்?

சிந்தித்தேன்? கலைக்காத்தான் பெற்றாள்! கலை தெய்வீகம் என்பதைத் தெரிந்துகொண்டேன்! காரணம்........?

நல்ல தந்தையும் நலமிகு தாயும் பெற்ற பிள்ளைதான் உயர்வுறுமென்று சொன்னது எங்கள் ஞானத்திருமறை!

அன்புள்ளங்களே! அந்த நம்பிக்கையில்தான் இன்றும் வாழ்ந்து வருகின்றேன்! எனது முன்னுரையை முதலில் படியுங்கள். அறிந்து கொள்வீர்கள்! தெரிந்து கொள்வீர்கள்! இந்தத் தத்துவங்கள் ஏற்புடைதாயிருந்தால் தயவுடன் தொடருங்கள்.

**என்றென்றும் தங்களின் அன்பினில் சங்கமிக்கும் உங்கள் முகத்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனைவிக்கோர் கடிதம்!

பொன்னை விரும்பும் பூமியிலே என்னை விரும்பும் ஓருயிரே! என்றென்றும் குன்றா அன்பும், குறைவில்லாப் பாசமும், வற்றாத ஜீவ நதிபோல குடும்ப வாழ்க்கையிலும், எனது கலை வாழ்க்கையிலும், பின் தொடர்ந்த ஆருயிரே அயறீன்……..

15-12-2005 அன்று யாருக்கும் முன் அறிவித்தலின்றி என்னையும், நம் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளை, உற்றார், உறவினர், மற்றும் அன்பிற்குப் பாத்திரமான அனைவரையும் தவிக்கவிட்டு மர்மமாய் மறைந்த காரணம்தான் என்ன?

குற்றமென்ன கண்டீர்? நான் கொண்டவளே! குற்றமென்ன கண்டீர்? கொண்டவளைக் கைவிட்டுக் கண்டவள்பின் சென்றேனா? சொல்லமாட்டீர்! ஆதாரங்கள் எதுவும்தான் உம்மிடம் கிட்டவில்லையே!.

இப்போது எங்கு இருக்கின்றீர்? உமது முகவரி, தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்தான் என்ன? இற்றைவரை தெரிவிக்காத காரணம்தான் என்ன? கனவினில் வந்தாவது காட்சி அருளியிருக்கலாம்தானே? உம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த என் மனம் இடம்தரவில்லையே! அதனால்த்தான் 1950 வாக்கில் கலைஞர் மு.கருணாநிதி ஐயா அவர்கள் முரசொலியில் பரமசிவனுக்கோர் பகிரங்கக் கடிதம் ஒன்றை வரைந்திருந்தாரே! அதே போன்றுதான் நானும் இம் மடலை வரைகின்றேன்.

இது என் சத்திய சோதனை, நிஜங்களின் தரிசனம், எவ்வித ஒழிவு மறைவுமின்றி உள்ளதை உள்ளபடியே எழுதுகின்றேன். இது எனது பாவ சங்கீர்தனம்!.

என் அன்பு அயறீன், எனது அந்தநாள் ஞாபகங்கள் அலை மோதுகின்றன. மீண்டும் உமக்கு ஞாபகமூட்ட விளைகின்றேன். என் ஆத்ம சாந்திக்காக…..

1946ல் இருந்து இற்றைவரை பின்னோக்கி நடந்து பார்க்கின்றேன்! இரைமீட்டுப் பார்க்கின்றேன்!! என்ன ஆனந்தம்! என்ன குதூகலம்!! உமக்குத் தெரியும், 1946ல் இருந்து இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் (ilavalai St Henrys College) 1950 வரை London Matriculation இலும் எனது கல்லூரி வாழ்க்கை. இங்கேதான் எனது கலை வாழ்க்கைக்கான அத்திவாரம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றையதினம் கல்லூரி அதிபர் வணபிதா P.J.Jeevaratnam அடிகளார் (B.A.Hons Psy London Oxford University) எனது இயல்புகளையும் எனது வாலயங்களையும் அவதானித்து என்னை ஆங்கில நாடகங்களில் பரிட்சித்துப் பார்த்தார். ஆதன் பின்பு கல்லூரிதின விழா, பரிசளிப்பு விழாக் காலங்களில் கல்லூரி மேடை என்னை ஆட்கொண்டதும் நீர் அறிந்ததே.

இத் தினங்களில் ஆங்கில நாடகங்களில் முக்கிய பாத்திரங்களை நான் ஏந்தி வருவேன். இடைவேளையில் நீர் சக மாணவிகள் சிலருடன் (திருக்குடும்பம் கன்னியர் மடம். – Ilavalai Holy Family Convent) ஆங்கில Ballet நடனம், கும்மி, கோலாட்டம், ஆகியவற்றில் உம் கவர்ச்சியும், லாவகமும், என்னைத் திரை மறைவிலிருந்து ஒருசில குறும்புச் சேட்டைகளுக்கு உள்ளாக்கியதும், நீர் இக் குரங்குச் சேட்டைகளை விரும்பாது அனல் பறக்கும் பார்வையும், பல் நெருமலும், எனது சேஸ்ட்டைகளை நீர் அறவே வெறுக்கின்றீா என்பதனைத் தெரிந்து கொண்டேன்.

ஒருநாள் "சத்தியவான் திருவருளால்" எனத் தொடங்கும் கர்நாடகப் பாடலுக்கு நீர் பரதநாட்டியப் பாணியில் ஆடியதும்! என்னை மட்டுமல்ல பார்வையாளர்களையும் பரவசமூட்டியது! ஒருசில வேளைகளில் Irene Evergren என நான் உமக்கு எழுதி அனுப்ப அதை நீர் படித்தே பாராது கிழித்தெறிந்தவைகளும், பேருந்துகளில் நீர் பயணிக்கின்ற சமயங்களில் (787 யாழ் மாதகல் ஊடாக இளவாலை கீரிமலை) பேருந்தின் ஆட்டத்திற்கு நானும் சேர்ந்தாடி உமது பாடசாலை நூல்கள் உபகரணங்களை தட்டி வீழ்த்துவதும், பின்னர் மன்னிப்புக் கேட்டுவிட்டு என் தன்மானத்தையும் ஓரம் கட்டிவிட்டு நானே அவைகளைச் சேகரித்து உம்மிடம் ஒப்படைப்பதும், அந் நேரத்தில் உம் அகோரப் பார்வையால் (சிவாஜி கணேசன் நடித்த மனோகரா திரைப்படத்தில் அன்னை P.கண்ணாம்பாவின் பார்வை போன்று) எனது தவறுகளை நானே உணர்ந்து விலகிக் கொண்டேன் இந் நிகழ்வுகளை நீர் எவ்வேளையிலும் மறந்திருக்க முடியாது. அயறீன்! இந்த அந்தநாள் ஞாபகங்களை என் ஆத்ம திருப்திக்காக இப்பொழுது இரைமீட்டிப் பார்க்கின்றேன்! அவ்வளவுதான்.

ஆரம்ப அசைபோடல் மிக நீண்டுவிட்டது! தொடர்சியையும் வரைந்தால் அவை இன்னும் சுவார்சியமாக இருக்கும்! எட்டாக்கனி புழிக்கும் என எண்ணி நானும் எனது முயற்சியை விட்டுவிடவில்லை. அதேநேரத்தில் நான் உம்மை விரும்பியும் நீர் என்னை அறவே விரும்பவில்லை என்பதையும், நான் உம்மிடம் பேசுவதற்காக கிட்டக் கிட்ட நெருங்கும் போதெல்லாம் நீர் எட்ட எட்ட விலகிப் போவதும், என்னை வாட்டிய புரியாத புதிரேதான்!. காரணத்தை அறிய ஆராட்சியில் இறங்கினேன்! தெரிந்து கொண்டேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது சக மாணவத் தோழிகளில் ஒருசிலர் எனது உறவினர்களாகவும் முறைப் பெண்களாகவும் இருந்தார்கள். அதில் என்னை விரும்பியவர்களும் உண்டு. அதில் யாரோ என்னைப்பற்றிய தவறான வரைபடத்தை உம் மனதில் பதியவைத்து மூளைச்சலவை செய்தமையே காரணம் என்பதனை காலக்கிரமகத்தில் தெரிந்து கொண்டேன்! அக்காலகட்டத்தில் வாட்ட சாட்டமான எனது உடற்கட்டும், வசீகரமான முகவெட்டும், நீண்டு வளைந்த கேசமும் இருந்தும் என்ன பயன்? "போனால்ப் போகட்டும் போடா" என நானாகவே எனது தோல்வியை ஏற்றுக்கொண்டு தற்காலிகமாக ஓரம் கட்டிக்கொண்டேன்.! "இன்னாளில் இன்னார்க்கு இன்னாரென்று எழுதி வைத்தானே அன்று!" இப்பாடல்வரிகளை இன்றும் இரைமீட்டிப் பார்க்கின்றபோது துடிப்புமிக்க வாலிபப் பருவத்தின் சுவார்சியமான காண்டமிது! ஆதை ஞாபகமூட்டவே வரைகின்றேன் "பரமசிவன்" தணிக்கை செய்தால் அது எனது குற்றமல்ல அயறீன்!

கிராமிய மட்டத்தில் மேலோட்டமான "கிசுமுசு"க்கள் இடம்பெறவும் கல்லூரிச் சுவருடன் போட்டா போட்டியும், ஒத்தூதும் பாணியில் உம் கன்னியர்மட மதிலிலும், எங்கள் பெயர்கள் இடைசுகம் பிரகாசிக்கப்படவே அதிகாலையில் கல்லூரி கன்னியர்மடச் சிற்றூழியர்களான திரு.தேவசகாயம், திரு.சூசை, ஆகியோர் தண்ணீர் வாழியும், துடைக்கும் ஏதனங்கள் ஆகியவனவற்றைப் பாவித்து அழிக்கும் பணியில் ஈடுபட பலரின் பல்லிழிப்புக்களுக்கு நாம் இலக்காகவே எம் இரு வீட்டாரும் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டனர்!. இத் தொடர் நாடகங்களை நீர் என்றுமே மறக்கவோ, மறுக்கவோ முடியாதவை!

காலக்கிரமத்தில் நீர் கன்னியர்மட மாணவிகள் தங்கும் விடுதியில் சேர்க்கப்பட்டீர். நானும் தெய்வாதீனமாக அரசாங்க லிகிதர் சேவைக்குத் தெரிவாகி (Govt General Clerieal Service) கொழும்பு கல்வி இலாகாவிற்குச் சென்றுவிடுகின்றேன். ஆனாலும் நின்றுவிடவில்லை எங்கள் தொடர் நாடகம்! எங்களைப்பற்றி இரு வீட்டாரும் கலந்தாலோசித்துக் கொண்டிருந்த வேளையில் எனது கலை ஆசான், என்னை கலைப்பாதையில் தொடர வைத்த சீமான், இன்று லண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கும் செவாலியார், புலவர்மணி, சொல்லின் செல்வர், இளவாலை அமுது அண்ணா அவர்கள் முன்னிலை வகித்து சாதகப் பொருத்தம் பார்த்து திருமணத்திற்கு நாளும் குறித்துவிட்டனர்!.

உமக்கு தாம்பத்திய உறவுபற்றிய அரிச்சுவடிகூட தெரியாத அந்த பதினாறு (16) வயதில் 23 – 12 – 1951 அன்று உமது கரம் பற்றினேன்! இருந்தாலும் அன்று காலை முதல் மாலைவரை உமது வதனத்தில் எந்தவிதமான பிரகாசமும் இல்லாமல் பேசாமடந்தையாகவே இருந்தீர்! எனக்கு மனதினில் பெரும் போராட்டம்! விரும்பாத வற்புறுத்தல் திருமணமாக இருக்குமோ? அப்படியானால் நானாகவே விலகிச் சென்றுவிடலாமா? என்னும் போராட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரமாகியது! அப்பொழுதும் மௌனம் கலையவில்லை! சில வினாடிகளின் பின்னர் பாலும் பழமும் ஏந்திவந்து என்னிடம் நீட்டுகின்றீர், நானும் ஒரு கால்ப்பங்கு அருந்திவிட்டு எஞ்சியதை உம்மிடம் நீட்டுகின்றேன்! நீரோ உதாசினமாக அருகில் இருந்த மேசையில் அதனை வைத்துவிட்டு ஓரமாக ஒரு கதிரையில் அமர்ந்துவிடுகின்றீர்! "என்னடா இது மதுரைக்கு வந்த சோதனை?" அந்தப் புரியாத புதிருக்கு விடை காண எனது தன்மானத்தையும் அடகு வைத்துவிட்டு நானாகவே உம்மிடம் பேசுகின்றேன் "என்னவும் அயறீன் மௌன விரதமா? அல்லது வலுக்கட்டாயத் திருமணமா? அப்படியென்றால் ஒளிக்காமல் சொல்லும் நானாகவே விலகிக் கொள்கின்றேன்! என்றதும் லேசாகத் திரும்பிப் பார்க்கின்றீர், அரிக்கன் லாம்பின் குருட்டு வெளிச்சத்தில் உமது இரு கண்களிலும் கண்ணீர்த் துளிகளிகள் துலாம்பரமாக கண் சிமிட்டுகின்றன! நீர் கேட்டீர் "என்னை உண்மையாகவே விரும்புகின்றீர்களா? இப்பொழுதும் குடிப்பழக்கம் இருக்கின்றதா? இன்னார் இன்னாரோடு இன்னமும் தொடர்பு இருக்கின்றதா?" என்று. இதற்கு எனது சிரிப்பும் மழுப்பலும் உமக்குத் திருப்பதி அளித்திடவே உமது முகத்தில் புன்னகையும் புன்சிரிப்பும் ஒருசேர வந்து அன்ன நடையுடன் வந்து கட்டிலில் எனதருகில் ஒட்டி அமர்கின்றீர்.......

நியாயமான, தீர்க்கமான, உம் கேள்விகளும்... என் பாவ சக்கீர்த்தனமான பதில்களும் நமது அனந்தமான தாம்பத்திய வாழ்க்கைக்கு அடிக்கல்லாய் அமைந்து விடுகின்றது! மிகுதியும், தொடர்ச்சியும் நான் வரைந்துதான் நீர் தெரிந்துகொள்ள வேண்டுமா? அந்தநாள் ஞாபகங்களை இரை மீட்பதற்காக முக்கியமான நினைவுகளை வரைந்துவிட்டேன். போதுமா? என் அயறீன்! போதாதே!! காலப்போக்கில் நடந்த சில கசப்பான நிகழ்வுகளையும் அசைபோட்டால்த்தானே எனது மடலும் நிறைவு பெறும்.

வாழ்க்கை என்பது போராட்டம்! வாழ்க்கை என்பது வேள்வி! புண்ணில்லாத போராட்டமும் இல்லை! இரத்தம் சிந்தாத வேள்வியும் இல்லை! காட்டில் வளரும் மூங்கில்கூட வெட்டப்பட்டு தீயினால் துளையிட்டப்பட்ட பின்னர்தான் இனிமையான இராகங்களைத் தருகின்றது! நாம் மட்டும் இதற்கு விதிவிலக்கல்லவே?! நமது திருமணம் நடைபெற்று ஓரிரு வருடங்கள் ஓடி மறைகின்றன..... எனது தவறுகளை நானே ஏற்றுக்கொள்கின்றேன். அதே நேரத்தில் எனது முன்னைய தொடர்புகள் மீண்டும் தலை தூக்க முயற்சித்தன! அவைகளைவிட்டு நான் விலகிச்செல்ல எத்தனித்தும் அவை என்னைத் துரத்தியது.... இரைதேடும் பறவையாவதற்கு எனது மனச்சாட்சி சிறிதேனும் இடம் தராமையால் தெய்வாதீனமாக அந்த வலைகளில் நான் விழவுமில்லை! விலை போகவுமில்லை!.

குடும்பத்தைக் குலைக்கும் கோடாரிக் காம்புகளை உமக்கு அறியத்தர! அதை நீர் முழுமையாக நம்பாமல், நான் சத்தியவான் அல்ல என்று நீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி என்னைவிட்டுப் பிரிந்து உமது பெற்றோர் வீட்டிற்குச் சென்றுவிடுகின்றீர்!. "உன்னைச்சொல்லிக் குற்றமில்லை, என்னைச்சொல்லிக் குற்றமில்லை, காலம் செய்த கோலமடி கடவுள் செய்த குற்றமிது" என்ற பாடல் வரிகள்தான் எனக்கு அப்பொழுது ஆறுதலாக இருந்தது.

நான் நிரபாராதி என்ற நம்பிக்கை எனக்கிருந்ததனாலும், உண்மைகள் சாவதில்லை என்ற திடமான நம்பிக்கை எனது மனதில் வேரூன்றி இருந்ததனாலும், எனது இன்ப துன்பங்களை என் மனதிற்குள்ளேயே அடகுவைத்ததனால் ஏனையவர்களின் ஏழனத்திற்கும், நையாண்டிக்கும் உட்பட்ட போதிலும் நான் அசையவேவில்லை! நீர் பெற்றோர் வீடு சென்று இரண்டு மாதங்கள் ஓடி மறைந்திருக்கும் வேளையில் உம்மை விரும்பிய, நம்மை ஒற்றுமைப்படுத்த அவா கொண்டிருந்த ஓரிரு உமது மாணவத் தோழிகள் உண்மையான நிலைப்பாட்டை உமக்கு எடுத்துரைக்க... நீரும் தவறை உணர்ந்து எனக்கு இரண்டு மன்னிப்புக் கடிதங்கள் வரைந்தபோதும் நான் பதிலேதும் அறவே போடவில்லை! காரணம் என் தன்மானத்தை இழக்க நான் விரும்பவில்லை! "புண்ணுக்குப் பரிகாரம் புதிதாகச் செய்யாவிட்டால் மண்ணுக்கு மீண்டும் மாபெரும் கேடு வரும்" என்னும் தத்துவத்தை நான் உணர்ந்திருந்தவன்!

"இரண்டு வரம் வேண்டும், இறைவனிடம் கேட்டேன்! நினைத்து வாழ ஒன்று, மறந்து வாழ ஒன்று" இந்தப் பாடல் வரிகள் எனக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. நாம் பிரிந்து இரண்டாவது மாதம் முடியும் தறுவாயில் ஒருநாள் இரவு உமது மைத்துனியும் அவர் கணவர் சகிதமாக நீர் எனது வீட்டிற்கு வந்துவிடுகின்றீர்! எதிர்பாராத வருகை அது! கையாலே கண்ணைக் கசக்கிவிட்டு இரு சொட்டுக் கண்ணீராலே உமது குற்றங்களை நீர் மறைத்துவிட... மன்னிப்போம் மறப்போம் என்றாகிவிட..... மீண்டும் தொடர்கின்றது நமது குதூகலமான வாழ்க்கை. காலக் கிரமத்தில் ஒன்றின்பின் ஒன்றாக ஐந்து பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் ஆகிவிடுகின்றோம்.

பொருளாதாரத் தட்டுப்பாடு ஏதும் இருந்ததில்லை! ஒன்றிற்கு மூன்று வீடு! (இளவாலை Jesu Manai.. பெரியவிளான் Rany Mahal... சுருவில் Selva MaliGai...) முக்கனிகள் அலங்கரிக்க, தென்னை, பனம் தோப்புக்கள் கட்டியம் கூற, தோட்டக் காணிகள், நெல் வயல்கள், காலக்கிரமத்தில் பணியாட்கள்.... (சமையலுக்கு ஒரு பெண்ணும், தோட்டம் துரவுகளைப் பார்க்க ஒரு ஆணும்) எமது பிள்ளைகள் வளர்ச்சியடைய வாகன வசதிகளும்... (Motor Car Austin 30 En 4662 Motor Bike BSA3.5 – el 1447 மிதிவண்டிகள் இரண்டு) வந்து சேர்ந்துவிட ஆடம்பரமற்ற... அகங்காரம் ஏதுமற்ற... ஆனந்தமான குதூகலமான வாழ்க்கையில் 2002ல் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணப் பொன் விழாவையும் கொண்டாடினோம். இந்த இன்பமான வாழ்க்கை 15-12-2005 நீர் என்னைவிட்டுப் பிரியும்வரை நீடித்தது…

அந் நாட்களில் நத்தார் விடுமுறை தினங்களில் நமது பிள்ளைகள் சகிதம் (தமிழ்நாடு) சென்னை, திருச்சி மதுரை, கன்னியாகுமரி, போன்ற இடங்களுக்கு செல்வோம். ஒரு சில வருடங்கள் தொடர் நாடகம்தான்! 1962 என நினைக்கின்றேன் 2வது உலகத் தமிழ் ஆராட்சி மாநாடு நடந்த நேரம். தமிழக முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவை சென்னை கடற்கரையில் இருந்து பார்த்து மகிழ்ந்ததும், நடிகவேள் M.R.ராதா அவர்களின் இரத்தக்கண்ணீர் நாடகத்தைப் பார்த்துச் சுவைத்ததும் இன்றும் எனது மனதலைகளில் நீங்காத நினைவலைகளாக இருக்கின்றது. நீர் மறந்திருக்கமாட்டீர் தமிழ்நாட்டில் எட்டு (8) வருடங்கள் எமது அகதி வாழ்க்கையும் (1985 – 1993) நீங்காத பதிவுகள்தான்!.

அயறீன் கடல் எல்லையைக் கடந்துவிட்டோமோ? பரமசிவனின் கத்தரிக்கோலுக்கு இடம் கொடுத்துவிடுமோ? என அஞ்சுகின்றேன். ஏனென்றால் இம்மடலை பரமசிவன் மேற்பார்த்து சொர்க்கவாசல் என்னும் முகவரிக்கே அனுப்புவதால்!. சத்தியவானை மீட்டாள் சாவித்திரி அதுவும் ஒரு வரலாற்றுக் காவியம்! உம்மை நான் மீட்டுவிட்டால் அது ஒரு புதிய காவியம்!

நீர் என்னைவிட்டு பிரிந்ததன் பின்னர் (15-12-2005) எனது கலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்ததும்! என்னை முற்றுமுழுதாக நேசிக்கும் ஓர் உயிர், நான் ஆஸ்த்தான கவிஞர் என செல்லமாக அழைக்கும் எனது சமஸ்த்தானக் கவிஞர் திருமிகு வண்ணை தெய்வம் அவர்களின் உற்சாக மூட்டினால் மீண்டும் எனது கலை வாழ்க்கையைத் தொடர்கின்றேன். சோர்ந்து கிடந்த எனது உள்ளம் சுறுசுறுப்படைகின்றது! சாய்ந்து சரிந்துவிட்ட எனது எழுதுகோல் மீண்டும் எனது கரங்களைப் பற்றிக்கொள்கின்றது! இதுவே எனக்கு மன அமைதியைக் கொடுக்கின்றது. உமக்குத் திருப்திதானே?!

எனது கடைசி வேண்டுகோள் மீண்டும் திரும்பி வந்துவிடு! இல்லையேல் தாமதியாது என்னையும் அழைத்துவிடு! இத்துடன் இந் நீண்ட மடலை நிறைவு செய்யும்…..



அன்றும், இன்றும், என்றும., உமது அன்புக் கணவர்

**“முகத்தான்” யேசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி வாணர் அறிமுகம்!

## “முகத்தார்” ஜேசுரட்ணம்

கலைத் துறையில் நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் ஏக காலத்தில் ஒருவர் ஜொலிப்பது அரிதிலும் அரிது.

இந்த இரு துறைகளிலும் அடுத்தடுத்து புகழ் பெற்று வரும் ஒரு சில கலைஞர்களில் முக்கியமானவர் "முகத்தார்" ஜேசுரட்ணம்.

வானொலியில் கிராமப்புற மக்கள் ரசித்துக் கேட்பது கிராமிய நிகழ்ச்சியாகும். இதில் வருடக் கணக்காக ஒலிபரப்பாகி வருகிறது "முகத்தார் வீடு" தொடர் சித்திரம்.

இச்சித்திரத்தை அலுக்காமல் சலிக்காமல் தொடர்ந்து எழுதி வருவதுடன் தமது "கலீர்" என்ற குரலால் அதற்கு கலையூட்டியும் வருகிறார் ஜேசுரட்ணம்.

இளவாலையைச் சேர்ந்த இந்தக் கலைஞர் தமது இளம் வயதிலேயே மேடையேறியவர். அது மாத்திரமன்றி 1951 ஆம் ஆண்டில் அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னரும் ஓய்வின்றி கலைச் சேவை செய்து வருபவர்.

வன பரிபாலன திணைக்களத்தில் இன்று உதவி நிதி அதிகாரியாக உயர் பதவி வகிக்கின்ற போதிலும் நாடகங்கள் மூலம் ரசிகர்களின் இதயங்களை மீட்டுவதற்கு அவர் ஓய்ந்து விடவில்லை.

அரசாங்க உத்தியோகத்தில் மாத்திரமா உயர் பதவி? நாடகத் துறையிலும் ரசிகர்கள் அவருக்கு ஒரு உன்னதமான இடத்தை வழங்கியிருக்கிறார்கள்.

1966 ஆம் ஆண்டில் வானொலி கிராம நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் தெரிவான ஜேசுரட்ணம் 1973 இல் வானொலி நாடக நடிகராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் அவர் நடித்த நாடகங்கள் ஏராளம். அதே நேரத்தில் எழுதிய வானொலி நாடகங்கள் கணக்கில் அடங்காதவை.

நகைச்சுவை ததும்ப நாடகம் எழுதுவதில் விற்பன்னர் இவர். குறிப்பாக "கதம்பம்" நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் இவருடைய குட்டி நாடகங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு.

மேடை நாடகங்களைப் பொறுத்த மட்டில் ஜேசுரட்ணம் தமது சக நடிகர் "வரணியூரான்", எஸ். எஸ். கணேசபிள்ளையுடன் இணைந்து இயங்குவதே வழக்கம். இந்தக் குழுவினரின் "சண்டியன் சின்னத்தம்பி" நாடகம் ஜேசுரட்ணம் எழுதியது தான்.

திரைப்படங்களில் அதிகம் நடிக்காத போதிலும் தமது பாத்திரத்துக்கு மதிப்புத் தேடித்தந்தவர் இவர்.

"கோமாளிகள்", "ஏமாளிகள்" ஆகிய படங்களில் இவருக்கு சிறிய பாத்திரங்கள். ஆனால் "வாடைக் காற்று" படத்தில் "பொன்னுக் கிழவர்" பாத்திரத்தில் தோன்றி சக்கை போடு போட்டு சிறந்த துணை நடிகருக்கான ஜனாதிபதி விருதையே பெற்றிருக்கிறார் ஜேசுரட்ணம்.

இத்தனை திறமை இருந்தும் டெலிவிஷனில் இன்னும் உரிய இடம் கிடைக்காதது இவருக்குக் கவலையைத் தருகிறது.

கே. எம். வாசகரின் "சமதி" நாடகம் ஒலிபரப்பாகிய போது அதில் இன்ஸ்பெக்டர் வேடத்தில் தோன்றியதைத் தவிர இவருக்கு டெலிவிஷனில் உரிய இடம் இன்னும் கிட்டவில்லை.

மேடையிலும், வானொலியிலும், திரையிலும், டெலிவிஷனிலும் ஒரே நேரத்தில் சாதனை நிலை நாட்டக் கூடிய திறமைசாலிகளில் ஜேசுரட்ணமும் ஒருவர்.

— எப். எம். பைரூஸ்

22-04-1984 சிந்தாமணி பத்திரிகையில்வெளியான செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உரை.......
# திரும்பிப்பார்க்கின்றேன்

அறுபது (60) வருடங்கள் நான் கடந்து வந்த கலை வாழ்க்கையை பின்நோக்கி நடந்து பார்க்கின்றேன்! அசைபோட்டுப் பார்க்கின்றேன், இரைமீட்டுப் பார்க்கின்றேன், எனது கலை வாழ்க்கை விசித்திரமானது! இன்பமும் துன்பமும், ஏற்றமும் தாழ்வும், ஆனந்தமும், அங்கலாய்ப்பும் கலந்து பரிணமித்திருக்கின்றேன். மோகனமும் பாடியிருக்கின்றேன்! முகாரியும் பாடியிருக்கின்றேன்! மோகனம் பாட இயலாமலும் முகாரி பாட சக்தியும் இல்லாத வேளைகளில் சகான லயத்திலே சில சுருதிகளையும் மீட்டியிருக்கின்றேன்! ஏன், சிலவேளைகளில் கானல் நீரையும் சந்தித்திருக்கின்றேன்! கனி வீழ்ந்தாலென்ன! கல்லெறி வீழ்ந்தாலென்ன! அனைத்தையும் சமமாகவே தாங்கியிருக்கின்றேன்!.

எனது கலை வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் அதிகம் முரண்பாடுகள் இல்லாமல் கவனமாய் இருந்திருக்கின்றேன். ஏனென்றால் “காண்டேகர்” சொன்னதுபோல “காட்டில் வளரும் மூங்கில் மரம்கூட வெட்டப்பட்டு தீயிலிடப்பட்டு, துளை போடப்பட்ட பின்னர்தான் இசைக்கும் புல்லாங்குழல் ஆகின்றது” என்கிறார். மேலும் ஓர் இடத்தில் குறிப்பிடுகின்றார் “வாழ்க்கை என்பது போராட்டம்! வாழ்க்கை என்பது வேள்வி! புண்ணில்லாத போராட்டமும் இல்லை, இரத்தம் சிந்தாத வேள்வியும் இல்லை” என்று. இந்தத் தத்துவங்களும் சித்தாந்தங்களும் எனது எழுபத்தெட்டாவது (78) வயதில்த்தான் என்னைச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது! நான் சித்தார்த்த கௌதம புத்தர் இல்லையே? இளம் வயதிலேயே ஞானம் பெறுவதற்கு!

மன்னிக்கவும்! எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய்விட்டேன். எனது பலவீனங்களில் இதுவுமொன்று. மீண்டும் என் கலை வாழ்க்கைக்கு வந்துவிடுகின்றேன். எனக்குள் கலை உணர்வு எப்படி வேரூன்றியது? இது பிராப்தமாயிருக்குமோ? முற்பிறப்பிலே தொட்ட குறை விட்ட குறையாக இருக்குமோ? இருக்கலாம்! எனது London Matriculation வகுப்பிலே தமிழ், இலக்கிய, பாட வினாத் தாழிலே பாரதப்போரின் பதினெட்டாம் (18) போர்ச் சுருக்கம் வருகின்றது. அதில் இராமாயணத்திலே சீதை மீட்புப் படலம். அத்துடன் “நாலடியார்” இந் நூலின் “பளவினை” கண்டத்திலே “உளவினை” அதிகாரத்திலே முதற்பாலிலே “பல்லாவுள் உய்த்து விடினும் குளக்கன்று வல்லதாம் தாய்நாடிக் கோடலை, தொல்லைப் பளவினையும்” என வரும். அதாவது பல பசுக்களின் மத்தியிலே ஒரு கன்றுக்குட்டியை விட்டுவிட்டால் அது தன் தாயை தேடி அடைவதைப்போலத்தான் பளவினையும்! முற்பிறப்பிலே தொட்ட குறை, விட்ட குறை, ஏதும் இருந்தால் ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் அவனவனைச் சென்றடைந்து விடுகின்றதாம்! அப்படித்தான் இருக்க வேண்டும் எனது கலை உணர்வும் என்பதுதான் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கமான முடிவு! இதற்கேற்றால்போல் சிறு வயதிலேயே எனது சூழலும், சுற்றாடலும் அமைந்து விடுகின்றது.

எனது பாட்டனார் ஒரு அரைகுறை அண்ணாவியார்! எனது தந்தையும் அப்படியே! எங்கள் ஊர் ஆலயத் திருவிழாவின்போது மாலை நேர ஆராதனையில் மத்தளம் அடித்து திரை விருத்தம், நடை பவனியில் வேறு பல கீர்த்தனைகளும் படித்து வருவார்கள். விரும்பியோ விரும்பாமலோ நானும் அதில் பங்கேற்று வருவேன். எனக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கும் கீர்த்தனைகள் பலவற்றில் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். "சீராத வதனாம் புயத்தி அன்னம்மாள் திருப்புதல்வி மரியை என்னும்....." இது திரை விருத்தம். ஏதோ இந்தக் கலை உணர்வு என்னை அறியாமலேயே எனக்குள் வேரூன்றிவிட்டது.

1946ம் ஆண்டுதான் நான் முதன் முதலில் நாடக மேடையில் கால் பதித்த ஆரம்பம். அது எனது கல்லூரி மேடை. இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியேதான். (Ilavalai St Henrys College) அன்றைய கல்லூரி அதிபர் (அமரர்) வணபிதா P.J.JEEVARATNAM-om. (B.AHons-Psy London Oxford University) அடிகளார் எனது இயல்புகளையும் அனைவரையும் கவரும் முகபப்பார்வையையும் அவதானித்து கல்லூரி நாடகங்களில் பரீட்சித்துப் பார்க்கும்படி எனது ஆங்கில ஆசான்கள் (அமரர்) வணபிதா S.Brown –OMT (B.A Hons-Eng-Lit – Camprige University London) அடிகளார். ஆசிரியர்கள் A.S.T.James. V.Kandiah. S.Bastiampilla (பொடி மாஸ்ற்றர்) ஆகியோர் பணிக்கப்பட்டனர்.

1946 – 1950 (London Matriculation) வரை கல்லூரிதின விழா, பரிசளிப்பு விழாக்களிலே (ஆனி – மார்கழி) கல்லூரி மேடைகள் என்னை அரவணைத்துக் கொண்டது. பெரும்பாலானவை ஆங்கில நாடகங்களே! கல்லூரியில் நான் நடிக்காத நாடகங்களே இல்லையென்றாகிவிட்டது. நூற்றுக்கு நூறு வீதமும் முக்கியமான பாத்திரங்களே!

இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கும் ஒரு சில நாடகங்களும், அதில் நான் ஏற்ற பாத்திரங்களும், பேசிய வசனங்களையும் இங்கு குறிப்பிட விளைகின்றேன். ஒருமுறை யூலியர் சீசர் (Julius Ceasar) நாடகத்தில் சீசராக நடித்திருந்தேன 'Ette Brute! then Ceasar Should Die" "நீயுமா புரூட்டஸ்? அப்படியென்றால் சீசர் மடியவேண்டியவரே!" நட்பிற்கு இலக்கணம் வரைந்துவிடுகின்றான் சீசர்! Casea Cassius "செனட் சபையில் கட்டாரியைச் சந்தித்துவிட்டு செனட்சபையின் படிகளிலே தள்ளாடியபடி வரும்போது ஈற்றிலே Brutus கட்டாரி சகிதம் நிற்பதைக் கண்டு அதிசயித்து 'அப்படியென்றால் நான்தான் தவறு இளைத்துவிட்டேன்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கலாய்ப்பிலே கட்டாரியைத் தானே வரவேற்று மரணத்தைத் தழுவிக்கொள்கின்றான்.

இன்னொருமுறை இதே நாடகத்தில் Ceasarன் மதிற்பிற்குரிய Mark Antonyன் பாத்திரம் ஏந்துகின்றேன். சீசரின் பூதவுடலை மக்கள் சந்தையில் வளர்த்திவிட்டு மார்க் அன்ரனி பேசுகின்றேன் "நான் சீசரின் உடலை அடக்கம் செய்யவே வந்தேன். ரோமபுரியினரே! என் நாட்டவர்களே! நண்பர்களே! செவிமடுங்கள்! சீசரைப் புகழ்வதற்காக அல்ல என் திறன்! (Romans CoUintrymen & Friends! Please Lond Me Yous Ears! i Oh Sweetiee! Sleep Baby Sleep Let The Trespassers Vanish Lie Motonless And Pretten"

இன்னோர்முறை 'Merehant Of Venice" வெனிசிய நகர வர்த்தகன் என்னும் நாடகத்தில் சைலாக் (Shylock) என்னும் பாத்திரம். 'Apound Of Flesh From Antonios Chest" "அன்ரோனியோவின் மார்பகத்தில் இருந்தது ஒரு இடை மாமிசம் மட்டுமே!" இவையே அந்தப் பாத்திரங்களின் முக்கிய வசனங்கள். அந்த உடைகளையும், நடைகளையும், நடிப்பையும், இரைமீட்டிப் பார்க்கும்போது என்ன ஆனந்தம்!!



கல்லூரி மேடைதனில் தோன்றிய கடைசி நாடகம் French நாவலான 'La Miserable ல் இருந்து' Bishops Candle Sticks" ஆயரும் மெழுகுவர்த்தியும் என்னும் நாடகத்தில் 'Conviet" என்னும் சிறைக் கைதியின் பாத்திரம். சிறையை உடைத்து ஆயரின் இல்லத்தில் தஞ்சம் அடைகின்றேன்.
"ஆண்டவரே என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதீர்கள்! செய்யாத குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை!" 'Your Lord Ship! Miscalculated Judgement And Erroneus Sentence Sent Me Behind Bars! iconfess I Stole! Not Avarice But Hunger இந் நாடகங்கள் எனது கல்லூரி மட்டத்திலும், இதர கல்லூரிகள் மட்டத்திலும் (Jaffna St Patricks Coollege .Vaddukotal Jaffna College. Ilavalai Holy Family Vanvent) எனக்கு நல்ல பெயரைத் தந்து தட்டிக்கொடுத்தன. இந்த நாடகங்கள் எனது எதிர்கால கலை வாழ்விற்கும் நிஜ குடும்ப வாழ்க்கைக்கும் அடிக்கல்லாக அமைந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி நாடகங்கள் பெரும்பாலும் ஆங்கில நாடகங்களாகவே இருந்தன. தமிழ் நாடககங்களும் ஒரு சில என்னை ஆட்கொண்டன. சோக்கிரட்டீஸ் (Socratees) கிரேக்கம் (Greeces) தந்த தத்துவஞானி. ஏதன்சு (Athens) நகரத்தின் சிந்தனைச் சிற்பி….. இதில் ஒரு வசனம்…. "எழில்மிகு ஏதன்ஸ் நகரத்தின் துடிப்பு மிக்க இளைஞர்களே! "சோக்கிரட்டீஸ் கூவி அழைக்கின்றேன். என்னிடம் ஓடி வாருங்கள். நான் தரும் அறிவாயுதத்தை ஏந்திக்கொள்ளுங்கள். உன்னையே நீ அறிவாய்…!" இந்த வசனங்கள் இப்பொழுதும் என்னை மெய் சிலிர்க்க வைக்கின்றன.

1950 மார்கழியில் கல்லூரி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அரசாங்க லிகிதர் சேவைக்குத் தெரிவாகி 20-04-1951ல் கொழும்பு கல்வி இலாகாவில் கடமை ஏற்கின்றேன். என்னை கொழும்பிற்கு வழியனுப்ப வந்தவர்களில் முக்கியமானவர்களில் இன்றைய "செவாலியர்" புலவர்மணி இளவாலை அமுது அண்ணாவும் ஒருவர். அவர் புகையிரத நிலையத்தில் சொன்னார் "டேய் தம்பி கலைப்பாதையில் தொடர்ந்து செல்! உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு!" என்று.

கொழும்பு என்னை வரவேற்கின்றது அரச சேவையில் இணைந்தபின்பும் எனக்குள் வேரூன்றிய கலையுணர்வு என்னைவிட்டு அகலவேயில்லை! அக்காலத்தில் தமிழ் நாடக மன்றங்கள் மிகக் குறைவு! கல்லூரி நாடகங்களில் என்னோடு இணைந்தவர்கள் வேறு வேறு துறைகளுக்குச் சென்றுவிட்டதனால் கொழும்பில் என்னோடு இணைந்து செயல்பட எவருமே இல்லை! இருந்தாலும் அவர்களை அன்றும் இன்றும் என்றும் மறப்பதே இல்லை. குறிப்பாக தான்தோன்றிக் கவிராயர் சில்லையூர் செல்வராஜன். S.A.J.வீரசிங்கம். S.E இமானுவல். A.C.குணநாயகம். S.ஜோன்பிள்ளை. இன்னும் ஒரு சில பெயர்கள் தற்போது ஞாபகத்தில் இல்லை. இவர்கள் அனைவரும் எங்கிருந்தாலும் வாழ்க.

கல்லூரி மேடைகளில் பதித்த காலடி கொழும்பில் தொடருமா? என்ற ஐயப்பாடும் இடையிடையே தோன்றி மறைந்தாலும் நான் நம்பிக்கையை மட்டும் இழந்துவிடவில்லை! கல்வி இலாகா என்னைத் தாலாட்டியது. மாதம் 62 (அறுபத்திரண்டு) ரூபா ஊதியம். பஞ்சப்படி 60பது (அறுபது) ரூபா. மொத்தம் 122 (நூற்றி இருபத்திரண்டு) ரூபா எனது போதப் பொலிய வருமானமாய் இருந்தது. இதே வேளை காலக் கிரமத்தில் நாடக மேடைகளும் கரடி பிறை கண்ட மாதிரி காட்சி தரத் தொடங்கியது.

எனது கலைப் பயணம் என்று பார்க்கையில் "மறைகள்" போல "சாம பேத தான தண்டம்" என்றவாறு எனது கலை வாழ்க்கையையும் நான்காகப் பிரித்துப் பார்க்கின்றேன். மேடை நாடகங்கள் நாற்று வயலாகவும், வானொலி நாடகங்கள் நட்ட நாற்றாகவும், திரைப்படங்கள் விளை பயிராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி நாடகங்கள் அறுவடையாகவும், அமைந்திருப்பதை பின்னோக்கி கூர்ந்து பார்க்கின்றேன்.

எனது இந்த நாற்று வயல் கொழும்புவரை விருஸ்த்தீரணமடைந்து வீறுநடைபோட ஆரம்பித்துவிட்டது! நாளடைவில் ஒருசில நாடக மன்றங்கள் அறிமுகமாகிவிடவே அவைகள் பின்னே தொடர ஆரம்பித்தேன். பரீட்சார்த்தமாக ஒரு சில நாடகங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்து முத்திரை பதிக்க தொடர்ந்து முக்கிய பாத்திரங்கள் என்னை வரவேற்கத் தொடங்கின.

## கலை வாழ்க்கையில் என்னோடு இணைந்தவர்கள் என்னும் ஆக்கத்திற்குள் நான் நுளையும் முன்னர் என் உரையின் முடிவுரையாக......

நாடகமே உலகம்!
நாம் அனைவரும் அதில் வேடதாரிகள்!
அன்புறவுகளே!
கலையே என் வாழ்க்கை!
என் வாழ்க்கையும் ஓர் கலையே!
ரசிகர்களின் ஆதரவில் கலை வளர்கின்றது!
அதன் நிழலிலே கலைஞர்கள் நாம் வாழ்கின்றோம்!
நீங்களும் விடாது தொடருங்கள் நிட்சயம் தொடர்வீர்கள்
என்று கூறி அனைத்துக் கலைஞர்களையும் வாழ்த்துகின்றேன்

முத்தங்கள் கலந்த வாழ்த்துக்களுடன், முகத்தான் யேசுறட்ணம்



**1993ல் பிரான்சில் பேரப்பிள்ளைகளுடன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வாழ்க்கையில் என்னுடன் இணைந்தவர்கள்...

## காண்டம்:- 1. மேடை நாடகத் தொகுப்பு

இது ஒரு "மகாபாரதம்" எங்கே தொடங்குவது? எப்படித் தொடங்குவது? என்பதிலே என்குள்ளே பெரிய போராட்டம். நாடகமில்லையெனில் நடிகர்கள் எங்கே? எனவேதான் ஆரம்ப உரையாக நான் எழுதிய, பிறர் எழுதிய, நாடகங்களிலெல்லாம் நான் தோன்றியமையை முதற்கண் இரைமீட்டுவிட்டால் என்னுடன் வலம் வந்தவர்கள், வழி நடத்தியவர்களை வர்ணிப்பது சற்று சுலபமானதே! நான் எழுதிய பல மேடை நாடகங்களில் எனது ஞாபகத்தில் இருக்கும் ஒருசில நாடகங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

"போச்சடி பத்தாயிரம்" "கோப்பாயிலிருந்து டுபாய்வரை" "கராச்சி ரூ கட்டார்" "புறோக்கர் பொன்னம்பலம்" "மாடிவீட்டு மருக்கொழுந்து" "லண்டன் மாப்பிள்ளை" "அரோகரா" "உயிரோடு காடாத்து" "மண்ணோடு விளையாடும் விண்ணுலகம்" "சண்டியன் சின்னத்தம்பி" "பண்டாரவன்னியன்" "சத்தியமே ஜெயம்" இவை மேடையிலும் சில வானொலியில் தொடராகவும் இடம்பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலியைப் பொறுத்தவரையில் தனித்தனி நாடகங்களாக "யூலியர் சீசர்" "வெனிசிய நகர வர்த்தகன்" "அனாதை ஒருவன் ஊர்வலம் போகின்றான்" "அனார்க்கலி" போன்றவையாகும். மேலும் இலங்கை வானொலியில் எனது ஆக்கத்தில் உருவான தொடர் நாடகங்கள் "முகத்தார் வீடு" 263 வாரங்கள் (ஐந்து வருடங்கள்) "கதம்பம்" (குறு நாடகங்கள்) 123 வாரங்கள் (இரண்டு வருடங்கள்) "பருவக்காற்று" 52 வாரங்கள் (ஒரு வருடம்) இவைகள் குறிப்பிடத்தக்கவை.

தற்பெருமைக்காக நான் கூறவில்லை இன்றுவரை எனது "முகத்தார் வீடு" "கதம்பம்" தொடர்கள் இலங்கை வானொலியில் பதித்த சாதனைகளை எவராலும் முறியடிக்கப்படவில்லை! இதற்கு சாட்சியம் கூறுமாப்போல் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலியின் எழுபத்தைந்தாவது (75) அகவையை முன்னிட்டு வெளியிடப்பட்ட மின் இளை ஒலி நாடாவில; (CD) பதிவாகியிருந்த ஒன்பது கதம்ப நாடகங்களில் மூன்று நாடகங்கள் என்னுடையதே!. இப்போதும் எனது சில நாடகங்கள் குறிப்பாக "முகத்தார் வீடு" ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறு ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நாடகங்களை மேலோட்டமாகக் குறிப்பிட்டுவிட்டேன். நான் தோன்றிய பிறா் நாடகங்களையும் குறிப்பிட்டே ஆகவேண்டும் இல்லையெனில் நாடகங்கள் என்னும் வட்டத்திற்குள் அவை அடக்கப்படாமல் போய்விடுமோ என்னும் பயக்காடேதான்!

நான் நடித்த பிறா் மேடை நாடகங்கள் எனக் குறிப்பிடுகையில் நண்பன் வரணியூரானின் "கறுப்பும் சிவப்பும்" "அசட்டு மாப்பிள்ளை" "ஆசைமச்சான்" கமலாலயத்தின் "பாசச்சுமை" டாக்டா் கோவூரின் "நம்பிக்கை" எஸ். பொ. அவா்களின் சில ஓரங்க நாடகங்கள். அங்கையன் கைலாயநாதனின் "கடல்க்காற்று" இளம்பிறை ர.்.மானின் "ஞானம்" "தானம்" "கானம்" கே.எம் வாசகரின் "தணியாத தாகம்" "சுமதி" "மனிதவலை" போன்றவை. இன்னும் ஓரிரு நாடகங்கள் இருக்கின்றன, ஆனால் எனது மூளையைக் கசக்கிப் பிழிந்தும் இப்பொழுது நினைவிற்கு வர மறுக்கின்றது. காரணம் எனது வயோதிபத்தினால் ஏற்பட்ட மூளை வறட்சியும், அத்தோடு, பல நோய்களுக்கு எனது உடல் வாசஸ்த்தலமாகிவிட்டதுமே!

எனக்கு வயது இப்போது எழுபத்தி ஒன்பது (79) காலதேவனின் வடுக்கோடுகள் வதனத்தில் துலாம்பரமாகப் பிரகாசிக்கின்றன… சுருக்கு விழுந்த கன்னங்களுடன் பல வருடங்களாக நான் நீவி வளா்த்த கொடுவா மீசையும் முக்கால்ப்பகுதி நரைத்துவிட்டது. இப்பொழுதெல்லாம் ஊன்றுகோல்தான் எனது உயிா்த்தோழன்! என்ன செய்வது 2005ல் எனது துணைவியாா் மண்ணுக்கு விதையாகிய பின்னா் ஏற்பட்ட தனிமையால் விரக்தி என்னை ஆட்கொண்டு விட்டது. இது இயற்கை "நானே எனக்குப் பகையானேன்! இந்த மானிலத்தில் தனி மரமானேன்!" மீண்டும் தொடா்கின்றேன்.

மேற்கூறிய நாடகங்களில் நான் பேசிய வசனங்கள் இன்னும் என்னை மகிழ்விக்கின்றன… "அசட்டு மாப்பிள்ளை"யில் நான் மலேயன் பென்சினீயா் (Malayan Pensioner) மாா்க்கண்டா் என்னும் பாத்திரத்தில் நடித்தேன். எனது மகள் மாலதிக்கு தமிழ் சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு பண்டிதரை நியமித்துவிட்டு அவரிடம் சொல்வேன் "மிஸ்ட்டா் பண்டிதா் நீா் படிப்பிக்கவேண்டியது தமிழ் மட்டும்தான்! மாலதி எனது ஒரே செல்ல மகள், பருவமங்கை, நீா் எட்டி நின்றே சொல்லிக் கொடுக்க வேண்டும். திருக்குறளை விட்டு ஏதாவது கறள், கிறள், என்றால் என் டபிள்ப் பறல் (Double Barrel Gun) பதில் சொல்லிவிடும் ஜாக்கிரதை" என்பேன். "பாசச்சுமை" நாடகத்தில் நான் கோடீஸ்வரா் தாமோதரம்பிள்ளை பாத்திரம் ஏந்துகின்றேன். எனது ஒரே மகள் சாந்தி சா்வகலாசாலையில் சக மாணவன் ஒருவனைக் காதலிக்கின்றாள். தந்தை நான் தடுத்தும் சாதி,மத, பேதம், தராதரம், அந்தஸ்த்து, இவை எல்லாவற்றையும் பின்தள்ளி முன்னிலை வகித்துவிடுகின்றது காதல்! தந்தை பங்குபற்றாத திருமணம் இனிதே நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுத்தல், மகளை விட்டுப் பிரிந்த துயரம், மனதைக் கல்லாக்கிக்கொண்டு ஒருநாள் மருமகன் இல்லம் செல்கின்றேன், அங்கு நான் கண்ட காட்சி என்னைத் திகைக்க வைக்கின்றது! "மகளே சாந்தி நன்றாக இருக்குதம்மா உன் குடும்பமும் பொருளாதாரமும்! உன் மாதாந்த வருமானம் இருநூற்றி ஐம்பது மட்டுமே! கோடீஸ்வரன் தாமோதரம்பிள்யின் ஒரே மகள் வெறும் கோடிக்குள் கிடந்து கோலாச்சுது! (வேதனைச் சிரிப்பு)" சாந்தி கோபமாகப் பேசுவாள் "டடி வீடு தேடிவந்து என்னையும் என் குடும்பத்தையும் கேவலமாகப் பேசுவதென்றால் மகள் தந்தை என்ற உறவே அற்றுப்போகட்டும்! சந்திக்க நேர்ந்தால் தூரத்தில் நின்று மகளே என்று கூப்பிட்டால் நானும் டடி என்றே அழைத்துவிடுகின்றேன். இந்த உறவு மட்டும் இருந்தால் போதுமானது." என்பாள். நான் ஒரு இருதய நோயாளி இந்த திடீர் அதிர்ச்சியால் மேடையில் மூர்ச்சையாகி வீழ்ந்து மரணமடைகின்றேன்! இப்படியாக அந்தக் காட்சி அமைந்திருந்தது. அதன் மறு பிரதிபலனோ என்னவோ? இப்போ மூன்று முறை காலனோடு உறவாடி மீண்ட இருதய நோயாளி நான்.

இப்போதுதான் ஞாபகம் வருகின்றது எனது நண்பர் R.S.காசிநாதன் அன்று கொழும்பிலே R.R.நாடக மன்றம் நடாத்தி வந்தவர். அவருடைய நாடகங்களிலும் சிறு சிறு பாத்திரங்கள் ஏந்தியிருக்கின்றேன். அது கொழும்பில் எனது ஆரம்பகாலம். அன்று நான் நடித்த நாடகங்களின் பெயர்கள் அனைத்தும் ஞாபகமாக இருந்தபோதும் இந்தவேளை எங்கோயோ தலைமறைவாகிவிட்டது!

நண்பர் வேலணை வீரசிங்கம் Brownson Coffee உரிமையாளர். கமலாலயம் நாடக மன்றம் மூலமாக அளித்திருந்த Dr.கோவூரின் நம்பிக்கை என்னும் நாடகத்தில் வயது முதிர்ந்த குடும்பஸ்த்தன் கந்தவனம் என்னும் பாத்திரத்தில் நடித்தேன். என் ஒரே மகள் கமலாவிற்கு பேய், பிசாசு பிடித்த பாணியில் ஒரு நோயாளி. நாடாத வைத்தியமுமில்லை, வேண்டாத தெய்வங்களும் இல்லை! எனது குடும்ப நண்பர் ஒருவர் மூலமாக Dr. கோவூரின் அறிமுகம் கிடைக்கின்றது. "கோவூர் ஐயா இந்தக் கந்தவனம் கந்தறுந்த வனமாகியிட்டான்! இவளுக்கு வைத்தியம் பார்த்தே எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டது! நான் கையெடுத்த தெய்வங்கள் எல்லாம் கை,விரித்து விட்டன! உங்களைத்தான் நம்பியிருக்கிறன்....!" சோகம் இளையோடிய நாடகமிது.

எனதிந்த வயது முதிர்ந்த, பல்வேறு நோய்கள் ஆட்கொண்டிருக்கும் இவ்வேளையிலும் இந்த எனது நிஜங்களின் மீழ் தரிசனங்கள் பதிவேடாக வேண்டும் என்ற என்னை முற்று முழுதாக நேசிக்கும் ஒரே ஜீவன் வேறு யாருமல்ல! நான் "ஆஸ்த்தான கவிஞன்" "சமஸ்த்தான கவிஞன்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செல்லமாக அழைக்கும் "கவிவேள்" திருமிகு வண்ணை தெய்வம் அவர்கள் பாச்சிய ஊட்டச்சத்தே இந்த நூலின் தோற்றுவாய்.

மேலோட்டமாக மேடை நாடகங்களைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டேன். இனி இணைந்த கலைஞர்கள், வழிநடத்தியவர்கள், வழி வகுத்தவர்கள் ஆகியோரைப்பற்றிக் குறிப்பிடுமுன் "இலங்கை வானொலி" "தொலைக்காட்சி" "திரைப்படம்" ஆகியவற்றைஈக் குறிப்பிட்டுவிட்டால் இணைந்தவர்களின் விவரணத் தொகுப்பு இலகுவாக இருக்கும்.

எனது சொந்த மண்ணான ஈழ மண்ணை விட்டு அகதியாக வெளியேறிய பின்னர் இந்தியாவின் தமிழ்நாடு, பிரான்ஸ், ஆகிய நாடுகளில் எனது கலைப்பயணம் முடிவத்தியமாக முற்றுப்பெறும்.

நான் நடித்த நாடகங்கள் இலங்கையில் வடக்குக் கிழக்கு மேலோட்டமாக கொழும்பில் பல்வேறு மண்டபங்களிலும் சக்கைபோடு போட்டிருக்கின்றன. கொழும்பைப் பொறுத்தவரையில் Saraswathi Hall, Ramakrishna Hall, Kathiresan Hall, இவைகளே முன்னிலை வகித்தன. வடக்குக் கிழக்கில் எல்லா மூலை முடுக்குகளிலும் குறிப்பாக கல்லூரிகள், பிரபலமான இந்து ஆலயங்கள் எவையும் தவறியதில்லை. கல்லூரிகள் என்று குறிப்பிடும் பட்சத்தில் வடமாகாணத்தில் யாழ் வீரசிங்கம் மண்டபம், மற்றும் Jaffna Hindu College, St Patricks College, Ilavalai Henrys College,Ilavalai Holy FamilyConvent, K.K.S.Nadeswara College, Atchuvely Christian College,Chavakacheri Driberg College, Karainagar Handu College, KarainagarYarlton College, Velani Central Collega; Saravanai Rajeswarai Vidyalayam, Kayts St Antonys College, ஆகியவன மட்டுமே எனது ஞாபக சக்திக்கு உட்பட்டவை. இம் மேடைகளை ஆக்கிரமித்துக் கொண்டவை எனது நாடகங்கள், வரணியூரானின் நாடகங்கள், கமலாலய கலைக்கழக நாடகங்களே.

கீழ்மாகாணத்தில் விளையாட்டு மைதானங்கள், பொது கலைக்கூட மண்டபங்களைத் தொடுமுன் அந் நாடகங்களைப் பொறுத்தமட்டில் அவைபற்றி சில கட்டுமானங்களைக் குறிப்பிட்டால் சுவார்சியமாக இருக்கும். நாடகங்களைப் பொறுத்துத்தான் நிதி பற்றிய பேரங்கள் முன்வைக்கப்படும். ஒரு நாடகத்தை உள்ளடக்கி நடிக நடிகைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே உபயகாரர்களிடம் நிதி அறவிடல் தீர்மானிக்கப்படும். கல்லூரிகளின் நிதிக்கென்றால் ஓர் தொகை, நிதி சேகரிப்பு மன்றத்திற்கென்றால் வேறொரு தொகை, Lions Clup, Rotarians Clup ஆகியனவற்றின் களியாட்விழா என்றால் வேறு தொகை, கோவில் கும்பாபிசேகங்களுக்கென்றால் பிறிதோர் தொகை, திருவிழாக்கழுக்கென்றால் வேறோர் தொகை, இப்படியாக கட்டணங்களை அறவிட்டுக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நாடக நடிகர்களின் ஊதியம் உட்பட போக்குவரத்துச் செலவு, உணவு, தங்குமிட வசதிகள் அனைத்தும் உபயகாரரே சுமைதாங்கி. நாடகங்களுக்கென கிடைக்கும் தொகையில் எனது நாடகமாயிருந்தாலும்சரி அல்லது வேறு மன்றங்களின் நாடகங்களாயிருந்தாலும்சரி நாடகக் கர்த்தாக்களுக்கே இதர கலைஞர்களைவிட சற்று அதிகமாக ஒதுக்கப்படும். ஏனைய கலைஞர்களுக்கு மிகுதி வரவில் சரிசமமான பங்கீடு வழங்குவதே சம்பிருதாய கடைப்பாடக இருந்து வந்தது.

எங்கள் நாடகங்கள் பிரபல்யம் அடையத்தொடங்க கீழ் மாகாணம், குறிப்பாக மட்டுநகர், திருகோணமலை, ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரபல்யமான சிற்றூர்களிலும் இந் நாடகங்கள் வேரூன்றத் தொடங்கிவிட்டன. எனது நாடகங்களில் குறிப்பாக "சண்டியன் சின்னத்தம்பி" "போச்சடி பத்தாயிரம்" "கோப்பாயிலிருந்து டுபாய் வரை" (Kopay To Dubai) வரணியூரானின் "அசட்டு மாப்பிள்ளை" "ஆசை மச்சான்" கமலாலயத்தின் "பாசச்சுமை" "நம்பிக்கை" போன்ற நாடகங்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஏன் கொழும்பு மாநகரிலும் பிரபல்யமடையத் தொடங்கிவிட்டன.

அக்காலத்தில் கோயில் திருவிழாக்களில் "சின்னமேளம்" என அழைக்கப்படும் தென் இந்திய கவர்ச்சி நடனத் தாரகைகள் இறக்குமதி செய்யப்பட்டு சுவாமி ஊர்வலத்திற்கு முன் நிகழ்வாக இடம்பெற்று வந்தது.! காரணம் சுவாமி தரிசனத்திற்கும் மேலாக சின்னமேளம் பார்ப்பதற்கு பக்தகோடிகள் முண்டியடித்துக்கொண்டு அதிகாலைவரை கண் விழித்துக் காத்திருப்பார்கள். சின்னமேள நிகழ்ச்சியை ஆரம்பத்திலேயே வைத்து முடித்துவிட்டால் சுவாமி ஊர்வலத்திற்கு வடம் பிடிப்பதற்குக்கூட ஆட்களுக்கு தட்டுப்பாடாகிவிடும் என்பதால்த்தான். ஆனால் காலக்கிரமத்தில் நாடகங்கள் பிரசித்தி பெறவே படிப்படியாக சின்னமேள மோகமும் மறையத்தொடங்கி நாடகங்களே மக்கள் இராட்சியம் ஆகிவிட்டுது என்றே கூறலாம்.

இந்த நாடக காண்டத்தை முடிப்பதற்குள் பல சுவாரசியமான நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தும் ஒரு சிலவற்றையாவது குறிப்பிடவேண்டும் என்ற ஆவல் மேலோங்கி நிற்கின்றது. அதில் ஒன்று மானிப்பாயில் பிரசித்தி பெற்ற மருதடிப் பிள்ளையார் கோவில் உற்சவத் திருவிழா. ஆறாம் திருவிழா உபயகாரர் தெற்கு வீதியில் மேடையேற்றுவதற்கு எனது "சண்டியன் சின்னத்தம்பி" நாடகத்தை வரணியூரானுடன் பேசி ஒப்பந்தம் செய்து முற்பணமும் கொடுத்துவிட்டனர். அதே நேரத்தில் ஏழாம் திருவிழா உபயகாரும் எனது அதே "சண்டியன் சின்னத்தம்பி" நாடகத்தை வடக்கு வீதியில் இடம்பெற வேண்டுமென பிடிவாதமாக வரணியூரான் வசம் முற்பணத்தை ஒப்படைத்துவிட்டார். எமக்கு ஒரே குதூகலம். ஒரே பயணத்தில் இரு நிகழ்ச்சிகள்! இரட்டித்த வருவாய்! நடிகர்கள் எல்லோருக்கும் பேரானந்தம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாங்கள் கொழும்பில இருந்த வேளையில் மருதடி ஆலய மரக் கிளைகளிலே ஒலித்த ஒலிபெருக்கிகள் இருநாள் நிகழ்ச்சிகளையும் வர்ணிக்க இரு உபயகாரர்களும் தனித்தனியாக கொழும்பு வந்து சேர்ந்தனர். தனித்தனியாக வரணியூரான் சகிதம் என்னைச் சந்தித்தனர். ஆறாம் திருவிழாவில் "சண்டியன் சின்னத்தம்பி" மேடையேற்றப்படக்கூடாது என்பது ஏழாம் திருவிழா ஊபயகாரரின் வேண்டகோள்! அதற்கான கைலஞ்சமும் வரணியூரானிடம் கொடுக்கப்பட்டது!. இதேபோல் ஆறாம் திருவிழா உபயகாகரரும் ஏழாம் திருவிழாவில் இந் நாடகம் இடம்பெறக்கூடாது என அவரும் ஒரு சிறு தொகையை லஞ்சமாகக் கையளித்தார்! எனது மனச்சாட்சி என்னை உறுத்தியது. நம்பிக்கைத் துரோகமான செயல் என இரகசியமாக வரணியூரானிடம் கூறினேன். "மச்சான் யேசு நாங்கள் நாடகம் போட மருதடிக்குச் சென்றால் நிச்சயம் சாத்து எங்களுக்குத்தான்! பணத்தையும் கைநீட்டி வாங்கிப்போட்டு பேந்து அதைப் போடமாட்டம் எண்டு லஞ்சமும் வாங்கிப்போட்டம்! இதுக்குப் பரிசா அவங்கள் தாற அடி, உதைகளையும் வாங்கிவரவேணுமா? பேசாமால் மருதடிக்கு போகாமலேயே நின்றுவிடுவம்! உபயகாரர்கள் இருவருமே பேர் போன சண்டியன் சின்னத்தம்பிகளாம்! லீவு கிடைக்கேல்லையென அறிவித்துவிடுவோம் என்றான் வரணியூரான்.

வரணியூரானின் ஆலோசனைப்படி உபயகாரர்களுக்கு தந்தி மூலமாக தகவலை தெரிவித்துவிட்டோம். பின்னர் அறிந்தோம் ஆறாம் திருவிழாவில் "வெளிக்கடடி விசுவமடு" என்னும் நாடகமும், ஏழாம் திருவிழாவில் "வடக்கும் தெற்கும்" என்னும் நாடகமும் இடம்பெற்றதாக! எங்கள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்! இன்றுவரை அந்த இரண்டு உபயகாரர்களில் ஒருவரைத்தன்னும் நான் சந்திக்கவேயில்லை!!.

இன்னுமோர் சுவையான சம்பவம்! மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அடம்பன் என்னும் இடத்தில் ஒரு கோவில் கும்பாபிசேகம். அங்கு வரணியூரானின் "அசட்டுமாப்பிள்ளை" நாடகம். காட்சியமைப்பிற்காக விலாசமான வீட்டைப் பிரதிபலிக்கும் கதவுகளும், ஜன்னஎல்களும், இத்தியாதி இத்தியதிகளுடன் அனைத்தும் கமுகம் சிலாகைகளால் உருவாக்கி சுற்றிவர ஒழுங்காக நூல் ஓடி வர்ண நிற கடுதாசிகளால் அடங்கிலும் பசை பூசி ஒட்டி ஆலாவர்ணமாக Brownson Coffee வாகனத்தில் கலைஞர்கள் சகிதம் மாலைப் பொழுதாகும்போதே குறித்த இடத்தை அடைந்துவிட்டோம்.

கோவிலின் பின்புறமாக தரப்பாள் படங்குகொண்டு நான்கு பக்கமும் சுற்றிவர அடைத்த மறைவிடம் எங்களது தற்காலிக வதிவிடமானது. ஆறேழு சாக்குக் கட்டில்கள் எங்களது அனந்த சயனத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. சுற்றிவர பாலை மரங்கள், பாலைப்பழ நறுமணம் அள்ளி எறிய அட்டகாசமான இரவுபோசனம் முடிய, சயனம்! அதிகாலை மூன்று மணிக்குத்தான் எங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம். நடிகைகள் மூவரும் ஆரோக்கியமான பஞ்சணையை ஆக்கிரமித்துவிட நாங்கள் ஆண்கள் நால்வரும் எஞ்சிய ஒவ்வொன்றையும் சுவீகரித்துக்கொண்டோம். பெண் நடிகைகளுக்கு பாதுகாவலாக வந்த தாய்க்குலங்கள் எந்தவித நச்சரிப்பும் இல்லாது வரணியூரான் சயனித்த சாக்குக் கட்டிலுக்குக்கிழ் ஏதோ ஒரு விரிப்பை விரித்து உல்லாசமாகப் படுத்தக்கொண்டார்கள். அவர்கள் நித்திரையில் குறட்டைவிடும் சத்தம் நுளம்புகளின் ராஜகீதத்திலும் பார்க்க மேலோங்கி நின்றது. கோவிலின் கோபுர மின்சார விளக்கொளி எம்மை அரவணைத்துக்கொண்டது.

ஒரு சாமமிருக்கும் "என்ரை ஐயோ! அப்பனே முருகா" என்னும் ஆபத்து அலறல்ச்சத்தம்! எல்லோரும் திடுக்கிட்டு எழுந்து பார்க்கையில் அதுவும் ஒரு சுவையான நிகழ்வு! வரணியூரான் படுத்திருந்த சாக்குக் கட்டில் இரண்டாகப் பிளந்து திரைப்பட நடிகை அங்கமுத்துவின் தோற்றமுடைய ஒரு தாய்க்குலத்தின்மேல் வீழ்ந்துவிட்டார். தாய்க்குலத்திற்கு சுமாரான நோவு மட்டுமே!

வரணியூரான் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப்போல அதை ஒரு சாதாரண நிகழ்வாக மாற்றி அக்கம் பக்கம் பார்த்தார் ஒரே அதிர்ச்சி! காட்சியமைப்பிற்காக சிரமப்பட்டு கட்டிக் காவியந்த உபகரணச் சாமான்கள் எதுவையும் அங்கு காணவில்லை! கமுகம் சிலாகைகள் மட்டுமே எஞ்சியிருந்தன! விபரமறிந்து உபயகாகரர் பாய்ந்தோடி வந்து நிலமையை உணர்ந்து சொன்னார் "ஐயா பாலைப்பழ வாசனைக்கு கட்டாக்காலிக் கழுதைகள் கூட்டம் கூட்டமாக வருங்கள், கண்டதையும் சாப்பிடுங்கள். குறிப்பாக கடுதாசி என்றால் அதுகளுக்குப் பஞ்சாமிர்தம் ஐயா! ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ வேறு விதத்திலை உங்கடை உபகரணங்கள் உயிர் பெற்றுவிடும்" என்றார். உடனேயே அட்டம் அயலிலுள்ள மங்கையர்களின் சேலைகளை வரவழைத்து தமது உதவியாளர்களைக்கொண்டு காட்சி உபகரணங்களை கவர்ச்சியாக ஒழுங்காக்கி தந்தும் விட்டார்.

நாடகம் பார்க்கத் திரண்டிருந்த பக்தகோடிகளை ஆனந்தத்தில் ஆழ்த்தியமையினால் கலைஞர்களுக்கு பாலைப்பழ பரிசில்களும் வழங்கினார்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி! எங்கள் கோஸ்ற்றியும் மகிழ்ச்சியோடு கொழும்பு திரும்பியது. அடுத்தவார வீரகேசரி வார இதழில் ஒரு சுவையான செய்தி பிரசுரமானது அது "அடம்பன் வட்டார வருவாய் அலுவலகம் (D.R.O. Office) காவலாளி தற்காலிக வேலை நீக்கம்! அண்மையில் இடம்பெற்ற அடம்பன் சித்திவினாயக கும்பாபிசேக்தினன்று அசட்டு மாப்பிள்ளை நாடகம் பார்ப்பதற்குச் சென்றிருந்த காவலாளி தவறுதலாக ஓர் கதவை அவசர மறதியால் பூட்டாமல் சென்றமையால் கட்டாக்காலி கழுதைகள் அலுவலகத்திற்குள் சென்று முன்னூறு (300) அரிசிக்கூப்பன்களை பதம் பார்த்துவிட்டு சென்றுவிட்டன. (300 Rice Ration Cards) வரணியூரான் இச், சம்பவத்தை தொலைபேசி மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக்கூறி "மச்சான் யேசு தெரிஞ்சோ, தெரியாமலோ இனிமேல் "அசட்டு மாப்பிள்ளை" நாடகத்தை மன்னார் மாவட்டத்திற்கு கொண்டு செல்வதே இல்லையென்றான்'' சிரித்துக்கொண்டே.

இப்படியாக ஏராளமான நகைச்சுவைச் சம்பவங்கள் இன்னமும் எனது ஞாபகத்தில் இருக்கின்றன. மேலோட்டமாக இவை இரண்டும் போதும் என நினைக்கின்றேன். மேடை நாடகங்கள்பற்றி வெகு சுருக்கமாகக் கூறிவிட்டேன். நான் பங்கேற்ற மற்றும் ஊடகங்களையும் கூறி முடித்தபின் மேடை, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி என்பவற்றை அழகாக அலசிவிட்டு இந்த நான்கு படலங்களிலும் பங்கேற்ற கலைஞர்கள், நெறியாளர்கள், வழி நடத்தியவர்களை ஒவ்வொருவராக வர்ணிப்பதுதான் நான் அவர்களுக்கு கொடுக்கும் மரியாதை என நினைக்கின்றேன். இந்த நூலின் பொருளடக்கத்தை தத்தரூபமாக எழுத்தில் வடிக்கமுடியாதென்பது எனது சிந்தனைக்கெட்டிய தீர்க்கமான முடிவு. ஒவ்வொரு கலைஞர்களையும் குறிப்பிடும்போதும் ஏராளமான சுவார்சியமான நிகழ்வுகள் இருந்தும் ஒரு சிலவற்றை எழுத்தில் வடித்தால் வாசனையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் என்பது எனது எதிர்பார்ப்பு. ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் தரிசனங்களையும் வரையும்போதும் அவர்களது பெயர்கள், இடங்கள், காலங்கள், விளைவுகள் யாவும் தத்தரூபமாகவே இருக்கும். இது குறிப்பிடப்படவுள்ள ஏனைய நட்புக் கலைஞர்களை மகிழ்ச்சியிலும் ஆழ்த்துமே தவிர எவரின் மனங்களையும் புண்படுத்தாது என்பதும் எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

என்னுடன் இணைந்த கலையுலக நண்பர்கள், நண்பிகளே நான் ஏதாவது தவறுதலாக எழுதியிருந்தால் மன்னித்துவிடுங்கள். மெழுகுவர்த்தி தான் அணையுமுன்னர் பிரகாசமாக ஒளிதரும் என்பது யாவரும் அறிந்த உண்மையே!

அடுத்துவரும் காண்டம் இலங்கை வானொலி. இந்த ஊடகத்தில்த்தான் நான் ஏராளமான கலையுலக நண்பர்களைச் சம்பாதித்தேன். மேடை நாடகங்கள் எனக்களித்த நூற்றுக்கணக்கான நேயர்களிலும் பார்க்க இலங்கை வானொலி ஆயிரக்கணக்கணக்கில் நேயர்களை சம்பாதிக்கும் விளைநிலமாகவே இருந்தது!. இதோ இலங்கை வானொலிக்குள் நுளைகின்றேன் பின்தொடருங்கள்!!.

இலங்கை பாராளமன்றத்திற்க்குக்கூட ஓரிரு வாக்குகள் வித்தியாசத்தில் தெரிவு செய்யப்பட்டுவிடலாம்! ஆனால் நான் விரும்பிய இலங்கை வானொலிக்குள் நுளைந்துவிடவேண்டும் என்ற எனது ஆசை முயலுக்கு கொம்பு முளைத்த கதையாகவே இருந்தது! பின்பு அது நிறைவேறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் 1966ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதி இங்கேதான் எனது கலைத்துறை வாழ்வில் திருப்புமுனை ஆரம்பமாகியது.

இந்த விளைநிலமான இலங்கை வானொலிக்குள் நிர்வாகத் திறமை கொண்டவர்கள், கலைத்துவம் மிகுந்தவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பாடலாசிரியர்கள், நடிகர்கள், செய்தித் தயாரிப்பாளர்கள், செய்தி வாசிப்பவர்கள், அறிவிப்பாளர்கள், இசைக்கலைஞர்கள், கிராமிய-விவசாயம் தொடர்பான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், தகுதிகாண் பணிப்பாளர்களென அனைத்திலும் திறமையானவர்களை உள்ளடக்கிய பல்கலைக் கழஞ்சியமாக இலங்கை வானொலி விளங்கியது என்று சொன்னால் மிகையாகாது.

முதலில் நான் சந்தித்த திறமைசாலிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், இயக்குனர்கள் பட்டியலை எனது நினைவிற்குத் தெரிந்தவரை முடிந்த அளவு ஞாபகப்படுத்தி அவர்களது பெயர்களை வரிசைப்படுத்திவிட்டு பின்பு அவர்களில் முக்கியமானவர்களோடு எனது ஈடுபாடு, வளர்ச்சி, அவர்கள் மூலமாக எனக்குக் கிடைத்த பெயர், புகழ், சுவாரிஸ்யமான சம்பவங்கள் போன்றவற்றை இரைமீட்டி நீங்களும் எனது மகிழ்ச்சியிலும், துன்பத்திலும், துயரத்திலும் பங்கெடுத்துக்கொள்ளும் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்து இந் நூலினை முழுமை பெறச்செய்யவே விரும்புகின்றேன்.

1966ம் ஆண்டு இலங்கை வானொலிக்கு தேர்வுப் பரீட்சைக்கு தோன்றிய முதல்நாளே நான் சந்தித்த ஒரு மறக்கமுடியாத கலைஞர்தான் அப்புக்குட்டி T.ராஜகோபாலன். இந்த இனிய நண்பன் எனது இறுதிக்காலம் வரையும் என்னுடனும், எனது குழந்தைகளுடனும், பாசத்துடனும், நேசத்துடனும் வாழ்ந்த விபரங்களை ஏனைய கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுவிட்டு தொடர்வேன். அது எனது தலையான கடமையும்கூட. எங்கள் இருவருக்கும் நட்பு ஆரம்பமான விளைநிலம் இந்த சக்திவாய்ந்த இலங்கை வானொலிதான்.

வானொலிக்குள் நான் தெரிவுசெய்யப்பட்ட காலம் வசந்த காலம்! என்னுடன் 25 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர் இப்பொழுதும் எனது இனிய நண்பராக விளங்கும் அப்புக்குட்டி - T.ராஜகோபாலன். 1966ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதி ஆரம்பமாகிய எங்கள் நட்பு ஆழமானது, இறுக்கமானது, இதயபூர்வமானது.

நாங்கள் மேடை நாடகங்களை அரங்கேற்றுவதற்கும் இந்தச் சந்திப்புக்களும், இலங்கை வனொலிக் கலைஞர்களும் காரணமாக இருந்தார்கள். "கமலாலயம்" என்னும் பெயரில் பல கலைஞர்களை வரணியூரான் S.S.கணேசபிள்ளையின் பிரதி நெறியாழ்கையில் மேடையேற்றினோம். வான் பரப்பில் ஒலிபரப்பாகும் குரலுக்குரியவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினரைப்போல பழகினோம். ஆரோக்கியமான போட்டிப் பிரதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதித்தந்த இயக்குனர்களின் கண்காணிப்பில் தயாரிக்கப்பட்ட பல நாடகங்களில் நடித்திருப்பதில் பெருமையடைகின்றேன்.

1966களிலிருந்து நேயர் வட்டம் எம்மை நெருங்கிவரத் தொடங்கியது. பல பிரபல பாடசாலைகளின் தமிழ் மன்றத்தினர் என்னிடம் நாடகப்பிரதிகளை வாங்கி மேடையேற்றி என்னை கௌரவித்தமையை நான் இன்றும் நினைவில் நிறுத்தி மகிழ்ச்சி அடைகின்றேன்.

வானொலியில் பலவிதமான தயாரிப்புகளில் எனது பங்களிப்பும், பங்கெடுப்பும் அமைந்தது சிறப்பெனலாம். ஒரு மணித்தியால நாடகங்கள், அரை மணித்தியால நாடகங்கள், ஆகியனவற்றுடன் கதம்பம், மத்தாப்பு, குதூகலம், போன்ற நகைச்சுவை நாடகங்களுக்காக நூற்றுக்கணக்கில் பிரதிகள் எழுதியிருக்கின்றேன். பலதரப்பட்ட திறமைசாலிகள் தங்கள் கற்பனையில் தோன்றிய கருத்துக்களை நாடக வடிவமாக்கியதால் அவை வானலையில் ஒலிபரப்பப்பட்டபோது ஒரு தாய்க்கு நடைபெற்ற முதல் பிரசவம் போன்றதொரு உணர்வு எப்பொழுதுமே கிடைத்ததெனலாம்.

நான் தேர்வுப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு இலங்கை வானொலிக்குள் நுளையும்போது அமரர் "கலாநிதி" நாவற்குழியூர் நடராசா அவர்கள் தமிழ்ச்சேவை பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவரின் நிர்வாகத்தின் கீழ் பல திறமைசாலிகள், தயாரிப்பாளர்களாக, இசைக் கட்டுப்பாட்டாளர்களாக, நாடகத் தயாரிப்பாளர்களாக, அறிவிப்பாளர்களாக, பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் நினைவுகளில் முக்கியமான ஒரு சிலரின் பெயர்களை என் நினைவுகளுக்கமைய இங்கு தருகின்றேன்.

01- திரு.S.தியாகராஜன். (தமிழ்ச்சேவை கட்டுப்பாட்டாளர்)
02- திருமதி. பொன்மணி-குலசிங்கம். (இசைக் கட்டுப்பாட்டாளர். பின்னாள் பணிப்பாளர்)
03- திரு.சிவராஜா (அறிவிப்பாளர்)
04- திரு.S.K.பரராஜசிங்கம் (சிரேஸ்ர அறிவிப்பாளர்)
05- திரு.புண்ணியமூர்த்தி. (செய்தி வாசிப்பாளர்)
06- செல்வி.சற்சொரூபநாதன் (செய்தி வாசிப்பாளர்)
07- திரு.ராஜகுரு-சேனாதிபதி-கனகரத்தினம். (வர்த்தகசேவை -அறிவிப்பாளர்)
08- திருமதி- ராஜேஸ்வரி-சண்முகம். (அறிவிப்பாளர்)
09- திருமதி-பிலோமினா-சொலமன் (கலைஞர்)
10- திரு.B.H.அப்துல் ஹமீட் (அறிவிப்பாளர்)
11- திரு.ஜோஜ்.சந்திரசேகரன். (நாடகத் தயாரிப்பாளர்-உதவி அறிவிப்பாளர்)
12- திரு.சிவஞானம். (கிராமசேவைத் தயாரிப்பாளர்)
13- திரு.திருஞானம் (தயாரிப்பாளர்- பின்னாள் பணிப்பாளர்)
14- திரு.விக்னேஸ்வரன் (ஒலிப்பதிவாளர்-நாடகத் தயாரிப்பாளர்)
15- திரு. (சானா)சண்முகநாதன் (பிரதம நாடகத் தயாரிப்பாளர்)
16- திரு.அருணா-செல்லத்துரை (ஒலிப்பதிவு உதவியாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17- திரு.K.M.வாசகர். (ஒலிப்பதிவு உதவியாளர்- நாடகத் தயாரிப்பாளர்)
18- திரு.S.இராமதாஸ் (கலைஞர் எழுத்தாளர் திரைப்பட இயக்குனர்)
19 திருமதி.அருந்ததி ஸ்ரீரங்கநாதன். (இசைக் கட்டுப்பாட்டாளர். பின்னாள் பணிப்பாளர்)
20- திரு.S.செல்வசேகரன் (கலைஞர்)
21- திரு.K..விக்டர் (கலைஞர்)
22- திரு.லடீஸ் விரமணி (கலைஞர்)
23- திரு.K.S.பாலச்சந்திரன் (கலைஞர்)
24- திரு.S.S.கணேசபிள்ளை (கலைஞர்)
25- திரு.டேவிற்-ராஜேந்திரன் (முகத்தார்வீடு தயாரிப்பாளர்)
26- திரு.ஐயாத்துரை (கலைஞர்)
27- திரு.ஸ்ரீஸ்காந்தராஜா (விவசாயத் திணைக்களத் தயாரிப்பாளர்)
28- திரு.சில்லையூர்-செல்வராசன் (கவிஞர் எழுத்தாளர் தயாரிப்பாளர்)
29- திரு.R.மார்க்கண்டு (கலைஞர்)
30- திரு.P.N.Rஅமிர்தவாசகம். (கலைஞர்)
31- திரு.அங்கையன்-கயிலாதநாதன் (தயாரிப்பாளர்)
32- செல்வி.ஜெயஜோதி (கலைஞர்)
33- திருமதி.விஜயாள்-பீட்டர் (கலைஞர்)
34- திரு.R.காசிநாதன் (கலைஞர்)
35- திருமதி.சுப்புலக்ஸ்மி-காசிநாதன் (கலைஞர்)
36- திருமதி.மணிமேகலை-ராமநாதன் (கலைஞர்)
37- செல்வி.சந்திரபிரபா -மாதவன் (கலைஞர்)
38- திரு.எழில்வேந்தன் (கலைஞர் - விளையாட்டுத்துறை தயாரிப்பாளர்)
39- திரு.மதியழகன் (பின்னாள் பணிப்பாளர்)
40- திரு.சிவபாதசுந்தரம் (முன்னாள் பணிப்பாளர்)
41- திருமதி. ராஜேஸ்வரி- சண்முகம் (கலைஞர் அறிவிப்பாளர்)
42- திருமதி.கமலினி-செல்வராஜன் (கலைஞர்)
43- செல்வி. சாமினி-ஜெயசிங்கம் (கலைஞர்)
44- திரு.A.E.மனோகரன் (பாடகர் தயாரிப்பாளர்)
45- திரு.M.A.குலசீலநாதன் (இசைப்பகுதிப் பொறுப்பாளர்)
46- திரு.கருணாகரன் (இசைப்பகுதிப் பொறுப்பாளர்)
47- திருமதி.புவனலோசினி (அறிவிப்பாளர்)
48- திருமதி.கோகிலா-சிவராஜா (அறிவிப்பாளர்)
49- திரு.நடராஜசிவம் (அறிவிப்பாளர்)
50- திரு.ஜோக்கிம்-பெர்னாண்டோ (அறிவிப்பாளர்)
51- திரு.K.S.ராஜா (அறிவிப்பாளர்
52- திரு.இளையபாரதி (சிவசோதி) (அறிவிப்பாளர்)
53- திரு.சர்வானந்தா-மயில்வாகனம் (அறிவிப்பாளர்)
54- திரு.S.P.மயில்வாகனம் (சிரேஸ்ர அறிவிப்பாளர்
55- திருமதி.செந்தில்மணி-மயில்வாகனம் (அறிவிப்பாளர்)
56- திரு.-ஸ்ரீதர்-பிச்சையப்பா (கலைஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


57- திரு.ரொசாரியோ-பீரிஸ். (கலைஞர்)
58- திரு.டொன்-பொஸ்க்கோ (கலைஞர்)
59- திரு.பண்டா-ஆறுமுகம் (கலைஞர்)
60- திரு.சோதிநாதன் (கலைஞர்)
61- திருமதி.செல்வம்-பெர்னாண்டோ (கலைஞர்)
62- செல்வி.ஜெயந்தி (கலைஞர்)
63- செல்வி.அமீனா-பேகம் (கலைஞர்)
64- திருமதி.சாரதா-வாசுதேவன் (கலைஞர்)
65- திரு.வாசுதேவன் (கலைஞர் தயாரிப்பாளர்)
66- திரு.சந்திரமோகன் (அறிவிப்பாளர்)
67- திரு.சி.சண்முகம் (எழுத்தாளர் அறிவிப்பாளர்)
68- திரு.S.ஜெயபாலன் (ஒலிப்பதிவு உதவியாளர்)
69- திரு.சு.ஜெயச்சந்திரன் (தயாரிப்பாளர்)
70- திரு.ஏ..நமசிவாயம் (நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்)
71- திரு.விமல்-சொக்கநாதன் (அறிவிப்பாளர் செய்தி வாசிப்பவர்)
72- திருமதி-யோகா-தில்லைநாதன் (அறிவிப்பாளர்)
73- திரு.S.சிவசுந்தரம் (கலைஞர்)
74- திரு.வாசுதேவன் (தயாரிப்பாளர்).............
75- திரு.தம்பிஜயா-தேவதாஸ் (எழுத்தாளர்)
76- திரு.இளையதம்பி-தேவானந்தா (தயாரிப்பாளர்)
77- திரு.அராலியூர் சுந்தரம்பிள்ளை (எழுத்தாளர்)
78- திரு.திவ்வியராஜா (கலைஞர்)
79- செல்வி-ஆனந்தராணி-இராசரத்தினம் (திருமதி-பாலேந்திரா- ஆனந்தரராணி)
80- அமரர்.கி.ராஜேஸ்வரன் (கலைஞர்)
81- திரு.சோக்கல்லோ-சண்முகம் (கலைஞர்)
82- திரு.பத்மநாதன் (சிறுவர்மாமா) (சிறுவர் முற்றம்)
83- திருமதி.விசாலாட்சி.ஹமீட் (அறிவிப்பாளர்)
84- திரு.S.கருணாகரன் (ஒலிப்பதிவாளர்)
85- அமரர்.S.பிராங்.புஸ்ப்பநாதன் (கலைஞர்)
86- அமரர்.டாக்டர் இந்திரகுமார் (கலைஞர்)
87 திரு.எஸ் சந்திரசேகரன் (கலைஞர்)
88 அமரர்.டிங்கிரி-சிவகுரு(கலைஞர்)

**பண்டாரவன்னியன் நாடகத்தில்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1979ல் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து விருது பெற்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நான் 'மரணம்' அடைந்ததும்
மகள் கதறி அழுதாள்!

கற்பனை முத்துக்கள்

மித்திரன் வாரமலர் 28-12-1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னையில் ஈழ அகதிகள் முகாம் ஒன்றில்



சென்னையில் ஈழ அகதிகள் முகாம் ஒன்றில் டாக்டர் ஆருண்கோபாலனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பிரசித்திபெற்ற இலங்கை வானொலிக்குள் நான் நுளையும்போது கடமையில் இருந்த இவர்களில் பலர் பதவி உயர்வுகள் பெற்று என்னுடைய நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். அவர்களில் பலர் என்னுடைய எழுத்து வெறிக்கு சரியான தீனி போட்டு என்னை உலகறியச் செய்தார்கள்! அவர்கள் அனைவர்க்கும் சிரம் தாழ்த்தி நன்றி செலுத்துவது எனது கடமையாகும்.

நிர்வாக அதிகாரியாக பல கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றினாலும் இந்த வானொலி நுளைவு என்னை உங்கள் எல்லோர் இல்லத்திலும் தினமும் வானலையில் சந்திக்கும் ஒரு கலைஞனாக ஏற்றுக்கொண்டதை நினைக்கும்போது இப்பொதும் எனது வரட்சியான நேரத்திலும் மறைந்த ஞாபகங்கள் துளிர்விட்டுப் பிரகாசிக்கின்றன. மனைவியை இழந்த எனது மனதிற்கு அமைதியைத் தருவது இதுபோன்ற பழைய நினைவுகளும், என்னால் உருவாக்கப்பட்ட நாடகங்களும், அதன் மூலமாகக் கிடைத்த பேரும் புகழும்தான்.

இந்த நூலை முழுமையாக எழுத எனக்குத் தளம் அமைத்துதந்து தங்கள் இதயத்திலும், இல்லத்திலும் ஒரு குழந்தையைப்போல பராமரித்து எனது எழுத்துக்களுக்கு மதிப்பும், கௌரவமும் தந்து இப்பொழுது நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் எனது வானொலி மற்றும் கலைத்துறை அனுபவங்களுக்குச் சொந்தக்காரர்களும், நிச்சயம் எனது செல்லக் குழந்தைகளும், அவர்களுக்கு அமைந்த வாழ்க்கைத் துணைவர்களுமே. குறிப்பாக ஜீவா இவள் எனது ஜீவனோடு நெருக்கமான செல்ல மகள்.

எனது எழுத்துக்களை அழியாத பதிவுகளாக அச்சேறுவதற்கு காரணமாக அமையப்போகும் எனது இனிய நண்பர்கள் வண்ணை தெய்வம், அப்புக்குட்டி ரி.இராஜகோபால் இருவரும் எனது நினைவுகாலம் வரைக்கும் எனது நினைவில் இருப்பார்கள்.

சந்தியாப்பிள்ளை யேசுறத்தினமாக ஒரு குறிப்பிட்டவர்களுக்கும், எனது குடும்ப உறவுகளுக்கும் அறியப்பட்ட என்னை "முகத்தார் யேசுரத்தினமாக தமிழ் பேசும் நல் உறவுகளுக்கு அறிமுகம் செய்து வைத்து என்னை ஒரு கலைஞனாக ஏற்றுக்கொண்டு சகல வழிகளிலும் புகழ் ஏணியின் உச்சத்திற்கு அழைத்து மகுடம் சூட்டிய பெருமை இலங்கை வானொலிக்கே உரித்தானது.

எனது வானொலிக் குடும்பத்திற்குள் நுளைந்த உங்களுக்கு என் நண்பர்களின் பெயர்ப்பட்டியலைப் பார்த்ததும் வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்திருக்கும். இது எனது வானொலிக் குடும்பத்தின் எண்ணிக்கையும், தகவலும் மட்டுமே. இனித் தொடர்வது எனது வளர்ச்சிக்கு வித்திட்ட இந்தக் குடும்பத்தில் உள்ளவர்களின் முக்கியமானவர்களைப் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.டேவிற் -ராஜேந்திரன்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அத்தனை சாந்தமான முகவசீகரம் கொண்ட இளைஞர் இவர்! திறமைக்கு மதிப்புக் கொடுத்தவர்கள் வரிசையில் இவரும் எனக்கு புகழ் சேர வழி காட்டியவர். இலங்கை வானொலிக்குள் நான் காலடி எடுத்து வைத்ததும் முதன் முதலில் எனது எழுத்தில் நம்பிக்கை வைத்து பிரதியாக்கப் பொறுப்பினை எனக்கு வழங்கியவர் திரு.டேவிற் - ராஜேந்திரன் அவர்களதான். அவருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

ஒரு வருடமல்ல! இரு வருடமல்ல! இலங்கை வானொலியில் ஐந்தரை வருடங்கள் தொடராக ஒலிபரப்பான என்னால் பிரதியாக்கம் செய்யப்பட்ட "முகத்தார் வீடு" நாடகத்திற்காக வானலையில் ஆரம்ப இசை தொடங்கியதுமே நேயர்கள் தங்களது எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு நாடகத்தை கேட்கத் தயாராகிவிடுவார்கள் என்பதனை அறிந்தும், நேரடியாக உணர்ந்தும் பெருமைப்படவைத்த இளைஞரிவர். முகத்தார் வீடு நாடகத்திற்காக ஆறுமுகத்தார் என்னும் முக்கிய பாத்திரத்தில் நானும், சரவணை என்னும் பாத்திரத்தில் திரு.எழில்வேந்தனும், ஏனைய அற்புதமான நடிகர்களும் பங்களிப்புச் செய்து வானொலியின் வரலாற்றில் ஐந்தரை வருடங்கள் ஒலிபரப்பாகி சாதனை புரிந்து பின்னர் ஆறுமுகமும் சுருங்கி நான் முகத்தாராக உருவெடுத்த வரலாறு இது. எனது இறுதி மூச்சுவரை முகத்தார் என்ற இந்த அற்புதமான பாத்திரமாகவே வாழ ஆசைப்படுகின்றேன்

**லண்டன் கந்தையா**

# திரு.(சானா)சண்முகநாதன்

மதிற்பிற்குரிய 'சானா'' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சண்முகநாதன் என்ற இந்த தயாரிப்பாளர் பிரபல எழுத்தாளர் அ.ந. கந்தசாமி அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்ட "மதமாற்றம்" என்ற நாடகத்தை தயாரித்து வழங்கி என்னை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றவர்.

அந்த நாடகத்தில் முதன் முதலாக எனது நண்பர்கள் அப்புக்குட்டி T.இராஜகோபாலன், விக்டர், செல்வசேகரன், இராஜேஸ்வரி சண்முகம், நடராஜசிவம், செல்வம் பெர்னாண்டோ, மரிக்கார் ராம்தாஸ் போன்றவர்கள் எல்லாம் இணைந்து நடித்திருந்தோம்.

திரு.சானா அவர்கள் லண்டன் BBC ஊடகத்தில் பிரத்தியேகப் பயிற்சி பெற்று நாடகத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்ற நாடகக் கலைஞர், இவர் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் பிரதம சீடராவார். இப்படிப் பல தகமைகள் கொண்ட இவரிடம் எனது முதல் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமானது மோதிரக் கையால் குட்டு வாங்கிய உணர்வை எனக்கு ஏற்படுத்தியது! தொடர்ந்து இவரது தயாரிப்பில் பத்தாவது கலையரங்கத்தில் இரசிகர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்ட மத்தாப்பு, கதம்பம், குதூகலம், போன்ற நகைச்சுவை நாடகங்களையும். தொடர்ந்து நண்பர்கள் மரிக்கார் ராம்தாஸ், அப்புக்குட்டி ரி.ராஜகோபாலன், K.S.பாலச்சந்திரன், S.S.கணேசபிள்ளை, திரு.சோதிநாதன், S.K.தர்மலிங்கம், திரு.மார்க்கண்டு, P.N.R..அமிர்தவாசகம், போன்றவர்களின் பிரதியாக்கங்களில் ஆரோக்கியமான போட்டிகளோடு வாரா வாரம் வானொலிக்குள் எமது பிரதிகள் பதிவு செய்யப்படுவது வழமையாகும்.

இந்தப் பிரதிகளில் எனது ஆக்கங்கள் முழுமையாக இளவாலை, அதைச் சுற்றியுள்ள ஊர்களில் நடக்கும் உண்மைச் சம்பவங்களை அதே பாத்திரப் பெயர்களுடன் உலாவரவிட்டு இரசிகர்களை மகிழ்வித்த காலமது. என்னைப் பொறுத்த வரையில் அது ஒரு பொற்காலம்.

எனது நாடகப் பிரதிகளில் அனேகமாக வேலிச்சண்டை, கிணற்றுப்பங்கு, எல்லைப்பிரச்சனை, சந்தையில் பேரம் பேசி மீன் வாங்கும் சம்பவங்கள், கள்ளுத் தவறணைகளில் நடக்கும் உரையாடல்கள் இவைகளை வைத்தே எழுதப்பட்டிருக்கும். இப்படியான உரையாடல் நாடகங்களில் முக்கியமாக..... வேலிப்பிரச்சனையில் எல்லையரக்கப்பட்ட கோபத்தில் அந்த எல்லைக் கதியால்களை வெட்டிச் சாய்க்கும்படி ஒருவர் உத்தரவிடுவார். இதை உண்மையென நம்பிய வானொலி நேயர் எனது பக்கத்து ஊரிலுள்ள ஒருசிலரை வாடகைக்கு அமர்த்தி அவர்களுக்கு குடிப்பதற்கு சோமபானம் எல்லாம் வாங்கிக்கொடுத்து பிரச்சனை கொடுத்த வேலிப்பிரச்சனையை தீர்க்க முற்பட்ட சுவையான சம்பவம் ஒன்று நினைவிற்கு வருகின்றது.

வேலி வெட்ட வாடகைக்கு ஒழுங்கு செய்யப்பட்டவர்களும், வாங்கிய பணத்திற்கு மூக்கு முட்ட குடித்துவிட்டுப் இரவு புறப்பட்டவர்கள் போதை அதிகமாகி வேலியை வெட்ட ஒழுங்கு செய்தவரின் இன்னொரு பகுதி (அதாவது பிரச்சனை இல்லாத) வேலியையும், கதியால்களையும் வெட்டித் துவம்சம் செய்துவிட்டு வந்து தூங்கிவிட்டார்கள். அடுத்தநாள் வேலியை வெட்டச்சொன்ன உரிமையாளர் வந்து பார்த்தபோது "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழி நினைவுக்குவர நான் எனக்குள்ளேயே சிரித்துக்கொண்டேன். அதன் பின்னர் இப்படியான பிரச்சனைகளை மிகக் கவனமாக எழுதவேண்டுமென எச்சரிக்கப்பட்டேன்.

சானா- சண்முகநாதன் அவர்களுக்குப் பின்பு நாடகத் தயாரிப்பாளர்கள் அருணா-செல்லத்துரை, திரு.P.விக்கினேஸவரன், ஜோஜ்-சந்திரசேகரன் ஆகியோர்களுடன் பணியாற்றியதைத் தொடர்ந்து கொழும்பில் பல நாடகங்களை மேடையேற்றி பலரது பாராட்டுதல்களையும் பெற்றிருந்த "தணியாத தாகம்" புகழ் திரு.K.M.வாசகர் அவர்கள் இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்புப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.சில்லையூர்-செல்வராசன்

நான் வியந்து நோக்கும் உயர்ந்த மனிதர்களில் சில்லையூரான் முக்கியமானவர்! காரணம் கலைத்துறையில், எழுத்துத் துறையில் சில்லையூரானைப் போன்ற ஒரு திறமைசாலியை நான் பார்த்ததே இல்லை! நாங்களெல்லாம் நாளை ஒலிப்பதிவாகப் போகும் நாடகத்திற்கான பிரதிகளை இன்றே நிறைவு செய்து தயாராக வைத்திருப்போம். சில்லையூரானோ நாடகம் ஒலிப்பதிவாவதற்கு ஒரு சில மணிநேரத்திற்கு முன்பாகத்தான் கலையகத்திற்கு வருவார். அங்கிருந்துதான் நாடகத்திற்கான பிரதிகளை எழுதுவார்! இது சில்லையூரானிடமிருந்த சிறப்புகளில் ஒன்று.

அமெரிக்க திரைப்பட நிறுவனம் ஒன்று இலங்கையில் தயாரித்த ஆங்கிலப்படம் ஒன்றில் சில்லையூரானும் நடித்திருந்தார். படப்பிடிப்பெல்லாம் முடிந்தபின்னர் அதன் தயாரிப்பாளர்கள் சில்லையூரானை அழைத்து' உங்களது ஊதியம் எவ்வளவு?" என வினாவினார்கள். அவர்களுடைய நினைப்பு இவர் இலங்கை நடிகர்தானே சில ஆயிரங்களுக்குள் முடித்துவிடலாம் என்பதாகும். சில்லையூரான் அவர்களிடம் கேட்டார் "இந்தப் படத்தில் நடிக்கும் உங்கள் கதாநாயகனுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கின்றீர்கள்?" என்று. "அது லட்சக்கணக்கான டாலர்கள்!" என்றார்கள். பின்பு கேட்டார் "அவர் படத்தில் எத்தனை நிமிடங்கள் வருகின்றார்?" என்று. பின்பு சொன்னார் நான் பதினெட்டு நிமிடங்கள் இந்தப் படத்தில் நடித்திருக்கின்றேன். அவர் நடித்த நிமிடங்களுக்கு எவ்வளவு ஊதியம் கொடுத்தீர்களோ அதே அளவு பதினெட்டு நிமிடங்களுக்கு எவ்வளவு வருமோ அவ்வளவு பணத்தை எனக்கும் தாருங்கள் என்றாராம்

அவர்கள் திகைத்துவிட்டார்கள்! "கதாநாயகன் "கொலிவூட்டில்" புகழ்பெற்ற நடிகர். நீங்கள் இலங்கை நடிகர்" என்று கூறிப்பாத்திருக்கின்றார்கள். சில்லையூரான் சொன்னாராம் "நானும் இலங்கையில் அவரைப்போன்ற புகழ்மிக்க நடிகர்தான்" என்று! பின்பு அதே அளவு ஊதியத்தைத்தான் பெற்றுக்கொண்டாராம். இதெல்லாம் சில்லையூரனின் ஆழுமையின் சிறப்பு.

பலருக்கும் தெரியாத ஒரு செய்தி "வாடைக்காற்று" திரைப்படத்தில் நான் நடித்திருந்த பொன்னுக்கிழவன் பாத்திரம் சில்லையூரான் எனக்குப் போட்ட பிச்சை! உண்மையில் அந்தப்பாத்திரத்தில் நடிப்பதற்காக முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சில்லையூரான்தான்! அவர்தான் 'இந்தப் பாத்திரத்திற்குப் பொருத்தமானவர் யேசுறட்ணம்தான'' எனக்கூறி தனக்குக் கிடைத்த அந்தப் பாத்திரத்தை எனக்குத் தந்த வள்ளல்!

இப்படியாக சில்லையூரானைப்பற்றிச் சொல்வதற்கு இன்னும் நிறையவே இருக்கின்றது. இவரின் துணைவியார் கமலினி அவர்களும் சிறந்த கவிஞர், அற்புதமான நடிகை. இவர்களெல்லாம் எனது மனதினில் இன்னமும் நிறைந்தே இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.திரு.K.M. வாசகர்

இந்தக் கலைஞர் தனது கல்லூரி நாட்களிலிருந்து கலை வாழ்க்கையை பூரணமாக ஏற்று நிறையவே பங்களிப்பு செய்திருக்கின்றார். ஒரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டால் அதை நிறைவாகவே செய்யவேண்டும் என விரும்புவர். இவரது எழுத்ததில், இயக்கத்தில் நான் பல நாடகங்களில் பங்களிப்புச் செய்துள்ளேன். வெறும் நகைச்சுவை நடிகனாகவும், எழுத்தாளனாகவும் இருந்த என்னை சிறந்த பயிற்சி கொடுத்து உணர்வு பூர்வமான நவரசம் ததும்பும் பிரதிகளை எழுதவைத்து நேயர்கள் மனங்களில் ஒரு நீங்காத இடத்தை பெற்றுத்தந்தவர் இந்த K.Mவாசகர் என்றால் அது மிகையில்லை. இதை நான் எழுதும்போது என்னை உச்சத்திற்கு கொண்டுவர விரும்பிய இந்த அரிய மனிதர் ஆண்டவனின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

இந்த நண்பன் (உரிமையோடு சொல்கின்றேன்) இலங்கை மக்கள் வங்கியன் விளம்பரத்திற்காக எனது இன்னொரு நண்பனான அமரர் சில்லையூர் செல்வராசனின் மூலக்கதைக்கு தனது மண் வாசனைத் தமிழில் வசனம் எழுதி, இயக்கி, இலங்கை வானொலி நேயர்களை உருகவைத்து அழவைத்த நாடகம்! "தணியாத தாகம்". இந்த நாடகத்தில் ஒரு குணசித்திர பாத்திரத்தில் நானும். மற்றும் அண்ணைறைற் கே.எஸ்.பாலச்சந்திரன், எஸ்.எஸ். கணேசபிள்ளை, விஜயாள் பீட்டர், செல்வநாயகி, தியாகராசா, கமலினி செல்வராசன், சாமினி ஜெயசிங்கம், எஸ்.கே.தர்மலிங்கம், கே.மார்க்கண்டு, அப்புக்குட்டி ரி.ராஜகோபாலன், சுப்புலட்சுமி காசிநாதன் போன்ற திறமைமிகு நடிகர்களெல்லாம் பங்கெடுத்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்பாகியது இன்னொரு சாதனையாகும்.

# திரு.சிவஞானம் (கிராமசேவை தயாரிப்பாளர்)

இவரும் ஒரு அனுபவமிக்க தயாரிப்பாளர் என் மீது நம்பிக்கை வைத்து முழுமையாக பிரதிகளை எழுதவைத்து என்னை நேயர்கள் மத்தியில் இடம்பெறச் செய்தவர்களில் இவரும் ஒருவர்.

இவரது சகோதரர் V.A.திருஞானம் அவர்களும் ஒரு சிறந்த நாடகத் தயாரிப்பாளர் ஆவார். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவில் "தேன்கூடு" என்னும் தொடரைத் தயாரித்து வெற்றி கண்டவர், இந்த இருவரும் எனது வெற்றிப்பாதைக்கு வித்திட்டவர்கள். இவர்களுக்கு இன்றும் நான் தலை வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரிக்கார் எஸ்.ராமதாஸ்.

இலங்கை வானொலியில் மட்டுமல்ல, நாடகத் துறையிலும், திரைவானிலும் சாதனை புரிந்தவர் தம்பி மரிக்கார் ராமதாஸ் அவர்கள். நல்ல எழுத்தாளர், நடிகர், எல்லாவற்றிகும் மேலாக நல்ல பண்பாளர். நகைச்சுவைக்கு மறுபெயர் ராமதாஸ் என்று சொன்னால் மிகையாகாது.

இவரின் பிரதி நெறியாழ்கையில் வானொலியிலும், மேடைகளிலும் சக்கைபோடு போட்ட நாடகமான “கோமாளிகள்” நாடகம் பின்னர் திரைப்படமாகி கொழும்பில் தொண்ணூற்றி ஒன்பது நாட்கள் ஓடி சாதனை புரிந்தது குறிப்பிடத்தக்கதாகும்!. அது போல இவரது “ஏமாளிகள்” என்ற மற்றொரு நாடகமும் திரைப்படமாகி ஐம்பது நாடகளுக்கு மேல் ஓடி வெற்றி கண்டிருந்தது. இந்த திரைப்படங்களில் எனக்கும் சந்தர்ப்பம் வழங்கி கௌரவித்திருந்ததை மறக்கமுடியாது.

## அமரர்.எஸ்.எஸ்.கணேசபிள்ளை

அமரர் வரணியூரான் S.S.கணேசபிள்ளை அவர்கள் மிகவும் அனுபவம் மிக்கதொரு கலைஞராவார். இவரது பிரதி நெறியாழ்கையில் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த பல நாடகங்களில் நடித்திருக்கின்றேன். அவற்றில் அனேகமான நாடகங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள மிகப்பெரிய அரங்கங்களில் அரங்கேறியிருக்கின்றன. கலைத்துறையில் ஒரு நிறைவான இடத்தைப்பெற்ற இவரது நட்பு எனக்குக் கிடைத்ததை நான் பெருமையாகக் கருதுகின்றேன்.

## கே.எஸ். பாலச்சந்திரன்

இவனும் எனது சகோதரக் கலைஞன். “அண்ணை றைற்” என்ற இவரது தனி நடிப்பு நாடகம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்டு சாதனை புரிந்திருந்தது அனைவரும் அறிந்ததே.

திறமைமிக்க இந்த கலைஞனுக்கு நகைச்சுவை, குணசித்திரம் இரண்டுமே கைவந்த கலையாகும்! “வாடைக்காற்று” திரைப்படத்தில் என்னோடு இணைந்து நடிக்கும்போது இவனின் திறமையை நான் நேரில் கண்டு பாராட்டியிருக்கின்றேன்.

தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் இந்தக் கலைஞன் அங்கும் தனது கலைப் படைப்புக்களால் புகழ்க்கொடி நாட்டிக்கொண்டே இருக்கின்றான். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் நட்பு மாறாத கலைஞனிவன்! அதற்கு ஒரு சிறு உதாரணம் அண்மையில் நான் கனடா சென்றிருந்தபோது தனது கலையகத்திற்கு என்னை அழைத்துச் சென்று என்னையும் கௌரவித்து, கனடா தொலைக்காட்சி ஒன்றில் தான் தயாரித்து வழங்கிக்கொண்டிருந்த "வைத்திலிங்கம், சோ" என்னும் நகைச்சுவைத் தொடரின் ஐம்பதாவது அங்கத்தில், அதில் பங்கேற்ற கலைஞர்களுக்கு எனது கைகளால் விருது வழங்கவைத்து என்னைப் பெருமைப்படுத்தியிருந்தான். எனது நல்ல நண்பர்களில் இவனும் ஒருவன்.

## P.விக்கினேஸ்வரன் (நிகழ்ச்சித் தயாரிப்பாளர்)

இலங்கை வானொலியில் என்னை நேசித்து தங்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டவர்களில் இவரும் ஒருவர். இலங்கை வானொலியில் இவரின் தயாரிப்பில் ஒலிபரப்பான பல நாடகளுக்கு நான் கதை வசனம் எழுதியிருக்கின்றேன். வானொலியில் மட்டுமல்லாது இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பல நாடகங்களையும் இவர் தயாரித்து வழங்கி எங்களுக்கும் ஆதரவாக இருந்த ஒரு சிறந்த படைப்பாளியாவார்.

தற்பொழுது இவரும் கனடாவில்த்தான் வாழ்வதனால் சக கலைஞனான அண்ணைறைற் பாலச்சந்திரனுடன் இணைந்து அங்குள்ள தொலைக்காட்சி ஒன்றிற்கு நாடகங்களை தயாரித்து வழ்ங்கிவருகின்றார்.

இவர்களோடு நானும் இணைந்து பணியாற்றிய கலைப்படைப்புக்களை நினைத்து பெருமை கொள்கின்றேன். எங்கிருந்தாலும் எனது இனிய நண்பர்களின் புகழ் உச்சத்தை அடைய இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

## B.H.அப்துல் ஹமீட் (அறிவிப்பாளர்)

வானொலி வரலாற்றில் அறிவிப்புத்துறையால் புகழ் சேர்த்து பல்லாயிரக்கணக்கான நேயர்களைச் சம்பாதித்திருப்பவர். நல்ல திறமையான நடிகர், நாடகத் தயாரிப்பாளர். இஸ்லாமிய சேவையில் பல தரமான நாடகங்களைத் தயாரித்தும் நடித்தும் புகழ் சேர்த்தவர். அத்தோடு வேறுபல தரமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி புகழடைந்தவர். இவர் நடித்திருந்த "ஒரு குடும்பம் கோவிலாகின்றது" என்ற வானொலி நாடகத்தை கேட்ட நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் "நான் அப்துல் ஹமீட் அவர்களின் ரசிகன்" என்று பத்திரிகைகளின் வாயிலாக அறிவித்திருந்தது ஹமீட்டிற்கு கிடைத்த மிகப்பெரிய உயர் விருதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டுக்குப் பாட்டு" என்று சொன்னால் அது அப்துல் ஹமீட்,தான் என்று சொல்லுமளவிற்கு அந்த நிகழ்ச்சியை உலகெங்கும் புகழடைய வைத்த இந்தக் கலைஞன் புகழ் பெற்ற தென் இந்தியக் கலைஞர்களையும் தனது அன்பு வலைக்குள் கட்டி வைத்திருப்பவர்.

இந்த மதுரக்குரலோன்தான் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான "யூலியர் சீசர்" என்னும் நாடகத்தை எழுதும் வாய்ப்பினை எனக்குத் தந்தவர். நட்பிற்கு இலக்கணமாக இன்றும் எனது நெஞ்சில் நிறைந்து இருப்பவர்.

## "அப்புக்குட்டி" T.ராஜகோபாலன்

**(மேடை, வானொலி, திரைப்படக் கலைஞன், நாடக எழுத்தாளன்,)**

யாழ் நகரில் இருந்து எனது ஊரான இளவாலைக்குச் செல்லும்போது நட்பிற்கு மதிப்புக்கொடுக்கும் அப்புக்குட்டி ரி.ராஜகோபால் பிறந்த ஊரான ஆனைக்கோட்டையைத் தாண்டித்தான் போவேன். ஆனால் இவன் நான் கொழும்பில் இருந்து இளவாலைக்கு வரும் நாட்களில் என்னைத்தேடி எனது வீட்டிற்கு வந்து விடுவான்! முற்பிறவியில் எழுதிவைத்த பயனோ என்னவோ நானும் இவனும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம்.

வானொலியில் நடிக்கவேண்டும் என்ற எங்கள் இருவரது கனவுகளும் பலித்துவிட்ட அந்த நாளில் ஆரம்பமான எங்களது நட்பு தொப்புள்க்கொடி உறவுபோல ஆழமான அத்திவாரத்துடன் இன்றுவரை பலமாக நிலைத்திருப்பதை நினைத்து ஆண்டவனுக்கு நன்றி சொல்வேன். எங்கள் குடும்பத்தில் நல்லது, கெட்டது எதுவானாலும் உரிமையோடு பங்கெடுத்துக் கொள்ளும் குடும்ப நண்பனிவன்.

வானொலிகளில் எனது பல நாடகங்களில் இவன் எனது பிரதியிலும் இவனது நாடகங்களில் நானும் நடித்து புகழ் சேர்த்ததை நோய்வாய்ப்பட்டு இன்று வைத்தியமனையில் இருந்து இதை நான் எழுதிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலும் நினைத்து மகிழ்வு கொள்கின்றேன். இருவருமே நோயாளிகள் ஆகிவிட்டோம். ஆனாலும் கலைப்பற்று குறையவே இல்லை! புலம்பெயர்ந்து நாங்களிருவரும் பிரான்ஸ் வந்த பின்னரும் எங்கள் இருவருக்கும் பூர்வீகத் தொடர்பு இருக்கின்றது. இங்கே ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி, வானொலிகளில் எங்கள் பங்களிப்புகள் பதியப்பட்டுள்ளது மட்டுமல்ல திரைப்படங்கள், தொலைக்காட்சிகளென, எங்களிருவரது கலைப்பயணங்கள் இதுநாள்வரை தொடர்ந்துகொண்டு இருப்பதில் எங்கள் இருவருக்கும் மகிழ்ச்சிதான்.

எனது கவலைகளையும், சந்தோசங்களையும் நான் அப்புக்குட்டியனிடமும். அவனது கவலைகளையும், சந்தோசங்களையும் அவன் என்னிடமுமாக பகிர்ந்துகொள்வோம். எனக்கு எனது பிள்ளைகள், மருமக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளைப்போல அவனுக்கும் அவனது தம்பி குடும்பம் துணையாக இருந்தாலும் நான் இல்லாத காலத்தில் தன்னுடைய மனக்குமுறல்களைச் சொல்ல அவனுக்கு ஒரு நல்ல நண்பன் இல்லாது அவன் தனித்துவிடுவான்! ஆனாலும் என் குடும்பம் அவனை ஆதரவோடு பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கின்றது.

நான் சிகிச்சைக்காக 30 தடவைகள் பிரான்ஸின் புகழ்பெற்ற பல வைத்தியமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் அவன் தனக்கு நோய் வந்ததைப்போல துடித்த காட்சிகளை நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். அதேபோல அண்மையில் அவனுக்கும் ஒரு மிகப்பெரியதொரு சத்திரசிகிச்சை நடைபெற்று அவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றான் என அறிந்தபோது நான் துடித்துவிட்டேன்.

எனது பிரார்த்தனையும், இவனது குடும்பத்தினரது பிரார்த்தனையும் இவனைக் காப்பாற்றிவிட்டது. ஒரு நல்ல நண்பனை, ஒரு நல்ல உறவை, ஒரு நல்ல மனிதனை எனக்கு வழங்கிய எல்லாம் வல்ல யேசுவிற்கு முழந்தாளிட்டு வணக்கம் செலுத்துகின்றேன். மீண்டும் ஒரு பிறப்பு எனக்கு கிடைக்குமானால் நானும் அப்புக்குட்டி ராஜகோபாலனும் நண்பர்களாகவே இருக்கவேண்டும். என ஏங்குகின்றேன்.



**2வது மகன் மகாராஜ் உடன் (1998)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸில் "ஈழத்தமிழ்விழி" விருது பெற்றபோது



லண்டனில் நடந்த பாராட்டு விழாவின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.M.C.ஜெயசோதி

புனித ஹென்றி அரசர் திருக்குடும்ப கன்னியர்மட பழைய மாணவியான எனது மூத்த மகள் கலாவின் வகுப்புத் தோழியும், பன்முகத் திறமைகள் கொண்ட ஒரு சிறந்த நடிகையுமான ஜெயசோதி அவர்களின் பங்களிப்பு இலங்கை வானொலியில் ஒலிபரப்பான எனது அனைத்தும் படைப்புக்களிலும் கிடைத்திருக்கின்றது.

நல்ல குரல்வளம் கொண்ட இந்த நடிகை நடித்த எனது சாதனை படைத்த "முகத்தார் வீடு" நாடகத்தில் தெய்வானை என்னும் முக்கிய பாத்திரம் இன்றும் என் நெஞ்சில் நிழலாடிச் செல்கின்றது. மற்றும் கதம்பம், மத்தாப்பு, தவிர ஒரு மணித்தியால, அரை மணித்தியால நாடகங்களிலும் என்னுடன் இணைந்து நடித்திருக்கின்றார். தனது குரலாலேயே நேயர்களின் மனங்களில் நிறைந்த இந்த ஜெயசோதி இன்றும் எனது நினைவில் நிற்கின்றார்.

# V.N.மதியழகன் (தமிழ்ச்சேவை பணிப்பாளர்)

இவரும் ஒரு சிறந்த படைப்பாளி. இவர் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலும் எனது பங்களிப்பு இருந்ததையிட்டு பூரிப்படைகின்றேன். எனது எழுத்துக்களுக்கும், தயாரிப்புகளுக்கும் ஊக்கம் தந்ததுடன் இன்றுவரை எனது நலனில் அக்கறை கொண்டவர்.

நான் இலங்கை வானொலிக்குள் நுளையும்போதிருந்த பதவியில் திறமையோடு செயலாற்றியதால் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றவர். நான் எங்கிருந்தாலும் அவர் வளர்ச்சியில் மகிழ்ச்சியடைவேன்.

ஈற்றில் என்னோடு தோளோடு தோள் நின்று தங்கள் ஒத்துளைப்பையும், எனது படைப்புகளில் பங்கெடுத்தும், நான் அவர்களது படைப்புகளில் பங்கெடுத்தும் புகழ் சேர்த்த அந் நன்நாட்கள் மீண்டும் வராதா என ஏங்குகின்றேன்.

இங்கு நான் குறிப்பிட்ட, குறிப்பிடத்தவறிய நண்பர்கள், கலைஞர்கள் எல்லோரது ஒத்துளைப்பும் எனக்கு கிடைத்திருக்காவிட்டால் "முகத்தான்" என்ற அடைமொழிக்குள் எனது தள்ளாத காலம்வரை வாழ்ந்திருக்க முடியாது..

நன்றி மலர்களைத் தூவி உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன். என்றும் உங்கள் எல்லோருடனும் நான் வாழ்ந்துகொண்டே இருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியின் குடும்பம் வார இறுதி நாட்களில் பத்தாவது கலையரங்கத்தில் கூடி அரங்கு நிறைந்த நேயர்கள் முன்னிலையில் நேரடி ஒலிப்பதிவு நிகழ்ச்சிகளை நடாத்துவது வழக்கம். அன்றைய நாள் மிகவும் மகிழ்ச்சியான ஒலிப்பதிவு நாளாகும்.

வானொலியின் கதம்பம், மத்தாப்பு, குதூகலம், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் முன்னிலையில் எங்கள் பிரதியாக்கங்கள் நேரடியாக மேடையில் ஒலிப்பதிவாக்கப்பட்டு பதிவு செய்யப்படும் நிகழ்ச்சி அது.

கலைஞர்களின் எழுத்தாற்றல், நடிப்பு, ரசிகர்களை சிரிக்கவைக்கும் முற்று முழுதான நகைச்சுவை கலந்த இந்த நாளை ஆவலுடன் காத்திருக்கும் கலைஞர்கள் ஒலிப்பதிவு முடிந்ததும் ஆண் கலைஞர்கள் அதிகமானோர் "நோனா" என்ற சகோதரியின் வீட்டில் சோமபான மகிழ்ச்சி விருந்து உண்பதுண்டு. நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், கலைஞர்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரும் கூடி மகிழும் நாள் அது. இன்று நினைக்கும்போதும் இளமை திரும்பிய உணர்வும், வயது போய்விட்டதே என்ற வேதனையும் உண்டாகுகின்றது!

உண்மையில் இந்த வானொலிக் கலைஞர்கள் ஒரு வகையில் பிரபலமானவர்கள். இலங்கையில் வானொலியின் நேயர்கள் பலர் உயர் பதவிகளில் இருந்த காலத்தில் அவசர தேவையான உணவு, உடை, குடியகல்வு, குடிவரவு, துறைமுக சந்தைப்படுத்தல் திணைக்களம் போன்ற இடங்களிலெல்லாம் கியூவரிசையில் காத்திருக்கவேண்டிய தேவையில்லாமல் எங்களுக்கு உதவிகள் கிடைத்துவிடும்! காரணம் அங்கு உயர் பதவிகளில் இருக்கும் எங்கள் வானொலி நேயர்கள் எங்களை தங்களது நண்பர்கள் என்று மற்றவர்களுக்கு காட்டிக்கொள்வதற்காக தாமாகவே முன்வந்து இந்த உதவிகளைச் செய்து தருவார்கள்.

அந்தக் காலத்தில் இத்தனை திறமைமிகு கலைஞர்களுடன் ஆசியாவிலேயே கொடிகட்டிப் பறந்து புகழ் சேர்த்த இந்த இலங்கை வானொலி இன்று சோபையிழந்து என்னைப்போல நோயாளி ஆகிவிட்டதாக அறிந்து எனது இதயம் அழுகின்றது.

புலம்பெயர்ந்து நான் பிரான்ஸ் நாட்டிற்கு வந்த சிறிது காலத்திலேயே இங்கும் திருவாளர்கள் குமார்சொப் உரிமையாளர் திரு.சந்திரகுமார், மற்றும் எஸ்.எஸ். குகநாதன் ஆகியோரது முயற்சியினால் T.R.T தமிழ் ஒலி என்ற தமிழ் வானொலி ஐரோப்பா முழுவதுமாக ஒலிக்கத் தொடங்கியது. இங்கும் நானும் ஆருயிர் நண்பன் அப்புக்குட்டி ராஜகோபாலும் வானொலி நிலைய கட்டுப்பாட்டாளராகவும், மற்றும் நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களாகவும் கடமையாற்றினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000மாம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட T.R.T. தமிழ் ஒலியிலும் அதன் பின்னர் பிரான்ஸில் ஆரம்பிக்கப்பட்ட A.B.C. தமிழ் வானொலியிலும் எனது பங்களிப்பும் இருந்தது. பல நாடகங்களை நானும் ராஜகோபாலனும் எழுதி நடித்து ஒலிபரப்பாக்கினோம். அதில் நான் தொடராக எழுதிய "கிறிக்கற் செல்லப்பா" "விவசாய மன்னர் செல்லப்பா" "உதைபந்தாட்ட வீரர் செல்லப்பா" என செல்லப்பா வரிசையில் ஐம்பது அங்கங்களும். "முகத்தார் வீட்டில் அப்புக்குட்டியன்" என்ற தொடரில் பல அங்கங்களும் நேயர்களிடமிருந்து நிறைய வரவேற்பை பெற்றதை நினைத்து எங்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. இதுமாத்திரமல்ல என்னோடு அப்புக்குட்டி ரி.ராஜகோபாலனும் இணைந்து "சர்வதேசக் கோமாளிகள் என்னும் நாடகத்தை ஐம்பது அங்கங்கள் எழுதியிருக்கின்றான். இந்த நாடகங்களில் சில பின்னர் லண்டன; I.B.C. தமிழ் வானொலியிலும், ஜேர்மன் ஐரோப்பிய தமிழ் வானொலியிலும், லண்டன் ஒரு ரேடியோவிலும் மறு ஒலிபரப்பாகி நேயகர்களை மகிழ்வித்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வானொலிக் கலையகங்களிலும் என் மனம் நிறைந்த நல்ல திறமையான பல கலைஞர்கள் பங்காற்றியிருப்பதை நினைவுகூர விரும்புகின்றேன். முதலில் T.R.T. தமிழ் ஒலி இயக்குனர்களான "குமார் சொப்" திரு.சந்திரகுமார், "ஈழநாடு" திரு.எஸ்.எஸ். குகநாதன், "ஈழநாடு" திரு.சிவகுரு.பாலச்சந்திரன், "ஸ்ரீமகால்" திரு.ஸ்ரீதரன், சுவீஸ் திரு. மூர்த்தி, லண்டன் திரு.விமல்-சொக்கநாதன், திரு. திரு.அரவிந்தன், E.K.ராஜகோபால், இன்னும் இருவரது பெயர்கள் எனது நினைவிற்கு வரவில்லை. எங்களில் நம்பிக்கையும், விசுவாசமும் வைத்திருந்த இவர்களுக்கு நான் நன்றி சொல்லாமல் இருக்கமுடியுமா?

தொடர்ந்து நண்பர் நவரத்தினம் அவர்களாலும், அவரது துணைவியார் திருமதி நவாஜோதி அவர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட A.B.C தமிழ் வானொலி. இங்கேயும் என்னை வரவேற்று எனக்கும் நண்பன் அப்புக்குட்டி ராஜகோபாலனுக்கும் நிறையவே ஆதரவு தந்து எங்கள் மகிழ்ச்சியில் பங்குகொண்டிருந்த எனது ஞாபகத்தில் வரும் நல்ல உறவுகளையும் நினைவில் கொண்டுவர முயற்சிக்கின்றேன். அவர்களாவது...

01 திரு.நவரத்தினம் (இயக்குனர்)
02 திருமதி நவாஜோதி (இணை இயக்குனர்)
03 ரி.ராஜகோபாலன் (நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்)
04 திரு.ரவி-மாஸ்றர் (நிர்வாக பொறுப்பாளர்)
05 திரு.சரவணையூர் விசு-செல்வராசா (நிர்வாக பொறுப்பாளர்)
06 திரு.அருள்மொழித்தேவன்
07 திருமதி.ஜெயந்தி-சாம்சன்
08 திருமதி.நவரட்ணராணி-சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 திருமதி.லுமீனா
10 திரு.சாம்சன்
11 திரு.அருணகிரிநாதன்
12 திரு.ராஜாஜி
13 திரு.சுதன்ராஜ்
14 திரு.கோவை-நந்தன்
15 திரு.வண்ணை தெய்வம்
16 திரு.அரியரட்ணம்
17 திரு.கேது
18 திருமதி. அஞ்சலா-யேக்கப்
19 திருமதி.எழில் துஸ்யந்தி
20 திரு.சின்னக்குட்டி-தயாநிதி
21 திரு.இரா-குணபாலன்
22 திரு.பிரியாலயம்-துரைஸ்
23 திருமதி.வளர்மதி-துரைஸ்
24 திரு.வீரபத்திரன்
25 திருமதி.லீனா-ஜெயக்குமார்
26 திரு.ஜஸ்ற்றின்
27 திரு.K.J.பிரதீபன்
28 திரு.மனோதாஸ்.

இன்னும் சிலரது பெயர்கள் எனது ஞாபகத்திற்கு வர மறுக்கின்றது. இந்தக் கலையகத்தில் திருமதி நவாஜோதி அவர்கள் சிறுவர் நிகழ்ச்சிகளையும், திரு.வண்ணை தெய்வம் அவர்கள் கவிஞர்கள் சங்கமம் என்னும் நிகழ்ச்சியையும் நடாத்தி பெரும் வரவேற்பைப் பெற்றவர்களாவார்கள். அதுமாத்திரமல்ல திரு.வண்ணை தெய்வம் அவர்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கவிதைகளை "வானலைகளில் எங்கள் கவிதைகள்" என்னும் பெயரில் நூலாகவும், திருமதி நவாஜோதி அவர்கள் சிறுவர் முற்றம் பாடல்களை "பிஞ்சுநிலா" என்னும் பெயரில் இறுவெட்டாகவும் உருவாக்கி வரலாற்றுப் பதிவு செய்திருக்கின்றார்கள்.

இந்தக் கலைஞர்களில் பலர் என்னோடு இணைந்து T.R.T. தமிழ் ஒலியிலும் பணியாற்றியிருக்கின்றார்கள். ஆனால் T.R.T யில் பணியாற்றி A.B.Cயில் என்னோடு இணையாத கலைஞர்கள் சிலரும் இருக்கின்றார்கள் அவர்களையும் இங்கு நினைவு கூரவேண்டியது எனது கடமையாகும்.

01-திரு.பெஞ்சமின்-இமானுவல்
02-திரு.பிலிப்-தேவா
03-திரு.எம்.அரியநாயகம்
04-திரு.தோழர்-சுரேந்திரன்
05-திரு.சிவலிங்கம்-சிவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06-திருமதி.ஞானசீலி-ஸ்ரீதரன்
07-திரு.கே.பி.லோகதாஸ்
08-திரு.ஏ.எஸ்.ராஜா
09-திரு.முரளீதாஸ்
10-திருமதி.உமா-மோகன்
11-திரு.தர்சன்
12-திருமதி-அமலினி
13-அமரர்.கீழ்க்கரவை-பொன்னையன்

இன்னும் சிலருடைய பெயர்கள் இப்பொழுது எனது ஞாபகத.திற்கு வர மறுக்கின்றது. இந்த வானொலி தொலைக்காட்சிகளுக்கெல்லாம் அப்பாலும் என் மனதில் நிறைந்திருக்கும் கலைஞர்களும், நண்பர்களும், என்னை நேசித்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்களைப்பற்றியும் இங்கு சுருக்கமாக கூறிவைக்க விரும்புகின்றேன்.

## திரு.ஏ.ரகுநாதன்

இவருடன் இலங்கையில் எனக்கு கலைரீதியான தொடர்புகள் இல்லாவிட்டாலும் மிகவும் நெருக்கமான நண்பன். நான் பிரான்ஸ் வந்தபின்பு எனது முகத்தார் வீடு நாடகத்தை ஆர்.ரி.எம். பிரதேஸ் சார்பில் திரு இரா-குணபாலன் அவர்கள் வீடியோ திரைப்படமாக எடுத்தபோது அப்படத்தை இயக்கி அதன் வெற்றிக்கு உழைத்தவர். இறுதிகாலத்தில் எனது உடல்நிலை காரணமாக நான் கலைத்துறையில் இருந்து ஒதுங்கி வீட்டிலேயெ இருந்தபோது என் நேசத்திற்கும், மதிப்பிற்கும் உரிய தம்பி ஓசை மனோ அவர்கள் எனக்காகவே "தாகம்" என்ற கதையை திரைக்கதையாக எழுதி ரகுநாதன் அவர்களையும் அழைத்துக்கொண்டு எனது வீட்டிற்கே வந்து அதை தொலைக்காட்சி நாடகமாகப் படமாக்கினார்கள். அதில் ரகுநாதன் என்னுடன் இணைந்து நடித்திருந்ததுடன் அதை இயக்கியும் இருந்தார். இதில் எனது மகள் ஜீவாவும் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



**அப்புக்குட்டி ரி.ராஜகோபால்**
**முகத்தார். மரிக்கார் ராமதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்.கிறெகரி-தங்கராஜா

இவனோடு ஒப்பிடும்போது நான் என்னையொரு கலைஞன் என்றே சொல்லமுடியாது! கலைமீது அப்படியானதொரு வெறித்தனமான காதல் கொண்டிருந்த பெரும் கலைஞன் இவன். தான் தயாரிக்கவிருந்த தொலைக்காட்சி நாடகமான "பாசப்பூக்கள்" ஆரம்ப விழாவன்று எனக்கும் ஒரு பாராட்டுவிழா வைத்து எனக்கு மலர்க்கிரீடம் வைத்து எனது கலைச் சேவையை கௌரவித்தவன். இவனின் ஒருசில நாடகங்களில் நான் நடித்தும் இருக்கின்றேன். நான் இதுவரை சந்தித்த கலைஞர்களில் கலையை தனது உயிராக நேசித்த கலைஞன் இவன்தானென்பேன். இவனின் மரணம் கலைத்துறைக்கு பேரிழப்பு.

## திரு.ஓசை-மனோ

மனோவைப்பற்றி நான் என்ன சொல்லி ஆரம்பிப்பது!? என்னை ஐயா என்றுதான் அழைப்பான். அந்த அழைப்பில் அடக்கம் இருக்கும், ஆழமான பாசமிருக்கும். ஆரம்ப நாட்கள் முதலேயே எனது நாடகங்களை புத்தகமாக்கவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியவன். எனது "முகத்தார் வீட்டுப் பொங்கல்" நாடகநூல் வெளிவருவதற்கு இவன்தான் காரணம். அந்தப் புத்தகத்தின் முழுப்பக்கங்களும் இவனது கைகளால் கணனியில் பதியப்பட்டவையே! இவனுனுடைய நாடகங்கள் எல்லாமே எனக்குப் பிடிக்கும். இவனின் "செத்தவீடு" என்ற நாடகத்தை நான் பதினைந்து தடவைகளுக்கு மேலாக ஐரோப்பா எங்கும் மேடையேற்றி இருக்கின்றேன்.

## திரு.பிரியாலயம் துரைஸ்..வளர்மதி துரைஸ்..

பிரியாலயம்... இவரோடு பழகியர்கள் யாராக இருந்தாலும் இவரை லேசில் பிரிந்துவிடமாட்டார்கள்! நானும் அப்படித்தான்! என் நேசத்திற்குரியவர்கள் பலரும் தங்கள் தந்தையை நினைவில் வைத்துக்கொண்டு என்னை அழைப்பது வழமை. இவன் என்னை அப்பா என்றும், இவன் மனைவி வளர்மதி ஐயா என்றும் அழைப்பார்கள். இவர்களின் பிள்ளைகளும் அப்பா என்றே அழைப்பார்கள்! அப்படி அழைக்கும்போது இன்னொருமுறை அழைக்கமாட்டார்களா? எனத்தோன்றும். தம்பி பிரியாலயம் அவர்கள் நடிகனாக, இயக்குனராக, எழுத்தாளனாக, பாடலலாசிரியனாக, பத்திரிகையாளனாக, அறிவிப்பாளனாக, எழுததுத்துறைக் கலைஞனாக, இப்படியாக இன்னும் பல துறைகளை தன்னகத்தே கொண்ட இவன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம்! இதற்கும் மேலாக இவனது குடும்பமே கலைக்குடும்பமாக இருப்பதில் இவன்மேல் எனக்கு பொறாமையாகவும் இருக்கின்றது (அன்புப் பொறாமை) தனது "ராஜாவின் ராஜங்கள்" தொலைக்காட்சிப் படத்தில் இந்த முகத்தானுக்கு ஒரு முத்தான பாத்திரத்தைத் தந்து என்னைக் கௌரவித்தவன். வள்மதி எனது பல வானொலி நாடகங்களில் நடித்திருக்கின்றார். தம்பி துரைஸ் அவர்கள் எந்த நல்ல விடயத்தை ஆரம்பிக்கும்போதும் முதலில் என் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும் இவனுக்கு கலைத்துறையில் நல்ல எதிர்காலம் உண்டு.

## திரு.ரி.தயாநிதி

என் ஆயுட்கால நண்பன் அப்புக்குட்டியின் தம்பி இவன். ஆனால் எந்த இடத்திலும் தனது அண்ணனின் பெயரை வைத்து தான் புகழ் பெறுவதற்கு எப்பொழுதும் விரும்பாதவன். இவனுடைய இந்தக் கொள்கைதான் எனக்கு இவன்மேல் காதல் கொள்ள வைத்தது! ஆரம்பகாங்களில் நகைச்சுவை நாடகங்களிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வந்த இவனை எல்லோரும் "அப்படியே அண்ணை மாதிரியே இருக்கின்றீர்கள்" என்று சொல்ல. தனது பாணியை மாத்தி சமூக சீர்திருத்த நாடகங்களை எழுதி மேடையேற்றி தன்னை வித்தியாசப்படுத்தி அதிலும் வெற்றி கண்டவன். தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சினிமா நடிகர்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்க கூடும் மக்கள் கூட்டத்தைப்போல இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு தயாநிதியின் பெயரை விளம்பரப்படுத்தினாலே மக்கள் கூட்டமாக திரள்கின்றது என்றால் இவன் கலைத்துறையில் வென்றுவிட்டான் என்பதுதானே அர்த்தம். இப்பொழுது இவன் அப்புக்குட்டியின் தம்பி இல்லை! இவனுடைய அண்ணன்தான் அப்புக்குட்டி!.

## திரு.இரா-குணபாலன்

என்னை எனது பிள்ளைகள் பப்பா என்பார்கள், மற்றவர்கள் ஐயா என்றும், வேறு சிலர் அப்பா என்றும், இன்னும் சிலர் அப்பையா என்றும் இப்படி தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அழைத்துக் கொள்பவர்கள் வரிசையில் குணபாலன் என்னை அத்தார் என்றுதான் அழைப்பான். தங்கள் ஆர்.ரி.எம். பிறதேர்ஸ் ஸ்தாபனம் ஒரு திரைப்படம் தயாரிக்கவேண்டும் என முடிவு செய்தபோது எனது "முகத்தார் வீடு" நாடகத்தைத் தெரிவு செய்து என்னை பெருமைப்படுத்தியவன். இவனிடம் நகைச்சுவை உணர்வு மிக அதிகம். ஆனாலும் எந்தவிதமான பாத்திரத்தை ஏற்றாலும் அந்த பாத்திரமாகவே ஒன்றிவிடும் சிறப்பான நடிப்பாற்றல் உள்ளவன். எனது வானொலி நாடகங்கள் பலவற்றிலும் நடித்திருக்கும் இவனொரு நடிப்புச் சுரங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.பிலிப்தேவா


இவனிடம் உள்ள சிறப்பான செயல்களில் ஒன்று ஐரோப்பியர்களைப்போல எப்பொழுதும் சிரித்த முகம்! மேடைகளில் இவன் மும்மொழிகளிலும் அறிவிப்பு செய்யும் பாங்கே அலாதியானது. இவன் அறுத்து, உறுத்து தமிழ் பேசும் அழகிற்காகவே T.R.T வானொலியில் செய்தி வாசிக்கும் பணியில் நிரந்தரமாக அமர்த்தப்பட்டிருந்தான். எனது பல வானொலி நாடகங்களிலும் நடித்திருக்கும் பிலிப்தேவா தனது இழ வயதுக்காலத்திலேயே துணையாளை இழந்தது அவனுக்குமட்டுமல்ல, என்னைப்போன்ற பலருக்கும் தாங்காத துயரம்தான்.

# திரு.எஸ்.கே.ராஜென்

இலங்கையில் புகழ்பெற்ற கலைஞர்கள் முதல், வளர்ந்துவரும் கலைஞர்கள்வரை இவனுக்கு தெரியாதவர்களே இருக்கமுடியாது! கலைஞர்களுடன் அப்படியொரு ஈடுபாடு. தான் சார்ந்த ஊடகங்களில் எனது குரலை ஒலிக்கவைப்பதில் அப்படியொரு ஆனந்தம் இவனுக்கு. எனது பல வானொலி நாடகங்களை தான் சார்ந்திருந்த I.B.C. வானொலியில் மறு ஒலிபரப்பு செய்ததோடு மட்டுமல்லாது, எனது கலைத்துறை அனுபவங்களை பேட்டிகள் எடுத்தும் ஒலிபரப்பி என்னை பெருமைப்படுத்தியிருக்கின்றான். அதுமாத்திரமல்ல வர்த்தக விளம்பரங்களுக்கும் எனது குரலை பதிவு செய்து ஐரோப்பா முழுவதும் ஒலிக்கவைத்தவன்.

# திரு.ரவீந்திரன் (ரவி மாஸ்றரர்)

A.B.C வானொலியில் பணியாற்றிய காலங்களிலும் சரி! பின்னர் தனியாக E.T.R. (ஐரோப்பிய தமிழ் வானொலி) வானொலியை ஆரம்பித்த பின்னரும் சரி என்மீது தனியானதொரு மரியாதை ரவி-மாஸ்றரருக்கு என்றுமே உண்டு. தம்பி வண்ணையின் மூலமாக எனது நாடகங்களைப் பெற்று தனது வானொலியில் வாராவாரம் ஒலிபரப்பி என்னை கௌரவப்படுத்தியவன். அது மாத்திரமல்ல ஜேர்மனியில் தன்னால் ஏற்பாடு செய்யப்படும் கலை நிகழ்வுகளுக்கு என்னை அழைத்து கௌரவப் படுத்திக்கொள்வான். எனது நாடகங்கள் சிலவற்றை ஒலித்தட்டாக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொள்வான். இவனுடைய நல்ல மனதிற்கு எல்லாம் நல்லதாகவே நடக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. நவாஜோதி

இலங்கை வானொலியில் வானொலி மாமாவைப்போல, ஐரோப்பிய வானொலிகளில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடாத்தி புகழ் பெற்றவர். இவர் ஒரு சங்கீத ஆசிரியராகவும் இருப்பதனால் பாடல்களை தான் பாடியும், சிறுவர்களைப் பாடவைத்தும், பெரியவர்களையும் அந்த நிகழ்ச்சிகளை ரசிக்கவைத்திருந்தார். இவரும் இவரது கணவருமாக ஆரம்பித்த A.B.C. வானொலிக்கு என்னையும், நண்பன் அப்புக்குட்டியையும் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்களாக நியமித்து கௌரவப்படுத்தியிருந்தார்கள். (ஆனால் நாங்களிருவரும் எந்தக்காலத்திலும், எந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் கட்டுப்படுதியது கிடையாது என்பது வேறுவிடயம்.) எனது வானொலி நாடகங்கள் பலவற்றில் இவரும் நடித்து சிறப்பித்திருக்கின்றார். இவருடைய கணவர் திரு.நவா அவர்கள் அமைதியின் மற்றொரு வடிவம் என்று சொல்லாம். அந்த உயர்ந்த பண்புதான் இன்றும் இந்தத் தம்பதிகளை மக்கள் மனங்களில் நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றது.

# சாம்சன்-ஜெயந்தி தம்பதிகள்

சாம்சன் சாதாரணமாக எம்முடன் கதைத்தாலே நடிப்பது போலத்தான் இருக்கும். அப்படியானதொரு அற்புதமான குரல் வளம். பல குரல்களில் வித்தைகள் காட்டுவான். மேடைகளில் இவனுடன் இணைந்து நடிப்பவர்ளுக்கு இயற்கையாகவே நடிப்பு வந்துவிடும். குரல், முகபாவனை, இவைகளைவிட இவனின் உடல் மொழி அற்புதமானது! இவைகளுக்கெல்லாம் மேலாக எங்களில் பலரிடம் இல்லாத பெரும் சிறப்பு ஓவியம் வரைவது. சுருக்கமாகச் சொல்லப்போனால் இவன் ஒரு கலைப்பொக்கிசம்.

ஜெயந்தி-சாம்சன். A.B.C வானொலியில் நான் கட்டுப்பாட்டாளராக பணிபுரியும்போது இவர் நல்ல பல நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருக்கின்றார். குறிப்பாக சமய நிகழ்ச்சிகளைச் சொல்லாம். புதிது புதிதாக தேடுதல் செய்து நிகழ்ச்சிகளை வழங்குவதில் மிகவும் ஆர்வமுடையவர். இவரின் இனிமையான குரல் வளத்தால் நிறைய நேயர்களை தன்வசமாக வைத்திருந்தவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.ஜஸ்ற்ரின்

A.B.C.வானொலி இவரது தாய்வீடு என்று சொல்லாம்! அறிவிப்புத்துறையில் மிக குறுகிய காலத்தில் அனைவரது இதயங்களையும் கவர்ந்தவர். சிறந்த குரல் வளம் 'சூரியக்குரலோன்'' என இவரை எல்லோரும் அன்பாக அழைப்பார்கள். பின்நாளில் ttn தொலைக்காட்சியில் அறிவிப்பாளராக இருந்து தனது தனித்திறமையால் வேறு பல நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். எனது நாடகங்கள் சிலவற்றிலும் தம்பி ஜஸ்ற்ரினின் குரல் ஒலித்து எனது நாடகங்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்றது.

## திருமதி.லுமீனா

இந்தப்பிள்ளை எனது மூத்த மகள் கலாவைப்போல! கலைத்துறைக்கு அப்பாலும் எனது உடல் நலத்தில் அக்கறையள்ளவள். நல்ல பல ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி வருவார். என்னுடைய பல நாடகங்களிற்கும் உயிருட்டியிருக்கின்றார். இவருடைய சேவை பலருக்கும் தேவை.

## திரு.மனோதாஸ்

இந்த இளைஞனிடம் உள்ள ஆர்வம், தேடுதல் ஆகியவனவற்றை A.B.C. வானொலியில் பணியாற்றிய காலத்தில் நேரடியாக பார்த்து வியந்திருக்கின்றேன். A.B.C வானொலியில் செய்திப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவர்களில் இவனும் ஒருவனாக இருந்த காலத்தில் தானாகவே செய்தியை தேடி எடுத்து அதை வானொலிக்குத் தகுந்த மாதிரி வடிவமைத்து பின்பு தானே வாசிப்பது என அனைத்து வேலைகளையும் தனியாகவே செய்வான். இவனுக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

## திரு.பிரதீபன்

சின்னப் பையன் இவன்! ஆனால் வயதிற்கு மீறிய அரிய பெரிய திறமைகளை தன்னகத்தே கொண்டவன். ஒலிவாங்கிமுன் அமர்ந்துவிட்டால் அறுசுவை விருந்தை அள்ளி வழங்குவான் இவனுடைய திறமையை வெளிப்படுத்த பின்னாட்களில் ttn தொலைக்காட்சியும் சந்தர்ப்பம் வழங்கியதும் குறிப்படத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்னையில் நடைபெற்ற "ஈழ எதிலியர் மறுவாழ்வுக்கழக விழா ஒன்றில். அருகில் தமிழறிஞர் கி.ஆ.பெ. விஸ்வநான் அவர்கள்




1993ல் பாரிஸில் நடைபெற்ற சென்-ஹென்றி அரசர் பழைய மாணவர் சங்க விழா ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.கே.பி.லோகதாஸ்

என்னை எல்லோரும் நகைச்சுவை நடிகன் என்றே சொல்வார்கள். ஆனால் நான் குணசித்திர பாத்திரங்களிலும் நடித்து பாராட்டும், பரிசில்களும் பெற்றிருக்கின்றேன் (உதாரணத்திற்கு வாடைக்காற்று பொன்னுக்கிழவர் பாத்திரம்.) தம்பி லோகதாஸை எல்லோரும் குணசித்திர நடிகன் என்றே சொல்வார்கள், ஆனால் நகைச்சுவையில் இவன் பவுன்றி (Boundary) எல்லாம் அடிப்பது கிடையாது! எடுத்த எடுப்பிலேயே சிக்ஸர்தான் அடிப்பான்! மேடைகளில் நடிக்கும்போது யாருக்குமே விட்டுக்கொடுக்காத கருங்காலி மரமான நானே இவனுடன் நடிக்கும்போது திண்டாடியிருக்கின்றேன். சிறிய பாத்திரத்தை ஏற்று நடித்தாலும் அந்தப் பாத்திரத்தை முக்கியமான பாத்திரமாக ஆக்கிவிடுவான். என்னுடைய இந்த வாழ்க்கை வரலாறு நூலாக வேண்டுமென்ற அக்கறையில் இவனும், வண்ணையுமாக நான் இருந்த வைத்தியசாலைவரை வந்து எழுதுவதற்கு பேப்பர், பேனா முதற்கொண்டு தந்து ஊக்கப்படுத்தியதை என்னால் என்றுமே மறக்கமுடியாது.

## திரு.பரா

தமிழ்நாட்டில் பிரபல சினிமாத் தயாரிப்பாளர் ஏ.வி.எம். மெய்யப்பச் செட்டியாரின் மகன் சரவணனிடம் உள்ள ஒரு பழக்கம் எப்பொழுதும் கைகளை மார்போடு அணைத்துக் கட்டியபடியே இருப்பார். இதை ஏதோ அவரின் பழக்கம் என சாதாரணமாக கருதிவிட முடியாது? இது அனைவருக்குமாக ஒருமித்துக் கொடுக்கின்ற மரியாதை! தம்பி பராவும் அப்படித்தான். அனேகமான சமயங்களிலெல்லாம் கைகளை மார்போடு அணைத்தபடியே இருப்பார். இவருடைய படைப்புக்கள் சிலவற்றை நாடகங்களாகவும், குறும்படங்களாகவும் பார்த்திருக்கின்றேன். அவைகளைப் பார்த்தபின்னர் அற்புதமான திறமைகளைக்கொண்ட இந்தக் கலைஞனின் இயக்கத்தில் ஒருமுறையாவது நானும் நடித்துவிடவேண்டும் என்ற ஏக்கம் நீண்ட நாட்களாகவே எனது மனதிற்குள் இருக்கின்றது. காலன் என்னை அழைப்பதற்குள் காலம் எனது ஆசைக்கு கை,கொடுக்கும் என நம்புகின்றேன். நாளைக்கு பெரிய சாதனைகளை படைக்கப்போகின்ற இந்த கலைஞனை நான் இன்றே வாழ்த்திவைக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.கப்ரன்-அருணகிரிநாதன்

கலைத்துறைக்கு இவன் வந்ததே ஒரு விபத்து என்றே சொல்வார்கள்! அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள்தான் கட்டாயப்படுத்தி நாடகத்தில் நடிக்கவைத்ததாக நான் அறிந்திருக்கின்றேன். அப்பொழுது இவனை பொலிஸ் அருணகிரி என்றே அழைப்பார்கள். பின்பு ttn தொலைக்காட்சியில் "படலைக்கு படலை" தொடரில் நடித்தபோது "லண்டன் அங்கிள்" என்று அழைக்கப்பட்டான். தொடர்ந்து எனது நாடகமொன்றில் "கப்ரன்" பாத்திரமொன்று கொடுத்தேன் அன்று முதல் கப்ரன் -அருணகிரி ஆகிவிட்டான். எனது இயக்கத்தில் பல நாடகங்களில் பல்வேறு பாத்திரங்களில் நடித்திருந்தாலும் "கப்ரன்" என்ற பட்டப்பெயரே நிலைத்துவிட்டது. முற்பிறப்பில் விட்டகுறையோ? தொட்டகுறையோ? தெரியாது கலைத்துறைக்கும் அப்பாலும் இவன் என்மேல் காட்டிய அன்பு அளப்பரியது! நாளொன்றுக்கு ஒரு தடவையாவது என்னுடன் தொலைபேசியில் கதைக்காவிட்டால் இவனுக்கு தூக்கமே வராது. அதேபோலத்தான் "அத்தார், அத்தார்'' என இவன் அழைக்கும் குரலைக் கேட்காவிட்டால் எனக்கும் தூக்கம் வருவதில்லை!.

## அமரர்.கீழ்க்கரவை-பொன்னையன்

எனக்கு இவனிடம் பிடித்த பெரிய விடயம் இவனுடைய தன்நம்பிக்கை! தன்னால் முடியாது என்று எப்பொழுதும் சொல்லமாட்டான். நாடகம், சின்னத்திரைப்படம், கதை, கவிதை, கட்டுரை, பட்டிமன்றங்களென இவன் தடம்பதிக்காத துறையே இல்லை! என்று சொல்லாம். சில சமயங்களில் பட்டிமன்றங்களில் தான் வாதாடுவது தவறு என்று அறிந்திருந்தாலும் தனது வாதாட்டத்தை நியாயப்படுத்திக்கொள்ளும் திறமை இவனிடம் நிறையவே இருந்ததை பலரும் அறிவார்கள். இவன் தயாரித்த 'புயல்'' என்ற சின்னத்திரைப்படத்தில் என்னையும் நடிக்கவைத்தவன். கலைஞர்கள் அனைவருமாக இணைந்து என்னை கௌரவப்படுத்தி நடாத்திய பாராட்டுவிழாவிற்கு மலர்க்குழவின் தலைவராக இருந்து ஒரு அழகான மலரை தயாரித்து வெளியிட்டதுடன் அந்த விழாவிற்கு தலையேற்றிருந்தும் எனது நினைவைவிட்டு அழியாதவை.

## அமரர்.எம்.ஏ.குலசீலநாதன்

இலங்கை வானொலியில் இவன் இசைக் கட்டுப்பாட்டாளராக வலம் வந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். கம்பீரமான நடை, கர்வமான பார்வை, இறுமாப்பான பேச்சு ஆனாலும் ஆழமாக பழகிப்பார்த்தால்த்தான் தெரியும் இவன் ஒரு குழந்தையைப் போன்றவன். இசையில் இவனை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதையென்றே சொல்லாம்! "குத்துவிளக்கு" திரைப்படத்தில் ஆரம்பத்தில் ஒலிக்கும் "ஈழத்திருநாடே என்னருமைத் தாயகமே" என்ற பாடல் இன்றும் தேனாமிர்தம் போல இசைப்பிரியர்களது வாய்களிலும் முணுமுணுத்துப் பாடப்படுவதைப் பார்க்கலாம். இலங்கையில் வாழ்ந்த காலத்திலும்சரி, பாரிஸில் வாழ்ந்த காலத்திலும் சரி இந்தப் பெரும் கலைஞன் என்மேல் வைத்திருந்த அன்பும், மரியாதையும் அளப்பரியது.

## திரு.ஐசாக்-இன்பராஜா

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்ற முது மொழியைப்போல தம்பி ஐசாக் இன்பராஜா நிற்கின்ற இடமெல்லாம் சிரிப்பு முத்துக்களைப்போல சிதறிக்கொண்டே இருக்கும்! அப்படிப்பட்டவன் மேடையில் தோன்றினால் எப்படியிருக்கும்? என்பதை நீங்களே கற்பனை பண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள். என்னுடைய முகத்தார்வீடு நாடகம் சின்னத்திரைக்காக திரைப்படமாக எடுக்கப்பட்டபோது அந்தப்படத்தில் ஒரு நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்து அப்படத்தின் வெற்றிக்கு இவனும் ஒரு காரணமாக இருந்திருக்கின்றான். காண்கின்ற இடங்களில் எல்லாம் தான் என்னுடைய பரமரசிகன் என்று சொல்லிக்கொள்வான். உண்மையில் நான் அவனுடைய ரசிகன்.

## அமரர்.தோழர்-சுரேந்திரன்

உருவத்திற்கும், பழகுவதற்கும் சம்மந்தமே இல்லாத ஒரு உயர்ந்த மனிதர் தோழர் சுரேந்திரன். நடிகர் ரஜினிகாந் அவர்கள் நடித்த ஒரு படத்தில் ஒரு பாட்டு வரும் அது... "நான் பாசமுள்ள மனிதனப்பா... மீசை வைத்த குழந்தையப்பா..." என்ற அந்தப் பாடல் வரிகள் முற்றும் முழுதாக தோழர் சுரேந்திரனுக்கே பொருந்தும். இவர் தனது இளவயதுக் காலத்தில் தமிழ்நாட்டில் தங்கியிருந்து கல்விகற்ற காலத்தில் இவரின் படிப்புச் செலவுக்கு அமரர் எம்.ஜி. ஆர். அவர்கள் உதவியிருப்பதால், எம்.ஜி.ஆர் மீது அளப்பற்ற மரியாதை வைத்திருந்தவர். ஊரில் வாழ்ந்த காலத்தில் சிறந்த தொழிற்சங்க வாதியாக வாழ்ந்ததால் மேடைப்பேச்சும் இவருக்கு கை,வந்த கலை! நாடகங்களில் நடிக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வமுள்ள இவர் எனது பல வானொலி நாடகங்களில் நடித்திருக்கின்றார்.

**நடிகை சந்திரப்பிரபாவுடன் ஒரு நாடகத்தில்...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகன்-உமா, தம்பதிகள்.

மோகன், உமா இருவரும் எனது பிள்ளைகளுக்கு சமமானவர்கள். ஊரில் மோகன் எனது பக்கத்து வீட்டுக்காரன். இங்கும் அப்படித்தான் எங்கள் ஹென்றி அரசர் பழைய மாணவர் சங்கத்தில் நான் தலைவராக இருந்த காலத்தில் எனக்குப் பக்கத்தில் இருந்து எல்லாவுமாக இருந்தவன். நான் இங்கு மேடையேற்றிய நாடகங்களிலும், வானொலி நாடகங்களிலும் கணவனும் மனைவியாக பங்கேற்று முழு ஒத்துளைப்பும் தந்தவர்கள். தங்களது கலைப்பணியை தங்களோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் தங்களது இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் பரதநாட்டியம் கற்பித்து வருகின்றார்கள். பாராட்டிற்குரியது. இளவாலையின் பெயர் சொல்ல இந்தக் குடும்பமும் இருக்கின்றது என்பதில் எனக்கு பெரு மகிழ்ச்சி.

# திருமதி. எழில் துஸ்யந்தி

இந்தப் பிள்ளையைப்பற்றி என்னவென்று நான் சொல்வது! A.B.Cயில் பணியாற்றிய காலத்தில்த்தான் நான் இவரைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. தன்னால் முடியாதென்று எதையும் தள்ளிவைக்கமாட்டார். எனது பல நாடகங்களில் பலவிதமான பாத்திரங்களை ஏற்று அந்தந்தப் பாத்திரங்களாகவே மாறியிருந்தவர்! குறிப்பாக குழந்தைப் பாத்திரமானால் தனது குரலை குழந்தையாக மாற்றவும், கிழவியின் பாத்திரமானால் அதற்கேற்ப வயதின் முதிர்ச்சியை குரலில் காட்டவும் இவரைப்போல் இன்னொருவரை நாம் தேடவேண்டும். இவர் வானொலியில் நடாத்திய "ஆராட்சிமணி" என்ற நிகழ்ச்சி ஒரு முத்துச் சுரங்கம்.

# திருமதி லீனா- ஜெயக்குமார்

இவரை மேடையில் ஒரு பாத்திரமாகப் பார்த்துவிட்டு பின்னர் நேரில் பார்ப்பவர்கள் யாரும் அவர்தான் இவர் என ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்!. ஆம் இவர் மேடையில் நடிக்கும்போது இவரது உடல் மொழி மட்டுமல்ல வழமையான இவரது குரல் மொழியும் மாறிவிடும்!. தம்பி தயாநிதி நெறிப்படுத்தி அரங்கேற்றிய பல நாடகங்களில் இவரின் திறமைகளைப் பார்த்திருப்பீர்கள் இவரின் நடிப்பால் நாடகம் வெற்றியடைந்ததா? அந்த நாடகத்தில் நடித்ததால் இவருக்கு பெருமையா? என ஒரு பட்டிமன்றமே நடத்தலாம்.

கலை உலகம் ஒரு இன்பப் புதைகுழி!
இதற்குள் தவறி விழுந்தவர்கள் மட்டும்
தம்மைக் காப்பாற்றும்படி கதறுவதில்லை!
அப்படி தவறி விழுந்தவர்களில்
திருமதி. லீனா-ஜெயக்குமாரும் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்
குயிலிடம் குரலை இரவல் வாங்கியவர்!
கிளியின் பேச்சை தனதாக்கியவர்!
கலைத்துறையில் ஓர் ஆண் மயிலாகியவர்!
கவிதையிலோ கம்பன் வீட்டுக் கட்டுத்தறி!

கலைத்துறைக்கு இன்னொரு லீனா
இனி கிடைக்கமாட்டார்! -இவர்
இன்னும் நீண்ட காலம்
கலைப்பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

இவரின் நினைவுகள் எனது மனதில் எழும்போதெல்லாம் இந்த வண்ண வரிகள் எனது மனதில் நிழலாடும். வாழ்க இவரது கலைப்பணி.

## நாடக ஆசிரியர். எம்.அரியநாயகம்

தம்பி அரியநாயகமும் நானும் இணைந்து பணியாற்றுகின்ற சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருந்தாலும் T.R.Tயில் இவர் தயாரித்த சில வானொலி நாடகங்களிற்காக ஒரு படைப்பை முழுமையாக்குவதற்கு இவர் எவ்வளவு கடுமையாக உழைக்கின்றார் என்பதை நான் நேரில் பார்த்து வியந்திருக்கின்றேன். எங்கள் பழங்கலைகளை காப்பதற்கும், அவற்றை மெருகூட்டி புதிய வடிவங்களில் தருவதற்கும் இவர் எடுக்கின்ற முயற்சிகள் பாராட்டக்கூடியது. காலமும், நமது கலைஞர்களும் இவருக்குப் பக்கபலமாக இருந்தால் புலம்பெயர் நாடுகளிலும் நமது கலைகள் வளர்ச்சியடையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## திரு. எஸ்.அருள்மொழித்தேவன்

ஒரு வானொலி நாடகத்தை முழுமைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பது ஒலிப்பதிவுதான்! எனது அனேகமான நாடகங்களை ஒலிப்பதிவு செய்தவர் தம்பி அருள்மொழித்தேவன்தான். நாடகத்தின் பின்னணிக்குத் தேவையான, பொருத்தமான இசைகளை தேடி எடுத்து அந்தந்த இடங்களில் சேர்ப்பதில் இவரின் திறமை அபாரமானது! இவருக்கு கடவுள் கொடுத்த அருள் இவர் பேசும் மொழிதான்! தனது அழகான குரல் வழத்தால் மேடைகளிலும், வானொலியிலும் அறிவிப்புச் செய்வதில் இவர் தனக்கென ஒரு பாணியை வைத்திருக்கின்றார்! எனது நாடகங்கள் பலவற்றிகு நாடகம் பற்றிய உள்ளடக்கத்தை அறிவிப்புச் செய்து உயிரூட்டியிருக்கின்றார். சில நாடகங்களில் நடித்திருப்தாகவும் ஞாபகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.செபமாலை-ஆனந்தன்

இலங்கை வானொலியில் ஒரு கூத்திசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்யவந்த திரு. செபமாலை அவர்களை தம்பி டேவிற்-ராஜேந்திரன் அவர்கள்தான் எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். கூத்துக்கலையில் இவர் முடிசூடா மன்னர். எனது கலைப்பணியைப் பின்தொடர எனது வாரிசுகள் என யாரும் கிடையாது. ஆனால் செபமாலை அவர்கள் பெற்றெடுத்த முத்துக்களில் பாரிஸில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆனந்தன், இன்பம் ஆகிய இருவரும் தந்தையின் பெயர் சொல்லும்படியாக ஐரோப்பாவிலும் கூத்துக்கலைக்கு உயிர் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதில் தம்பி ஆனந்தன் என்மீது பெரு மதிப்பு வைத்திருப்பவன்! நானும் அப்படித்தான் ஆனந்துன் மீதும் இவன் ஆற்றிவரும் கலைப்பணிமீதும் மாறாத மதிப்பு வைத்திருக்கின்றேன்.

# திரு.முரளிதாஸ்

T.R.T வானொலியில் இவர் ஒலிப்பதிவுப் பகுதியில் பணியாற்றியவர். அங்கு நான் தயாரித்த அனேகமான நாடகங்களுக்கு ஒலிப்பதிவாளராக பணிபுரிந்தவர். எனது சில நாடகங்களுக்க குரல் கொடுத்திருப்பதாகவும் ஞாபகம். தம்பி முரளிதாஸ் அதிகமாக பேசமாட்டார், ஆனால் தான் செய்கின்ற ஒவ்வொரு வேலையிலும் அதிக கவனம் செலுத்துவார்! இசைக்கலவை செய்வதில் ஒரு இசைக்கலைஞனைப்போன்ற திறமையாளன்! நிச்சயம் வருங்காலத்தில் தொழில் நுட்பத்தில் பெரும் வல்லுனராக வருவார்.

# திரு.பாரிஸ்ற்ரர்-யோசேப்

நாடகத் தந்தை “கலையரசு” சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் கலைத்துறை வாரிசுகளில் இவரும் ஒருவர். வருடா, வருடம் ஐரோப்பாவில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு தங்களது ஈழவர் திரைக்கலை மன்றத்தின் மூலமாக சிறந்த கலைஞருக்கு விருதுகளை வழங்கி கலைஞர்களையும், ஐயா கலையரசு அவர்களையும் பெருமைப்படுத்தி வருகின்றார். நான் இவர்மீதும், இவர் என்மீதும் கொண்டுள்ள மரியாதை வார்த்தைகளில் வர்ணித்துவிட முடியாதவை. அதன் காரணமாக 2003ம் ஆண்டில் என்னை லண்டனுக்கு அழைத்து விழா எடுத்து பாராட்டிக் கொரவித்தியமை மறக்கமுடியாதவை.

# அமரர். சிவலிங்கம் -சிவபாலன்

சந்திர வதனம் என்று சொல்வார்களே அதற்கு ஒப்பானவன் தம்பி சிவபாலன். இவன் இலக்கியப் படைப்பாளி, நான் கலைப் படைப்பாளி. கலைத்துறை சார்பாக இவனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்மீது அளவிற்கதிகமான நேசத்தைப் பொழிந்தவன். சில சமயங்களில் நான் எண்ணிக்கொள்வதுண்டு "இது எனது நாடகங்களின்பால் ஏற்பட்ட ஈர்ப்பாகக இருக்கலாம் என்று." ஆனால் அதற்கும் அப்பால் என்னை அப்பா, அப்பா என அழைத்து எனது பிள்ளைகளில் ஒன்றாக மாறிப்போனவன். சின்ன வயதில் காலன் இவனை தன்னகத்திற்கு அழைத்துக்கொண்டது காலன் செய்த மன்னிக்க முடியாத குற்றம்.

## அமரர். டாக்டர்-இந்திரகுமார்

வாடைக்காற்றில் தொடங்கிய எங்கள் நட்பு! ஐரோப்பாவரை தொடர்ந்தது. அந்த நாட்களில் அதிகமாக பேசாத, மிக அடக்கமான வாலிபராகப் பார்த்த இந்திரகுமார் அவர்கள் லண்டனில் எழுத்தாளனாக, பத்திரிகையாளனாக மாறி பல நூல்களை எழுதி விருதகள் பல பெற்றிருப்பது இவரின் திறமைக்கு கிடைத்த சன்மானங்கள். இவரது துணைவியார் விஜயாம்பிகை அவர்கள் நாட்டியத்தில் மற்றொரு பேரொளி என்று சொல்லாம். பாரிஸிற்கு நான் வந்த பின்பு தொலைபேசியில் உரையடும்போது கேட்டுக்கொள்வார் "யேசு உன்னுடைய நாடகமொன்னில் நடிக்க எனக்குமோர் சந்தர்ப்பம் தா" என்று. ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கடைசிவரை கைகூடவே இல்லை.

## ஏ.ஈ.மனோகரன் (பொப்பிசைப் பாடகர்.)

வாடைக்காற்றில் நடிப்பதற்கு முன்பாகவே பெரும் புகழ் பெற்ற பொப்பிசைப் பாடகராக இருந்தவர் தம்பி மனோகரன் அவர்கள். அன்றைய நாட்களில் லட்சக்கணக்கான ரசிகர்கள் இவர்மேல் பெரும் பைத்தியமாகவே இருந்தார்கள். அப்படியிருந்தும் வாடைக்காற்றுக்காக இவர் எங்களோடு பழகிய நாட்களில் எந்தப் பந்தாவும் இல்லாமல் இனிமையாகப் பழகுவார்! இன்னும் சொல்லப்போனால் என்போன்ற மூத்த கலைஞர்களுக்கு மிகவும் மரியாதை கொடுப்பார். அன்று இவர் கற்றுக்கொண்ட நடிப்புப் பயிற்சியால் இன்றும் தமிழ்நாட்டில் சின்னத்திரைகளில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றார்.

## திருமதி. பாலேந்திரா-ஆனந்தராணி

ஆனந்தராணி அவர்கள் திருமதி ஆவதற்கு முன்னராக செல்வி இராசரத்தினம் ஆனந்தராணியாக இருந்த காலத்திலேயே பல மேடை, வானொலி நாடகங்களில் நடித்திருக்கின்றார். சிறந்ததொரு நடன ஆசிரியர். கலைத்துறைமீது இவர் வைத்திருந்த அழவற்ற காதலால் அவைக்காற்று கழகத்தின் இயக்குனர் திரு பாலேந்திரா அவர்களின் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த காலத்தில் அந்தக் கலைஞனையே காதலித்து திருமணம் செய்து கொண்டவர். வாடைக்காற்று திரைப்படத்தில் நடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில்த்தான் இவரின் திறமைகளை என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. அன்று கலைஞராக இருந்த பலர் குடும்ப வாழ்க்கையில் இணைந்த பின்னர் கலைத்துறையில் இருந்து ஒதுங்கியே விட்டார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரை இன்றுவரை கலைப்பணியில் தன்னை இணைத்துக்கொண்டு வாழ்பவர் ஆனந்தராணி மட்டும்தான்.

## அமரர். டிங்கிரி-சிவகுரு

நாங்கள் எங்கள் முகங்களைக் காட்டாமலேயே வானொலி மூலமாக மக்கள் மத்தியில் பிரபலமானவர்கள்! ஆனால் டிங்கிரி அப்படிப்பட்டவர் அல்ல? கிராமம் கிராமமாக நேரடியாகச் சென்று மேடைகள் மூலம் இவர் அள்ளி எறிந்த நகைச்சுவை வெடிகளால் அனைத்து மக்களாலும் அறியப்பட்டவர். இவருடைய பெயரை நான் முன்னமே அறிந்திருந்தாலும் வாடைக்காற்று படப்பிடிப்பின்போதுதான் நேரடியாகச் சந்தித்தேன். மெல்லியதான தோற்றம்! ஒல்லிக்குச்சியான உருவம்! கீச்சிட்ட குரல்! ஆனால் அற்புதமான சாரீரம்! படப்பிடிப்பு நாட்களின் இரவுகளில் இவரை பாடவைத்து நாங்களெல்லாம் சுற்றியிருந்து கேட்டு, ரசித்து மகிழ்வோம். நடித்துக் கொண்டிருக்கும்போதே மேடையில் மரணித்த இவனது மரணம் மரியாதைக்குரியது.

## எழுத்தளார்-அமரர்.அகஸ்த்தியர்

தான் ஏற்றுக்கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாக இருந்த ஒரு உயர்ந்த மனிதர்! தனது எழுத்துக்களை, வாழ்க்கையை தனது கொள்கைக்காகவே அர்ப்பணித்தவர். இவருடைய எழுத்தில் உருவான சில நாடகங்களை இயக்கி நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. இவரின் அப்படியொரு நாடகத்தை இயக்கி இலங்கை வானொலியில் ஒலிபரப்பி அதன் காரணமாக இலங்கை ரகசியப் பொலிசாரின் புகழ்பெற்ற விசாரணை மையமான ஐந்தாம் மாடிவரை நான் விசாரணைக்கு சென்று வந்ததை இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை!

**தமிழ்நாட்டில் ஈழ எதிலிகள் முகாமில்....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“முகத்தார் வீட்டுப் பொங்கல் புத்தக வெளியீட்டு விழாவில்



**IBC** வானொலியில் **S.K.** இராயனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.சுதன்ராஜ்

கலைத்துறையின் சகல வடிவங்களையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் மிகுந்த நாட்டமுள்ளவன். கவிதை எழுதுவான், கதை, கட்டுரைகள் எழுதுவான், இன்னும் பல விடயங்களை தானாக தேடிக் கற்றுக்கொண்டதை இவன் A.B.C. வானொலியில் பணியாற்றிய காலத்தில் நான் அருகிருந்தே கவனித்திருக்கின்றேன். ttn தொலைக்காட்சியில் இவன் தயாரித்து வழங்கிய "படலைக்குப் படலை" என்னும் தொடர் 200 அங்கங்கள் ஒளிபரப்பப்பட்டு நேயகர்களின் அமோக ஆதரவைப்பெற்ற ஒன்றாகும்.. இன்னும் இவன் சாதிப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது

# திரு.சிவனடியான்-ஸ்ரீபதி

என்னுடைய மரியாதைக்குரிய ரசிகர்களில் இவரும் ஒருவர். எனக்கு பாரிஸில் பாராட்டுவிழா நடந்தபோது என்னைக் கௌரவிப்பதற்காகவே ஜேர்மனியில் இருந்து பறந்து வந்து வாழ்த்திச் சென்றவர். தனது "இரங்கும் இல்லம்" சார்பாக எனக்கு "கலைமாமணி" என்ற விருதும், பணமுடிச்சும் தந்து கௌரவித்த பெருமகனார் இவர்.

# திரு.எஸ்.எஸ். குகநாதன்

பாரிஸ் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில்தான் இவரின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. பின்னர் T.R.T ஆரம்பித்த காலத்தில் அதன் இயக்குனராக இருந்த இவர் என்னை அழைத்து நாடகப்பிரிவுக்கு பொறுப்பாளர் என்னும் பதவியினைத் தந்து கௌரவப்படுத்தியிருந்தார். எனக்கு "கலைமாமணி" விருது கிடைப்பதற்கு தம்பி குகநாதனும் முக்கியமானவர். நான் இலங்கை வானொலியில் எப்படி கௌரவமான ஒரு பொறுப்பில் இருந்தேனோ! அதேபோன்று T.R.Tயிலும் எனக்கு ஒரு கௌரவமான இடத்தைத் தந்து பெருமைப்படுத்தியதில் இவரும் என்னால் மறக்கமுடியாதவர்.

# திரு.சந்திரகுமார் (குமார் சொப் சந்திரன்)

உயர்வு, தாழ்வு இன்றி அனைவரையும் தனது இதயத்தராசில் ஒரே அளவாக நிறுத்திப் பார்க்கும் உயர்ந்த மனிதர் திரு.சந்திரகுமார் அவர்கள். ரி.ஆர்.ரி வானொலியை ஆரம்பித்த நாட்களில் இவர் பல நிறுவனங்களுக்குச் சொந்தக்காரராகவும் இருந்தார். ஆனாலும் வானொலிக் கலையகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது அனைத்து ஊழியர்களுக்கும் வணக்கம்கூறி இவர் கொடுக்கும் மரியாதை அளப்பரியது. காலம் செய்த சதி பின்னாட்களில் வானொலி நிர்வாகம் இவரது கையைவிட்டு மாறியபோது கண்கள் நீரைச் சாரை சாரையாக சொரிய அதே மரியாதையுடன் அனைவரிடமும் விடைபெற்ற அந்தக் காட்சி என்னால் மறக்க முடியாதது. இவரது தந்தையார் திருமிகு தவவிநாயகம் அவர்கள் தாய்மண்ணில் வாழ்ந்த காலத்தில் ஊர் மதிக்கும் மிக உயர்ந்த பொறுப்புகளையெல்லாம் வகித்தவர். இருந்தும் ஊர்மக்களுக்கு அவர் கொடுத்த மரியாதையும், ஊர் மக்கள் அவருக்கு கொடுத்த மரியாதையும் நாடறிந்தது. அந்த உயர்ந்த மனிதரின் பெயரை அவரது பிள்ளைகள் அனைவரும் காப்பற்றிவருகின்றார்கள். இந்த அரிய பண்பை எங்களில் பலர் இவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

இவர் கறுப்பையும் வெறுப்பதில்லை!
வெழுப்பையும் வெறுப்பதில்லை!

ஏனெனில்
இருட்டிலும் ஒளிபரப்பும்
சந்திரன் இவர்!

எதிரிகளே இல்லாதது
இவரது சாம்ராஜ்யம்!

தந்தை முதல் தனயர்கள்வரை
வந்தவர்களை வரவேற்பதில்
கர்ணனைப் போன்றவர்கள்!
இவை
அல்லைப்பிட்டியில் தொடங்கி
ஐரோப்பாவரை...

தம்பி வண்ணை இவரைப்பற்றி எழுதியிருக்கும் இந்த வரிகள் வெறும் வண்ண வரிகளல்ல? வைர வரிகள்!.

## ஸ்ரீமகால்- ஸ்ரீதரன்

T.R.T. யின் நிர்வாகிகளுள் ஒருவரான தம்பி ஸ்ரீ அவர்களின் மலர்ச்சியான சிரித்த முகத்தைப்போல இவரது மனமும் வெள்ளையானது. இவரும், இவரது தம்பியார் பாஸ்கரன் அவர்களும் கலைஞர்கள்மீது வைத்திருக்கும் மரியாதை மிக உயர்வானது. கலைஞர்கள் நடாத்தும் சகல விழாக்களிலும் இந்த இரண்டு சகோதரர்களையும் நாம் கண்டிப்பாகக் காணலாம். நாட்டுப்பற்றாளர்களான இவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன். தம்பி வண்ணை அவர்கள் தனது "காலங்கள் வாழ்த்தும் முன்னூறு ஈழத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவிற்காக வெளியிட்ட "வண்ணை"யின் சிறப்பிதழில் இவரைப்பற்றி எழுதியிருந்த வரிகள் இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கின்றது அவை...

யாரும் இல்லாக் காட்டுக்குள்
யாரும் பார்க்காவிட்டாலும்
தாம் பூப்பதை
செடிகள் நிறுத்துவதில்லை!

கலைகளின் நோக்கமறிந்து
அவைகளின் தேவையறிந்து
காட்டுக்குள் பூக்கும் பூக்களைப்போல
நல்லவைகளை நாடிவந்து செய்வார்!

இவருக்குத் தெரிந்தவைகளெல்லாம்
நல்லவைகள் மட்டும்தான்!

எனக்குத் தெரிந்த வகையில் இந்த வண்ண வரிகள் நூற்றுக்கு நூறு உண்மையே!

## சிவகுரு-பாலச்சந்திரன்

இவரை சிவகுரு.பாலச்சந்திரன் என்பதைவிட ஈழநாடு பாலச்சிந்திரன் என்றால்த்தான் எல்லோருக்கும் தெரியவரும். கடுமையான உழைப்பாளி! அதுபோல தமிழர் நலன பேணும் விடயங்களில் எல்லாம் தானும் ஒருவராக நிற்பார். கலைஞர்களின் முயற்சிகளுக்கெல்லாம் தோள் கொடுப்பார், தூணாக நிற்பார். கலைஞர்கள் சம்பந்தப்பட்ட செய்திகளையெல்லாம் பணம் வாங்காமலேயே ஈழநாட்டில் விளம்பரம் செய்துகொள்வார். அந்த வகையில் நானும் இவருக்கு கடமைப்பட்டவன். T.R.T நிர்வாகிகளில் ஒருவராக இருந்த இவரைப்பற்றி தம்பி வண்ணை அவர்கள் தனது "வண்ணை" சஞ்சிகையில் இப்படி எழுதியிருந்தார்

மூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்களெல்லாம்
மனிதர்கள் அல்ல?
முயற்சி செய்பவர்கள்தான் மனிதர்கள்!

அன்று படித்தோம் முயற்சியின் விலை
கஜனி முகமது என்று!
இன்று பார்க்கின்றோம்!
முயற்சியின் விருட்சம் பாலச்சந்திரன்!

எம்மவர்கள் முயற்சிகளையெல்லாம்
தட்டிக்கொடுப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் களைத்திருக்கும் வேளைகளில்
முட்டுக்கொடுப்பார்!

விளம்பரத்தைத் தேடிக்கொள்ளாத
வித்தியாசமானவர்!
அன்று முதல், இன்றுவரை
நிறம் மாறாதவர்!
இந்த வண்ண வரிகளை நானும் ஆமோதிக்கின்றேன்.

## திரு.எஸ்.கே. காசிலிங்கம்

நான் பாரிஸ் வந்த ஆரம்பநாட்களில். இங்குள்ள கலைஞர்கள் எல்லோரையும் சந்திக்கவேண்டும் என்ற ஆவல். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அப்பொழுது இவர் "தமிழன்" பத்திரிகையின் ஆசிரியராக இருக்கின்றார். அப்பத்திரிகையின் நிர்வாகிகளில் ஒருவரான திரு.பாய்க்கியநாதன் அவர்கள் என்னை ஒரு செவ்வி எடுக்க அதை "தமிழன்" பத்திரிகையில் பிரசுரித்து ஐரோப்பாவில் உள்ள கலைஞர்களுக்கெல்லாம் என்னை அறிமுகம் செய்து வைத்த பெருமை திரு. காசிலிங்கம் அவர்களையே சாரும். இவற்றுக்கெல்லாம் மேலாக கலைஞர்களை, எழுத்தாளர்களை தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் இவருடைய பாங்கு எனக்கு பிடித்த ஒன்றாகும்.

## திரு.சி.காரளபிள்ளை (மாஸ்றரர்)

இவரைப்பற்றி ஒரு மேடையில் குறிப்பிடும்போது நான் சொன்னேன் "இவர் ஆங்கிலத்தில் பேசினால் அற்றலாண்டிக் சமுத்திரம்! தமிழில் பேசினால் பசுமிக் சமுத்திரம்" என்று. இது நூற்றுக்கு நூறு உண்மை. இவர் ஆங்கிலத்தில் பேசும்போது அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ளாதவர்கள்கூட மிகவும் ரசித்துக் கேட்பார்கள்! காரணம் இவர் பேசுகின்ற பாணியும், அதன் வேகமும்தான்! இவரிடம் இருக்கும் இன்னொரு சிறப்பு இவருடைய ஞாபகசக்தி! சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது இடையிடையே உதாரணங்களாக அறிஞர்களின் தத்துவங்கள், பொன்மொழிகள், திருக்குறள்கள் இவையெல்லாம் அவரையறியாமலேயே அவர் நாவில் வந்து நர்த்தனம் புரியும். என்னுடைய கலைக்கு அவர் ரசிகர் என்றால் அவருடைய மேடைப்பேச்சிற்கு நான் ரசிகன்.

**ஒரு ஜாலியான பொழுதில்....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.விக்கி-நவரட்ணம்

A.B.C வானொலி மூலமாக கிடைத்த ஏராளமான நண்பர்களில் தம்பி விக்கி நவரட்ணமும் ஒருவர். இவருடைய கவிதைகளில் எல்லாம் மண்வாசனை கமகமக்கும்! அது எனக்குப் பிடிக்கும். நான் எனது வாழ்க்கை வரலாற்றை எழுதப்போகின்றேன் எனக் கூறியதும் அந்தப் புத்தகத்திற்கான முதல் வாழ்த்தை எழுதியனுப்பியவன். இவனுடைய "ஆகாய கங்கை" என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவை A.B.C வானொலி சார்பாக ரவி மாஸ்ர்ரர் அவர்கள் ஜேர்மனியில் வெளியிட்டபோது அந்த வெளியயீட்டுவிழா மேடையில் என்னையும் அமரவைத்து கௌரவப்படுத்தியவன். எழுத்துத் துறையில் இவன் உயர்ந்த இடத்தில் அமருவான் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

## திரு.கல்லாறு —சதீஸ்.

சூரியப்பெருமகனார் தனது வேலை முடிந்து ஓய்வெடுக்கப்போகும் ஒரு மாலை நேர வேளை.. என் ஆஸ்த்தான கவிஞர் வண்ணை தெய்வத்தோடு தம்பி கல்லாறு சதீஸ் குடும்ப சகிதமாக எனது இல்லம் வருகின்றாாகள். தான் எழுதிய "பனிப்பாறைகளும் சுடுகின்றன" "சொர்க்கங்களும் தண்டிக்கின்றன" ஆகிய இரண்டு நூல்களையும் எனது கையில் தந்து எனது ஆசீர்வாதத்தை வாங்குகின்றார்கள். ஒரு சில மணித்தியாலங்கள்தான் என்னோடு உரையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய பேச்சில் அப்படியொரு வசீகரம்! அவனைப்போலவே பண்பாகப் பேசும் அவனின் துணையாள்! இந்த இருவரும் அன்றையதினமே எனது நெஞ்சில் குடியிருந்துவிட்டார்கள். பின் ஓய்வான இரவுகளில் இவன் தந்துவிட்டுப்போன புத்தகங்களில் உள்ள கதைகளை படிக்க ஆரம்பித்தேன். சில நேரங்களில் நித்திரை வராவிட்டால் புத்தகங்களைப் பிரட்டுவதுண்டு. இவனுடைய புத்தகத்தை படிக்க ஆரம்பித்தால் முழுவதுமாக படித்து முடிந்த பின்னர்தான் நித்திரையே வருகின்றது! இவன் வருங்காலத்தில் எழுத்துலகின் சிகரத்தில் இருப்பான் என்பது நிச்சயம்!.

## திரு.வண்ணை தெய்வம்

இவன் என் ஆஸ்த்தான கவிஞன்! நான் வருடா,வருடம் நத்தார் புது வருடத்திற்கு நண்பர்களுக்கும், உறவுகளுக்கும் வாழ்த்து அனுப்புவது வழக்கம். அந்த வாழ்த்துக் கவிதையை எழுதித்தருபவனே இவன்தான். எனது இந்த வாழ்க்கை வரலாறு நூலாவதற்கு மூல காரணமும் இவன்தான். இப்பொழுது நான் எழுதிக்கொண்டிருப்பதைவிட ஏராளமான தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி மூலமாக இவனது காதுகளில் போட்டு வைத்திருக்கின்றேன். ஒருவேளை என்னால் கதையை முழுவதுமாக எழுதமுடியாமல் போய்விட்டால் அதை கண்டிப்பாக வண்ணை முடித்துவைப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இவனின் முதல் நூலான "கொந்தல் மாங்காய்"இன் மட்டையின் கடைசிப்பக்கத்தை எனது எழுத்துக்களால் அலங்கரிக்கவைத்து என்னை பெருமைப்படுத்தியவன். இவனது வீட்டிற்கு சில தடவைகள் செல்லக்கூடிய வாய்ப்புகள் எனக்குக் கிட்டியிருக்கின்றது. அப்பொழுது அங்கு நான் கண்டு பிரமித்தது இவனுடைய புத்தக அலுமாரியை! புகழ்பெற்ற எழுத்தாளர்களில் இருந்து, அறிமுக எழுத்தாளர்களின் நூல்களெல்லாம் அந்த அலுமாரியை நிறைத்திருந்தது.. புத்தகங்களை நாங்கள் மேலிருந்து கீழ்நோக்கி வாசிக்கின்றோம்! புத்தகங்களோ நம்மை கீழிருந்து மேல்நோக்கி உயர்த்துகின்றதுஎன்ற உண்மையை உணர்ந்தவன்! "காலங்கள் வாழ்த்தும் 300 கலைஞர்கள்" என்னும் பொக்கிசத்தை நமக்குத்தந்த இவனை காலம் வாழ்த்திக்கொண்டே இருக்கும்.

## பூவாடை வீசிவரும் தமிழ் ஓடை...
## "அமுது அண்ணா!"

பாரிஸின் பிரபலமான மருத்துவமனை! நவீன வசதிகளுடன் சொகுசுக்கட்டில், இருதய சிகிச்சைக்கு உள்ளாக்கப்படப்போகின்றேனே என்னும் அங்கலாய்ப்பு, ஆதங்கங்களுடன் கடந்த காலங்களை ஐந்தொகை போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும் வேளை, அன்று 22-02-2005 வெள்ளிக்கிழமை தொலைபேசி அழைக்கின்றது ரிசீவரை எடுத்து காதருகில் வைக்கின்றேன் "ஹலோ முகத்தார் ஐயாவா? நான் வண்ணை பேசுகின்றேன் ஒரு மகிழ்ச்சிகரமான சமாச்சாரம்!... என்று தொடர்கின்றது உரையாடல்.

வண்ணை சொன்ன செய்தியைக்கேட்டு அகமகிழ்கின்றேன். 24-04-2005ல் நடைபெறவிருக்கும் எனது பாசமிகு நண்பர் "அமரர்" "நடிப்பிசைக்காவலர்" பாரிஸ் கலைக்கோவிலின்" ஸ்தாபகர் கிறெகரி-தங்கராஜா அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவாஞ்சலி ஞாபகார்த்தப் பெருவிழாவில் எங்கள் "சொல்லின் செல்வர்" "செவாலியர்" அமுது அண்ணா அவர்களுக்கு பாராட்டும், விருது வழங்கல் வைபவமும் இடம்பெற இருக்கின்றது என்பதுான் அந்தச் செய்தி.

கவிஞர்களை, கலைஞர்களை, இலக்கியப் படைப்பாளிகளை, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயதுண்டு, துணிவுண்டு ஆனால் அதற்கேற்ற தகுதி என்னிடம் உண்டா என்ற ஐயப்பாடும் உண்டு! இளவாலை புனித அன்னம்மாள் ஆலயமணியின் அனந்த நாதமும், வினாயகப்பெருமான் கோவிலின் சங்கொலியும் ஒருங்கே பொங்கு புனலாக தரங்கம் பாடுகின்ற இளவாலையம்பதியின் பெருமைமிகு மகனார், தமிழோடு கொஞ்சிவிளையாடும் தேன் வண்டு, நமக்கென்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி! நமக்கென்றோர் தேசம்! நமக்கென்றோர் பண்பாடு! நமக்கென்றோர் இலட்சியம்! என்ற குறிக்கோளோடு வாழ்ந்து வரும் சிரஞ்சீவி "அமுது அண்ணா" அவர்களை என் அடிமனத்திலிருந்து உள்ளன்போடு உணர்ச்சிபூர்வமாக தெரிந்த ஓரிரு வரிகளால் என்றாலும் நான் வாழ்த்தியாக வேண்டும். ஏனென்றால் அமுது அண்ணாவிற்கு நான் ஓர் ஆயட்கால நன்றிக் கடனாளி இது சத்தியவாக்கு.

திரும்பிப்பார்க்கின்றேன்! பல வருடங்கள் பின்னோக்கி நடந்தும் பார்க்கின்றேன். கடந்த காலங்களை இரைமீட்டு அசைபோட்டும் பார்க்கின்றேன். 1950 வரை எனது கல்லூரி வாழ்க்கைக் காலங்களில் நான் நடித்துவந்த பல நாடகங்களைப் பார்த்து என்னைத் தட்டிக்கொடுத்து, ஊக்குவித்து, எனது கலைத்துறைப் பாதைக்கு வழிகாட்டியவர் இளவாலை அமுது அண்ணாவேதான்! அத்தோடு நின்றுவிடவில்லை?! "சுதந்திர தாகம்" என்னும் தனது நாடகமொன்றின் மூலமாக 1966ல் இலங்கை வானொலிக்கு நுளைவுச்சீட்டையும் வாங்கித்தந்தவர் அமுது அண்ணாதான்!. இதைத் தொடர்ந்துதான் எனது திரைப்படப்பிரவேசங்கள் என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும்.

இதற்கும் மேலாக ஒரு சுவாரசியமான ஒருமைப்பாட்டையும் எண்ணிப்பார்க்கின்றேன். நான் மாணவப்பருவம், எனது தந்தையார் எனது தாய்வழி மூத்த மைத்தினி ஆசிரியமணி தெரேசம்மா அக்காவை அமுது அண்ணா அவர்களுக்கு திருமணம்பேசி முன்னிலை வகித்து திருமணத்தையும் நடாத்திவைத்தார்.

பதினாறு செல்வங்களில் குழந்தைச்செல்வமே விலைமதிப்பற்றது! இறைவன் அருளாலும், அண்ணா அவர்களின் சந்தோசமான வாழ்க்கையாலும் பத்து குழந்தைச் செல்வங்களைப் பெற்று (5 ஆண் - 5 பெண்) வளர்த்து கல்விமான்களாக்கி திருமணங்களையும் நிறைவேற்றிவைத்து தனது திருமணப் பொன்விழாவையும் பல வருடங்களுக்கு முன் கண்டு கழித்தவர் எங்கள் அமுது அண்ணா. இதன் பிரதிபலனாகவோ என்னவோ அமுது அண்ணா அவர்களே எனக்கும் திருமணம்பேசி முன்னிலை வகித்து திருமணத்தை முடித்து வைத்து என்னையும் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் திருமணப் பொன் விழாவையும் காணவைத்தார்.

இது என்ன பிராப்தமா? முற்பிறவியில் விட்டகுறை, தொட்டகுறையா? அல்லது நாலடியாரில் பளவினை அதிகாரத்தில் ஊழ்வினை அத்தியாயத்தின் முதற்பா "பல்லாவுள் உய்த்துவிடினும் குழக்கன்று வல்லதாம் தாய்நாடிக் கோடலை….." என்னும் வரிகள் வழங்கும் சான்றிதழா? என்னால் ஊகிக்கவே முடியவில்லை! வாழ்த்துரை வழங்குவதற்கு எழுந்து நின்ற எனது எழுதுகோல் வாழ்க்கை வரலாற்றையும் வரைந்துவிட்டது! இது எனது பலவீனம்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு விருதினையும் யாசியாத அமுது அண்ணா அவர்கள் தற்போது பல விருதுகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார். "அன்னை தெரேசா காவியம்" படைத்ததற்காக சென்ற ஆண்டு பாப்பரசர் விருதையும் (Papal Knight Cheualies) சுவீகரித்துக் கொண்டவர். அண்ணா அவர்களின் துணைவியாரின் பெயரும் திரேசம்மாதான்! என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஆசிரியமணி திரேசம்மா அக்கா அவர்கள் சென்ற வருடம் இறைவனடி சேர்ந்ததும் பிள்ளைகள் சகிதம் துணைவியாரின் பூதவுடலை இலண்டனில் இருந்து இளவாலையம்பதிக்கே எடுத்துச்சென்று சொந்த மண்ணிலேயே விதைத்துள்ளமை தாம் பிறந்த மண்ணை எவ்வளவக்கெவ்வளவு நேசிக்கின்றார் என்பது வெள்ளிடைமலை!.

இளவாலை அமுது அண்ணா அவர்கள், இளவாலை மண்வழத்தைப்பற்றி பல வருடங்களுக்கு முன்னர் பாடிய கவிதையில் சில வரிகள் இன்றும் எனது ஞாபகத.தில் ரீங்காரமிடுகின்றன...

இளவாலையே! தேங்காய் வீழ்ந்தால் மாங்காய் சொரியும்
பலாக்காய் வீழ்ந்தால் பாக்குப் பிஞ்சுகள் சிதறும்
முற்றத்து வாழைமரங்கள் சுற்றத்திற்கு கை நீட்டும்..
வெற்றிலைக் கொடிகள் முருங்கை மரத்திற்கு முதுகு சொறியும்
திராட்சைக் கொடிகளும் பாரம் தாங்காது வழைந்து நெழியும்
நெல்லறுத்த வயல் வெளிகளிலே கிளிக்கூட்டங்கள் பூபாளம் பாடும்
மரவெள்ளிக் கிழங்கிலும் மண் வாசனை வீசும்

அமுது அண்ணா அவர்களே காலங்கள் யாவும் நின்று கல்லிலே எழுதிவைத்த கோலம் போல... ஒளி வழங்கி குன்றெனப் புகழும் சேர்த்து ஞாலத்தில் ஒருவனென நற்பெயரும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவதோடு மலரப்போகும் தமழீழத்தில் மீண்டும் கால் பதிப்பீர் என இறைவனை வேண்டிநிற்கும் நன்றிக்கடனாளி

**தங்கள் அருமைத்தம்பி "முகத்தார்" யேசுறட்ணம்**
**28-02-2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்தார் ஐயா அவர்கள் வாய்மொழியால் சொன்னதை எழுத்தாக்கி, அவர் விட்ட இடத்தில் இருந்து எழுதுகின்றேன்

# வண்ணை தெய்வம்

எல்லா விடயங்களிலும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கும் "முகத்தார்" ஐயா அவர்கள் தன்னுடை இந்த வரலாறு எழுதும் விடயத்தில் சில முக்கியமான பகுதிகளை எழுதித் தராமலேயே சென்றுவிட்டார். அவை தனது திரைப்பட அனுபவங்களையும், தான் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்து நினைவுகளையும்தான்.

அதற்குக் காரணம் கதையை முழுமையாக எழுதி முடிப்பதற்குள் அவரது உடலின் பல உறுப்புக்கள் அவரோடு முரண்பட்டுக்கொண்டு அவருக்கு ஒத்துளைப்பு கொடுக்காதமைதான். ஆனாலும் அவரின் மகள் ஜீவா அவர்களின் தேடுதலிலும், முன்னர் அவர் என்னோடு பகிர்ந்துகொண்ட சில செய்திகள் மூலமாகவும், நாம் தெரிந்து கொண்டவைகளை இங்கு தொகுத்துத் தருகின்றேன்.

தான் நடித்த திரைப்படங்களில் "வாடைக்காற்று" பற்றித்தான் என்னுடன் அதிகம் பகிர்ந்திருக்கின்றார். அந்த திரைப்படத்தில் இவருடன் இணைந்து நடித்த பலகலைஞர்கள் இப்பொழுது வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்களைப்பற்றி சொல்வதற்கு முன்னர் வாடைக்காற்று திரைப் படத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லவேணடும்.

குரும்பசிட்டியையைச் சேர்ந்த திரு.எஸ் சிவதாசன் அவர்கள்தான் இந்தப் படத்தின் தயாரிப்பாளர். இலங்கையின் பிரபலமான எழுத்தாளர் செங்கை ஆழியான் எழுதி வீரகேசரி பிரசுரமாக 1973ம் ஆண்டு வெளியான வாடைக்காற்று நாவல் திரைப்படமாக்குவதற்காக தேர்வு செய்யப்பட்டது. திரைக்கதை வசனம் எழுதியிருந்தவர் இன்னொரு பிரபல எழுத்தாளரான செம்பியன் செல்வன். (பேசாலையில் தங்கியிருந்த காலத்தில் கே.எம். வாசகரும் சில காட்சிகளுக்கு திரைக்கதை வசனம் எழுதியதாக முகத்தார் மூலமாக அறிந்திருக்கின்றேன்.) படத்தை இயக்கியிருந்தவர் இந்தியாவில் பல வருடங்களாக உதவி இயக்குனராக பணியாற்றி அப்பொழுது சிங்களத் திரைபடங்களை இயக்கிக்கொண்டிருந்த திரு.பிறேம்நாத்-மொறாய்ஸ் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி அந்தப் படத்தில் முகத்தார் அவர்களுடன் இணைந்து நடித்திருந்த நடிகர்களைப் பார்ப்போம்.

1. அண்ணை றைற்.கே.எஸ்.பாலச்சந்திரன் தற்பொழுது கனடாவில் வாழ்கின்றார்
2. பொப்பிசைப் பாடகர்.ஏ.ஈ.மனோகரன் தற்பொழுது தமிழ்நாட்டில் வாழ்கின்றார்
3. டாக்டர். இந்திரகுமார் லண்டனில் வாழ்ந்து அமரத்துவமாகிவிட்டார்
4. எஸ்.எஸ்.கணேசபிள்ளை அமரத்துவமடைந்துவிட்டார்
5. லடீஸ்-வீரமணி அமரத்துவமடைந்துவிட்டார்
6. பாலேந்திரா-ஆனந்தராணி தற்பொழுது லண்டனில் வாழ்கின்றார்
7. டிங்கிரி-சிவகுரு அமரத்துவமடைந்துவிட்டார்

மற்றும் ஏ.பிரான்சிஸ், கே.ஏ.ஜவாகர், வேல்-ஆனந்தன், எஸ்.பரராஜசிங்கம், சந்திரகலா, ஜெயதேவி, வசந்தா-அப்பாத்துரை போன்ற பிரபலமான கலைஞர்கள் எல்லாம் வாடைக்காற்றில் நடித்திருந்தார்கள்

இதன் படப்பிடிப்பிற்காக ஒருமாத காலம் இந்த நடிகர்கள் எல்லோரும் பேசாலையில் தங்கியிருந்த காலத்தில் தாங்கள் அனைவரும் ஒரு கூட்டுக் குடும்பத்து உறவுகள்போல பழகிய நாட்கள் மறக்கமுடியாதவை என ஐயா அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

இத்தனை அற்புதமான நடிகர்களில் பொன்னுக்கிழவனாக நடித்த யேசுரட்ணமே முன்னணியில் நிற்கின்றார் என 09-04-78ல் சிந்தாமணியில் விமர்சனம் எழுதிய விமர்சகர் கு.ம.சுந்தரம் அவர்கள் முகத்தாரின் நடிப்பிற்கு அனைத்து நடிகர்களையும்விட அதிகமாக 65 மார்க்குகள் வழங்கியிருந்தார். ஏனையவர்கள் எல்லாம் அதற்குக் கீழேதான்!

இந்தப் படத்தில் நடித்ததன் மூலமாக வானொலிக்கு அப்பாலும் தான் பல கலைஞர்களை நண்பர்களாக சம்பாதிக்க முடிந்தது. என புழகாங்கிதம் அடைந்துகொள்வார்.

இந்தப் படத்தைத் தவிர கோமாளிகள், ஏமாளிகள் போன்ற படங்களிலும் கௌரவ பாத்திரங்களில் நடித்தும் பொன்மணி திரைப்படத்தில் பின்னணிக் குரல் கொடுத்தும் ஈழத்து திரைப்படங்களில் தனது பங்களிப்புகளை வழங்கியிருக்கின்றார்.

அமரர் அகஸ்த்தியர் அவர்களின் நாடகம் ஒன்றை நடித்து இலங்கை வானொலியில் ஒலிபரபிய விடயத்தால் இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முகத்தார் அவர்கள் ஐந்தாம் மாடிக்கு அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரிக்கப்பட்டதை முன்பு ஒரு இடத்தில் அவரே குறிப்பிட்டிருக்கின்றார். முன்பு ஒருமுறை இதுபோன்தொரு குற்றரச்சாட்டில் ஐந்தாம் மாடிக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட கலைஞர் அண்ணைறைற் பாலச்சந்திரன் பின்னர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு நீண்ட காலம் தடுப்புச் சிறையில் இருந்து பின்னர் பிணையில் வெளியே வந்ததும் கனடா சென்றுவிட்டார். சில வேளைகளில் தனக்கும் அப்படியானதொரு சூழ்நிலை ஏற்படலாம் என உணர்ந்த முகத்தார் அவர்கள் தமது பிள்ளைகள் பிரான்ஸில் வாழ்வதால் தானும் அங்கு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதாலும், உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்பதாலலும், முதலில் தானும், மனைவியும், மகன் செல்வாவுமாக தமிழ்நாடு சென்றார்கள்.

1985ம் ஆண்டு யூலை மாதம் இலங்கையைவிட்டு வெளியேறி தமிழ்நாடு சென்று அங்கு திருச்சியில் தங்கியிருந்து மகன் செல்வாவை படிக்கவைத்துக்கொண்டிருந்த காலங்களில் அமரர் தந்தை செல்வா அவர்களின் மகன் திரு.சந்திரகாசன் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. சந்திரகாசன் அவர்கள் ஈழத்தில் இருந்து அகதிகளாக வந்திருக்கும் மக்களுக்காக “ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகம்” என்றதொரு அமைப்பை உருவாக்கி நடாத்திக்கொண்டிருந்தார். அந்த அமைப்பில் இவரையும் இணைந்து பணியாற்றும்படி கேட்டுக்கொள்ள இவருக்கும் எமது மக்களுக்கு நாமும் ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்தல் இருந்ததால் அந்த அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்து செயல்ப்பட்டார்.

ஐயாவுடன் இணைந்து அவரின் துணைவியார் திருமதி அயறின் அவர்களும் பிரான்ஸ் வரும்வரை திருச்சி முகாமில் பணியாற்றியிருந்தார். இதுபற்றி ஒருமுறை என்னிடம் அளவளாவும்போது கூறினார் “நான் எல்லா முகாம்களையும் பார்வையிடச் செல்வேன் அப்பொழுது ஒவ்வொருவருடைய சோகக் கதைகளையும் கேட்கும்போதும் இதயத்தைப் பிழிந்தெடுப்பதுபோல வேதனையாக இருக்கும். அவர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வது எனத் தெரியாது! ஆனால் என்னமாதிரியான உதவிகள் தேவையோ அவைகளை என்னால் முடிந்தமட்டும் செய்து கொடுத்திருக்கின்றேன் அவற்றில் படிப்பு, வேலைவாய்ப்பு போன்றவைகள் முக்கியமானவையாக இருக்கும்.

ஆடிய கால்களும், பாடிய வாயும் சும்மாயிருக்காது என்று பெரியோர்கள் சொல்வார்கள் அப்படித்தான் முகத்தார் ஐயாவினால் தனது கலைத்துறையை விட்டு விலகி இருக்க முடியவில்லை! திருச்சி முகாமில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் கலைக் கழகம் ஒன்றினை ஆரம்பித்து அதன் மூலமாக அங்கு வாழ்ந்துவந்த இளைஞர்களுக்கு நாடகம் எழுதி, நடிக்க பழக்கி மேடையேற்ற ஆரம்பித்தார். இப்படி செய்ய ஆரம்பித்து பின்னர் ஒவ்வொரு முகாம்களிலும் போட்டிகளையும் நடாத்த ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாக ஒருமுறை திருச்சியில் நடைபெற்ற போட்டியில் இவரது இயக்கத்தில் திருச்சி முகாமைச் சேர்ந்தவர்கள் நடித்த "சிரிக்கும் சிலைகள்" என்ற நாடகம் முதல் பரிசினைப் பெற்றது. அந்த நாடக விழாவிற்கு தலைமையேற்றிருந்தவர் தமிழறிஞர் "முத்தமிழ்க்காவலர்" கி.அ.பெ.விஸ்வநாதன் அவர்கள் முகத்தார் ஐயா அவர்களின் கலைப்பணியினைப் பாராட்டி "கலைப்பணிச்செல்வர் என்னும் விருதினையும் வழங்கிக் கௌரவித்திருந்தார். இதைப்பற்றிக் முகத்தார் ஐயா அவர்கள் எங்களோடு உரையாடும் போதெல்லாம் "எனது வாழ்நாளில் மறக்கமுடியாத பெரு விருது இது" எனச்சொல்லி பெருமிதப்பட்டுக்கொள்வார்.

இளையவர்களை வைத்து நாடகங்களை பழக்கி மேடையேற்றிவந்த முகத்தார் ஐயா அவர்கள் தன்னோடு ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவரும், இலங்கை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சியை நடாத்தி பெரும் புகழ் பெற்றவருமான வானொலிமாமா இரா பத்மநாதன் அவர்களையும், அதேபோல அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தவரும் இலங்கை வானொலியால் பெரும் புகழ் பெற்ற கவிஞருமான திரு.ஈழத்து இரத்தினம் ஆகியோருடனும் இன்னும் சில கலை ஆர்வலர்களையும் இணைத்து புதிய கலைக் கழகம் ஒன்றை ஆரம்பித்து அதில் அகதிகளாக தமிழ்நாட்டில் வாழும் ஈழ மக்களின் சோகமான வாழ்க்கையை பிரதிபலிக்கும் நாடகங்கள், பாடல்களை தயாரித்து அந்த நிகழ்வுகளுக்கு இந்திய அரசியல் தலைவர்களை அழைத்து முன்னிலை வகிக்க வைத்தும் அரங்கேற்றியதால் அரசியல் ரீதியாகவும் அகதிகளாக வாழ்ந்த எம் மக்கள் சில,பல நன்மைகளை அடைய முடிந்தது.

நாடகங்களில் முகத்தார் அவர்களுடன் இணைந்து நடித்தவர்கள். "வானொலி மாமா" திரு.இரா- பத்மநாதன், டாக்டர். அருண்கோபாலன், டாக்டர்.ஜெயலட்சுமி., திரு.தேவராஜா போன்றோர். இசை நிகழ்வுகளுக்கு பாடல்களை எழுதியிருந்தவர் கவிஞர் ஈழத்து ரத்தினம் அவர்கள். பாடல்களுக்கு இசையமைத்தவர் இசையமைப்பாளர் வி.எஸ்.உதயா அவர்கள்.

ஐயா அவர்கள் மீண்டும் தமிழ்நாட்டில் முழுமையாக கலைத்துறைக்கு தன்னை நுழைத்துக் கொள்வதற்கு முக்கிய காரணம், பிரான்ஸில் வாழ்ந்து கொண்டிருந்த இவரின் பிள்ளைகளின் பெரு,முயற்சியினால் 1990ம் ஆண்டே ஐயாவின் துணைவியார் திருமதி. அயறின் அவர்கள் பிரான்ஸ் சென்றது இவருக்கு மிகவும் வாய்ப்பாக இருந்தது. அத்தோடு இதே காலகட்டத்தில் இவரது கலைப்பணியையும், காரியாலயப் பணியையும் செய்வதற்கு வசதியாக சென்னையில் உள்ள தலைமைக் காரியாலயத்திலேயே இவர் தங்குவதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார் திரு சந்திரகாசன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலகடட்த்தில் திருச்சியில் இருந்து கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவன் திரு.கேசவன் அவர்கள் சிவில் என்ஜியரிங் முடிப்பதற்காக சென்னை வர அவருக்கு சென்னையில் உள்ள Univarsitay யில் இடம் எடுத்துக்கொடுத்து தான் தங்கியிருந்த காரியாலயத்திலேயே தங்குவதற்கும், கல்லூரி இல்லாத லீவு நாட்களில் அங்கேயே வேலை செய்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தார். அந்த மாணவனோ தன்னுடைய கடமைகளையும் செய்வதுடன், முகத்தார் அவர்களின் தேவையறிந்து பணிவிடை செய்ததையும் ஐயா அடிக்கடி சொல்லிக்கொள்வார். அந்த மாணவன் கேசவன் இப்பொழுது பிரான்ஸில்த்தான் வாழ்கின்றார்..

சென்னையில் இருந்துகொண்டே அங்குள்ள அனைத்து முகாம்களுக்கும் சென்று பார்வையிடுவதற்கு வசதியாக நிர்வாகத்தால் இவருக்கு Driver வாகனம் ஒன்றையும் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்கள். இப்படி அந்த வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது நடந்த சுவையான சம்பவம் ஒன்றை எங்களுக்கு அடிக்கடி சொல்லிச் சிரிப்பார். அதை அவர் வாயாலேயே கேட்போம்.

"நான் வீதியில் போய்வரும் போதெல்லாம் என்னைத் தெரியாதவர்கள்கூட எனக்கு நிறையவே மரியாதை தருவார்கள்! ஏனென்றால் எனது நடை, எனது மீசை, இவைகளைப் பார்த்துவிட்டு பொலிஸ்க்கார ஐயா போகின்றார் என்பார்கள்! இப்படித்தான் ஒருநாள் மதியம் சாப்பிடுவதற்காக ஒரு உணவகத்திற்குச் சென்றுகொண்டிருந்தேன் அப்போது என்னை விலத்திக்கொண்டு ஒருவர் வேகமாக ஓடினார். பின்னால் அந்த கடையில் வேலை எசய்யும் ஊழியர் ஒருவர் ((Waiter) காது துண்டாக அறுந்த நிலையில் ஓடிவந்தவர் என்னைக் கண்டதும் "பொலிஸ்க்கார ஐயா, பொலிஸ்க்கார ஐயா என் காதைக் கடித்துவிட்டு ஓடுறான் பிடியுங்கோ, பிடியுங்கோ" என்றான். உடனே நானும் அங்கு நின்றவர்களைப் பார்த்து அவனைப்பிடியுங்கோ, எனச் Order போட அங்கு நின்றவர்களும் அவனைக் கலைத்துப் பிடித்து என்னிடம் கொண்டு வந்தார்கள். கடைக்கு முன்னால் இருந்த மரத்தில் அவனைக் கட்டிவைத்துவிட்டு பின்பு உண்மையான பொலிசை வரவழைத்து அவர்களிடம் ஒப்படைத்து விட்டுச்சென்றேன்." என்று வயிறு குலங்கக், குலுங்க சொல்லிச் சிரித்தார். இப்படியாகப் பல சுவார்சியமான தகவல்களையெல்லாம் எங்களுடன் பகிர்ந்திருக்கின்றார்.

1993ம் ஆண்டு U.N.O வின் உதவியோடு தனது மனைவி பிள்ளைகளிடம் பிரான்ஸ்சிற்கு வந்து சேர்ந்த முகத்தார் அவர்கள். "பதின்நான்கு வருடங்களுக்கு முன்னதாக (1979 – 1993) பிரான்ஸ் வந்திருந்த தமது பிள்ளைகளையும், மனைவியையும் ஒன்றாக சந்தித்த அந்த நாள் மீண்டுமொருமுறை தான் பிறப்பெடுத்ததைப்போன்ற உணர்வையே தந்தது" என கூறிய வார்த்தைகள் மறக்கமுடியாதவை!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரத்தில் மீண்டும் தமிழ்நாடு சென்று எமது மக்களுக்கு சேவை செய்யவே இவர் விருப்பப்பட்டாலும், இவரின் மனைவி, பிள்ளைகளின் அன்பான வேண்டுகோளும், பேரப்பிள்ளைகளில் இவர் வைத்திருந்த அளவிற்கதிகமான பாசமும், இவரது உடல் நிலையும் மீண்டும் அங்கு சென்று சேவை செய்வதற்கு முடியாமல் போய்விட்டது.

ஆனாலும் இரண்டுமுறை இந்தியா சென்று தன்னோடு பணியாற்றிய நண்பர்களையும், தன்மேல் பாசம் வைத்திருந்த அகதி உறவுகளையும் சந்தித்து உரையாடி வந்திருக்கின்றார்.

1999ல் செல்லும்போது தனது ஆயட்கால நண்பன் அப்புக்குட்டி ராஜகோபால் அவர்களும் இவருடன் கூடவே சென்றிருந்தார். இவர்கள் இருவருமாக சென்னையில் உள்ள தலமைச் செயலகத்தின் காரியாலத்திற்கு சென்ற நேரத்தில் அங்கு பெண்களுக்கான தையல் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த விழாவிற்கு இவர்கள் இருவரையும் அழைத்து அந்த தையல் நிலையத்தை திறந்து வைக்கும் கௌரவத்தை இந்த முகத்தார் ஐயாவிற்கும், அப்புக்குட்டி அண்ணனுக்கும் கொடுத்து இருவரையும் பெருமைப் படுத்தியிருந்த திரு.சந்திரகாசன் அவர்களின் உயர்ந்த பண்பையும் எங்களோடு வியந்து அளவளாவியிருக்கின்றார்.

ஐயா அவர்கள் மறைந்தபின்னர் இவர் பற்றிய நினைவுகளை மறைந்த பெரும் தலைவர் தந்தை, எஸ்.யே.வி. செல்வநாயகம் அவர்களின் புதல்வர் திரு.சந்திரகாசன் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து தான் வெளியிட்டு வந்த "ஈழ-சுதந்திரன்" (இதழ் 26 மாசி 2011) பத்திரிகையில் எழுதிய ஐயாவைப்பற்றி நினைவுக் கட்டுரையில் இருந்து சில பகுதிகளை அடுத்த பக்கங்களில் ²&உங்கள் முன் வைக்கின்றேன்.




**2வது மகளின் ஜீவாவின் 25வது ஆண்டு திருமண விழாவில் 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் தொண்டும் யேசுறட்ணம் காட்டிய நல்வழிகள்!



ஈழசுதந்திரன்
ELASUTANTIRAN

கலையும் தொண்டும் ஜேசுரட்ணம் காட்டிய நல்வழிகள்

யேசு ((இயேசு) என்பது இறைமகனின் பெயராகும் அவருடைய வருகையின் பொருளாக இருப்பன அன்பு - இரக்கம்- தொண்டு என்பனவே ஆகும். அந்த அன்பு - இரக்கம்- தொண்டு என்பன இரத்தினங்களாக இருந்தால் எப்படி இருக்கும்?.

ஒளி- உயிர்ப்பு – உற்சாகம் என்பனவாகவே இருக்கும். அப்படித்தான் ஜேசு என்ற சொல்லுடன் இரத்தினம் என்ற சொல்லையும் இணைத்து ஜேசுரத்தினமாகத் திகழ்ந்த நமது யேசறட்ணம் அவர்களாவார். அதாவது அன்பின் இரத்தினமாக, இரக்கத்தின் இரத்தினமாக, தொண்டின் இரத்தினமாக ஈழத்துச் சமுதாயத்தில் இயங்கியவர் யேசுறட்ணம் அவர்கள்.

இவரைப் பார்ப்பவர்கள் இவர் ஒரு போலிஸ் அதிகாரியாக இருப்பாரோ என எண்ணுவதுமுண்டு! முறுக்கு மீசையுடன் கம்பீரமாக நடந்து வருவார். பேச்சும் அப்படித்தான் கம்பீரமான தொனியில்த்தான் பேசுவார். அகதி வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ம் ஆண்டே இவருக்கு ஆரம்பமாகிவிட்டது! அப்பொழுது அங்கு கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற சட்டத்தின் எதிரொலியாக கொழும்பில் தமிழருக்கு எதிராக மூண்ட இனக்கலவரத்தில் இவரும் பாதிக்கப்பட்டு "லங்காராணி" என்ற கப்பலின் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட தமிழர்களில் முகத்தாரும் அடக்கம்.

அந்தக் கப்பல் பயணத்தின்போது அவர் நடத்திய கலை நிகழ்ச்சிகளால் கொழும்பில் இருந்த தங்கள் வீடுகள், தோட்டம் துரவுகளையும், வர்த்தகம், தொழில், உத்தியோகம் முதலிய வாழ்வாதாரங்களையும் இழந்து கவலையில் ஆழ்ந்து கிடந்த அக்கப்பலில் பயணம் செய்த அகதிகளை, தமிழர்களை கவலையை மறக்கவும், சிரிக்கவும் வைத்தவர் என்று அவருடன் பயணம் செய்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

இவர் கொழும்பில் 33 வருடகாலம் பணியாற்றியிருக்கின்றார். இக் காலகட்டங்களில் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களால் 5 தடவைகள் அகதியாக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருக்கின்றார். இறுதியாக 1983ம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தின்போது ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் அகதியாக்கப்பட்டு பின்பு அகதியாகத் தமிழகம் சென்றார்.

1983ம் ஆண்டு இனக் கலவரத்தின் காரணமாக அகதியாக இந்தியா சென்ற நான் என்னைப்போல தாயகத்தைத் துறந்து இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் புகும் ஈழத்தமிழ் மக்களுக்கு நிழல் தரும் குடையாக ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத்தை சென்னையில் 1984ம் ஆண்டு தொடங்கியபோது அதில் எம்மோடு இணைந்து தொண்டாற்றவென நாம் சிந்தித்தவர்களில் "வானொலி மாமா" என்று ஈழத்தமிழ் மக்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட இரா-பத்மநாதன், கவிஞர், ஈழத்து ரத்தினம், 'முகத்தார்" யேசுறட்ணம் ஆகியோர் முதலிடம. பெற்றனர்...

அகதிப் பெண்களையும், ஆண்களையும் தாய்களாக, தங்கைகளாக, பிள்ளைகளாக, தந்தைகளாக, தம்பிகளாக முறைவைத்து அழைத்து நிறைவாகப் பணிசெய்த பாங்கை யேசுறட்ணம் அவர்களிடமிருந்து ஏனைய சேவையாளர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய தகமையுடையதாக இருந்தது.

திரு.யேசுறட்ணம் அவர்கள் தான் ஒரு கலைஞனாக மிளிர்ந்தது மட்டுமன்றி, அகதிச் சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தவர்களிடமும் இருந்து அவர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் வண்ணம் "இளைய ஈழ கலைச் சந்திப்பு" நிகழ்ச்சியைத் தமிழகத்தில் அரங்கேற்றி தமிழ் உலகத்தையே அதியித்துப் பார்க்கச் செய்தவர்!

சென்னையில் நடந்த இளைய ஈழம் கலைச்சந்திப்பில் கலந்துகொண்ட தி.மு.க.வின் மூத்த தலைவரும், இன்றைய தமிழக நிதி அமைச்சருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் "இதுபோன்றதொரு சிறந்த கலை நிகழ்ச்சியை தாம் இதற்குமுன் கண்டு கழித்ததில்லை என்று மனதாரப் பாராட்டினார். அந்த அளவிற்கு யேசுறட்ணம் அவர்களின் கலைப்படைப்பு புதுமையுடனும், பொலிவுடனும் திகழ்ந்தது.

குடும்ப சூழ்நிலை காரணமாக அவர் 1993ம் ஆண்டு பிரான்ஸிற்கு செல்ல நேர்ந்தாலும் அவரின் உள்ளம் எம்முடனேயே இருந்தது. தீபாவளிக்கு புகுந்த இடம் வரும் மகள்போல கழகத் தொண்டில் நான் இருப்பேன் எனச் சொல்வார். அதற்கேற்ப மீண்டும் இரண்டு முறை தமிழகத்திற்கு வந்தபோது எம்மோடும், அகதிச் சொந்தங்களோடும் அளவளாவிச் சென்றிருக்கின்றார்.

எமது துர் அதிஸ்ற்ரம் அவர் இயற்கை எய்திவிட்டார் எனினும் தனது தன்னலம் மறந்த தொண்டால், தன்னேரில்லாத கலைகளால் அவர் எம்முடன் வாழ்கின்றார்! என்றும் வாழ்வார்!.

**சா.செ.சந்திரகாசன்**
**நிறுவனர். ஈழ எதிலியர் புனர்வாழ்வுக் கழகம்**
**சென்னை**



**1999ல் தமிழ்நாட்டில் ஈழ எதிலியர் கழக தலைவர் திரு சந்திரகாசனுடன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல இலங்கையில் இருந்து அகதியாக தமிழகம் சென்று ஐயா அவர்களோடு அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தவரும், தற்பொழுதும் பணியாற்றிக் கொண்டிருப்பவருமான சகோதரி தேன்மொழி அவர்கள் அதே பத்திரிகையில் ஐயாவுடனான நினைவுகளைப் பகிர்ந்திருந்தார். அதிலிருந்தும் சில பகுதிகள்.

# நீங்கள் மறையவில்லை எங்கள் மனங்களில் வாழ்கின்றீர்கள்.

என்றும் மறக்கமுடியாமல் எனது நினைவுகளில் இருக்கும், நான் மாமா என்றழைக்கும் என்னருமை யேசுறட்ணம் ஐயாவே நீங்கள் மறையவில்லை எங்கள் மனங்களில் வாழ்கின்றீர்கள். உங்கள் கலையுலகம் உங்களைப் போற்றுகின்றதோ இல்லையோ நீங்கள் அகதி மக்கள் மத்தியில் செய்த பணிகள் அனைத்து மக்களும் பேசுகின்ற அளவில் அமைந்திருக்கின்றன.

நான் அகதியாக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்து முதல் முதல் ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்குள் கால் பதித்தபோது நீங்கள்தான் என்னை முதலில் வரவேற்றீர்கள். அந்த கம்பீரமான தோற்றம்! முதலில் உங்களை அறிமுகம் செய்தபோது யேசுறட்ணம் அங்கிள் என்று சொன்னீர்கள். எனக்கு மட்டுமல்ல இந்தக் கழகத்தில் பணியாற்றிய அனைவராலும் அங்கிள், அங்கிள் என அனைவராலும் அழைக்கப்பட்டீர்கள். அதில் நானும் ஒருத்தி...

உங்களிடம் இருந்து கற்றுக்கொண்டவை பல இருந்தாலும் அதில் சுட்டிக்காட்ட விரும்புவது யாரை பார்த்தாலும் அன்போடு கையணைத்து அவர்களை வரவேற்கும் தன்மையும், அன்பான உபசரிப்பும்தான்.

ஒரு வேலையை எங்களிடம் பணித்திடும்போது பவ்வியமான வார்த்தைகள் மகள், மருமகள் என்று உங்கள் பாணியிலேயே அழைப்பீர்கள். அந்த அழைப்பின் சத்தம் ஓய்ந்துவிட்டதே?!

எங்கள் பாசமும், உங்கள் கலைத்திறமையும் ஒன்றாக அமைந்து கலைக்கழகம் உயிர் பெற்று வாழும்போது நீங்கள் பல தடவைகள் எங்களைத் தட்டிக் கொடுத்தவர். அங்கிள் நீங்கள் இன்னொரு தேசம் சென்றிருந்தாலும் அங்கிருந்துகொண்டு “ஈழ சுதந்திரன்” தங்களது கைகளுக்கு கிடைக்கத் தவறிவிட்டால் என்னிடத்தில் உரிமையோடு போன் போட்டு “அனுப்பிவை” என்று சொல்லும் அந்தக் குரல் எங்கே?

நினைக்க மனம் பதைக்கின்றது. மார்கழி மாதம் பிறந்துவிட்டால் அங்கிளின் இயேசுப்பிறப்பு வாழ்த்துக் கவிதை வந்தவிடும். அது இந்த வருடம் வரவில்லையே? பத்திரிகையில் கண்கள் தேடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிள் உங்களைப்பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். எங்களுக்கு முன்மாதிரியாக இருந்து கற்றுக் கொடுத்தவைகளை நாங்கள் பயன்படுத்தகின்றோம் எங்கள் பணியில். நீங்கள் மறையவில்லை! மாறாக எங்கள் மனங்களில் வாழ்கின்றீர்கள்!

உங்கள் ஆத்மா சாந்தி பெற இவளும் பிரார்த்திக்கின்றாள்.

## தேன்மொழி
**சென்னை**

இந்த நூலுக்காக இன்னும் கூடுதலாக ஐயாவைப்பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக சென்னையில் வாழ்ந்துவரும் சகோதரி தேன்மொழி அவர்களை தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள முயன்றேன் அவர் கழகத்தின் வேலை காரணமாக வேறு இடத்திற்கு சென்றிருந்ததால் எனது முயற்சி பலனளிக்கவில்லை. டாக்டர் அருண்கோபாலன் அவர்களின் தொடர்பு கிடைத்தது ஆனாலும் அவருக்கு அப்பொழுது இருந்த வேலைப்பழு காரணமாக உடனடியாக எழுதி அனுப்புவதற்கான நேரம் இல்லாமல் போய்விட்டது. இருந்தும் எங்களுக்கத் தெரிந்த தகவல்களை தொகுத்து இந்தப் பகுதியையும் ஓரளவிற்கு முழுமையடைய வைத்திருக்கின்றோம்.



**1999ல் தமிழ்நாட்டில் எதிலிகள் கழக தையல் கடை திறப்புவிழாவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

# வண்ண வரிகள்......

அனேகமான நூல்களுக்கு முன்னுரை மட்டுமே எழுதியிருக்கும் நான் முதன் முறையாக ஒரு புத்தகத்திற்கு முடிவுரை எழுதவேண்டிய கட்டாயத்தை முகத்தார் ஐயா அவர்கள் இன்று எனக்கு ஏற்படுத்திவிட்டார்! ஐயா அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலேயே இந்த நூல் வெளியாகியிருந்தால் ஒரு நட்புரையோ, அல்லது உறவுரையோதான் எழுதியிருப்பேன். அதுவும் முன் பக்கத்திலேயே பதிவாகியிருக்கும். இன்று இந்தப் புத்தகத்தை நிறைவாக தொகுத்து முடித்துள்ளேன் என்ற திருப்தியோடு இந்த முடிவுரையை எழுதுகின்றேன்.

"மானுட சமுதாயத்தை நாமென்று கூவு" என்றார் பாரதிதாசன். இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஆத்மாவையும் தானென்று பார்க்கின்றவனின் முதல்க் குரல் அது! நாம் என்பது நாமல்ல? குடும்பம், சமூககம், நாடு என்கின்ற எல்லைகளைக் கடந்து... இந்த உலகத்திற்கு நாமும் பொறுப்பு என ஒவ்வொருவரையும் தலை வணங்க வைக்கின்ற வரிகள் அவை. இந்த பொறுப்பு கலைஞர்களிடமும், எழுத்தாளர்களிடமும் மிக மிக அதிகமாகவே இருக்கின்றது. நான் அப்பையா என வாஞ்சையோடு அழைக்கும் முகத்தார் ஐயா அவர்கள் கலைஞனாகவும், எழுத்தாளனாகவும் இருந்த காரணத்தால் அவருக்கு இந்தப் பொறுப்பு மிகவும் அதிகமாகவே இருந்தது. அந்தப் பொறுப்பை அவரால் முடிந்தமட்டும் நிறைவேற்றுவதற்கு இலங்கை வானொலி மிகப்பெரிய தளமாக அமைந்தது.

ஒரு நாட்டின் தேசியக்கொடியில் எத்தனை நிறங்கள் இருக்கின்றது என்பதில் அந்த நாட்டிற்கு பெருமையில்லை! அந்த நாட்டில் வாழ்கின்ற ஏழை உழவனுக்கு உடுப்பதற்கு நல்ல உடை இல்லாத நிலை இருந்தால் அந்த நாட்டிற்கு என்ன பெருமை இருக்க முடியும்? எந்த நாட்டிலும் மிக உயர்ந்த உழைப்பாளி விவசாயிதான். அந்த விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகளை சொல்வதற்காக இலங்கை வானொலியில் உருவாக்கப்பட்டதுதான் கிராமிய நிகழ்ச்சி!

முகத்தார் அவர்கள் வானொலிக்குள் நுளைவதற்கு முன்பும் இலங்கை வானொலியில் கிராமிய நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டுதான் இருந்தது. ஆனால் அப்பொழுது அந்த நிகழ்ச்சி நடைபெறும் நேரங்களில் அனேகமான வீடுகளில் உள்ள வானொலிப் பெட்டிகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டுத்தானிருக்கும்! முகத்தார் வீடு உருவாக்கப்பட்ட பின்னர் விவசாயிகள் மட்டுமல்ல அனைத்து தரப்பினரும் அந்த நிகழ்ச்சியை விரும்பிக் கேட்டு ரசித்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற பல சுவையான தகவல்களை இவருடன் வானொலியில் பணியாற்றிய இவரின் சக நண்பர்களான திரு.மதியழகன், திரு.டேவிற்-ராஜேந்திரன் போன்றோரும் இவரின் குடும்ப வாழ்வுபற்றி இவரது மூத்த மகள் கலாவும் மிக விரிவாகவே எழுதியிருக்கின்றார்கள். இங்கு நான் எழுதப்போவதெல்லாம் இந்தப் புத்தகம் உருவாகிய விபரங்களே...

இந்தப் புத்தகம் யேசுறரட்ணம் என்ற மனிதனினதும், முகத்தார் என்ற கலைஞனினதும் உள்ளடங்கிய வாழ்க்கை வரலாறு. வரலாறுகளை எழுதும்போது எல்லா உண்மைகளையும் எழுதவேண்டும் என்ற சட்ட விதிகள் எதுவும் இல்லை! ஆனால் எழுதுபவை எல்லாம் உண்மையாக இருக்கவேண்டும். இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் சில தகவல்கள் அவரது பிள்ளைகளே முன்பு அறிந்திராதவை! அப்படியாக பல உண்மைகளை மனம் திறந்து எழுதியிருக்கின்றார் முகத்தார் ஐயா அவர்கள்.

சுமார் மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னதாக என நினைக்கின்றேன் ஜேர்மனி ரவி மாஸ்ற்ரரின் ஐரோப்பிய தமிழ் வானிலிக்காக ஐயாவின் நாடக ஒலிநாடாக்களை வாங்குவதற்காக இவரின் இல்லம் சென்றிருந்தபோது அவரின் இளைய மகள் ஜீவாவாவின் முன்னிலையில் "ஐயா உங்கள் கலைத்துறை அனுபவங்கள் பதிவாகவேண்டும் நேரம் கிடைக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாக எழுதுங்கள்" என்ற வேண்டுகோளை அவரிடம் வைத்திருந்தேன். அவரும் அன்று ஆர்வத்தோடு சம்மதம் தெரிவித்திருந்தாலும் அதற்கான முயற்சியில் இறங்கியதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இதை ஜீவா அவர்களே என்னிடம் "வண்ணை அண்ணை பப்பாவிடம் சொல்லி அவர் ஆரோக்கியமாக இருக்கும் இந்த நாட்களிலியே அந்தப் புத்தகத்தை எழுதச்சொல்லி ஊக்கப்படுத்துங்கள்" எனக் கேட்டிருந்தார். நானும் தொலைபேசியில் உரையாடும்போதெல்லாம் நினைவூட்டினாலும் எழுத ஆரம்பித்ததற்கான அறிகுறிகளே இல்லை.

பின்னொருநாள் எனது லண்டன் நண்பர் சிவ-தணிகாசலம் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க நடா-மோகனின் பெஸ்ற் ஓடியோ வானொலியில் தனது கலைத்துறை அனுபவங்களை நான் கேள்விகளாக கேட்க இவர் பதிலாக தொடர்ந்து ஏழு வாரங்கள் கூறி வந்தார். அதன் மூலமாக நான் அறிந்திருந்தவை ஏராளம்.

பின்பு இவர் அடிக்கடி வைத்தியமனையில் தங்கியிருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒருநாள் நானும், நண்பன் கே.பி. லோகதாசுமாக Hospital Gonesse க்குச்சென்று அங்கு தங்கியிருந்த தனிமையான நாட்களை தனது வரலாறை எழுதும் பயனுள்ள நாட்களாக்கினோம். அங்கிருந்த காலத்தில் இருபத்தைந்து வீதமானவற்றதைத்தான் எழுதியிருந்தார். பின்பு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களில் இவர் இருந்த மற்றொரு வைத்தியசாலையான Val de Gras Miltry Hospital Port Royal க்கு நண்பன் லோகதாசுடன் சென்று எழுதுவதற்கு பேப்பர் கட்டும், பேனாவும் கொடுத்து எங்கள் முன்னிலையிலேயே முன்பு விட்ட இடத்தில் இருந்து தனது வரலாற்றை எழுதும் அந்தப் பணியை மீண்டும் தொடர வைத்தோம்.

தனது கதையை எழுது ஆரம்பித்ததிலிருந்த அந்த நாட்களிலேயே இலங்கை வானொலியில் தன்னுடன் பணியாற்றிய சக நண்பர்களிடம் இருந்து இந்தப் புத்தகத்திற்கான அணிந்துரைகளை வாங்கிவிட்டார்! இது முகத்தார் ஐயா தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் ஒழுங்கு முறைகளின் சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும்!. இது மாத்திரமல்ல தான் எழுதும் கடிதங்களிலிருந்து, நாடகப்பிரதிகள்வரை அனைத்தையும் மற்றவாகளின் கைகளுக்குப் போவதற்கு முன்னா் தானும் ஒரு பிரதி எடுத்து பத்திரப்படுத்திக்கொள்வதோடு, நேரத்திற்கு மரியாதை கொடுப்பது போன்ற பலசிறப்பு அம்சங்கள் அவரிடம் இருந்தது!

என்னுடைய கவனக்குறைவினாலும், ஐயாவின் இந்த ஒழுங்கு முறைகளாலும்கூட இந்தப் புத்தகத்தினை முழுமையாக்குவதற்கு துணை புரிந்திருக்கின்றது என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆம் இவரிடம் வந்திருந்த சில முன்னுரைகளை என்னிடம் தந்திருந்தார். நான் வீடு மாறியபோது அவற்றை தவறவிட்டுவிட்டேன். அவரிடம் அந்தப் பிரதிகளின் போட்டோக்கொப்பிகள் இருந்ததனால்த்தான் அவைகளை என்னால் இந்தப் புத்தகத்தில் இணைக்க முடிந்தது.

இப்படியாக கொஞ்சம், கொஞ்சமாக இந்த நூலின் எழுபத்தைந்து வீதமான பகுதிகளை முடித்திருந்தபோது இவரது கண்பார்வை இவரோடு ஒத்துளைக்க மறுக்கத் தொடங்கியதால் இந்தப் புத்தகம் முற்றுப்பெறாத நிலையிலேயே இருந்தது. இவர் எழுதித் தந்ததையெல்லாம் நான் கணனியில் பதிவு செய்துவிட்டு மிகுதியை நிறைவு செய்வதற்காக வாய்மொழி மூலமாக தகவல்களைப் பெற முயற்சித்தோம் அப்பொழுது அவருடைய நினைவாற்றலும் குறைந்துவிட்டதால் அதற்குமேல் எம்மால் நகர முடியவில்லை! இதனால் நான் மனம் சோர்ந்திருந்த வேளையில் சற்றும் மனம் தளராமல் இந்தப் புத்தகத்தை நிறைவு செய்வதற்கு முழு முயற்சியும் எடுத்தவர் அவரது செல்ல மகள் ஜீவாதான்.

ஜீவா தந்த தகவல்களோடு ஐயாவின் ஆயுட்கால நண்பர் அப்புக்குட்டி-ராஜகோபால் அண்ணனும் தனக்குத் தெரிந்த தகவல்களைத்தர, வானொலிக்காக இவரிடம் நான் செவ்வி கண்டபோது தெரிந்துகொண்ட தகவல்களும், இவை தவிர ஐயா என்னோடு நேரில் பகிர்ந்துகொண்ட பல தகவல்களும் இந்தப் புத்தகம் முழுமையடைவதற்கு உறுதுணையாக கரம் கொடுத்தன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்கெல்லாம் மேலாக இந்தக் கதைக்குப் பொருத்தமாதொரு பெயரை தெரிவு செய்வதற்காக நாங்கள் எடுத்துக்கொண்ட நேரங்கள் மிக அதிகமானவை என்றே சொல்லாம்.

மன்மத எழுத்துக்களுக்கு மாலை சூட்டி மரியாதை செய்யும் இன்றைய வணிகப் பொருளாதார யுகத்தில் மனிதத்தை நேசித்த ஒரு மனிதரின் உண்மைணான வரலாற்றை நூலாக்கியிருக்கின்றோம். இசையின் இனிமை இசையமைப்பாளரின் இசைக் குறிப்பில் இல்லை? அதைக் கேட்டு சிலிர்க்கும் இதயத்திலத்தான் இருக்கின்றது. அதுபோல ஒரு புத்தகத்தின் பெருமை அதன் வடிவமைப்பில் இல்லை! அந்தப் புத்தகம் நமக்குள் ஏற்படுத்தும் உந்துதலில்த்தான் இருக்கின்றது. அந்த வகையில் இந்தப் புத்தகம் ஒரு சிலரது மனங்களையாவது உந்தவைத்தால் நாங்கள் பெரு முயற்சி எடுத்து இதை நூலாக்கியதற்கான பயனைப் பெற்றவர்களாவோம்.

ஒருநாள் தொலைபேசியில் உரையாடும்போது நான் கேட்டேன் "ஐயா இந்தப் புத்தகத்தை எப்படி நிறைவு செய்வது?" என. அவர் சொன்னார் "இப் பிறவியில் நான் நிறைவான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றேன். நல்ல தாய் தந்தையர், சிறந்த கல்வி, உயர்ந்த உத்தியோகம், மனம் விரும்பிய கலைவாழ்வு, அன்பான மனைவி, பாசமான பிள்ளைகள், நேசமான மருமக்கள், என்னை தங்கள் பாசத்தால் மயக்கி வைத்திருக்கும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். இவைகளோடு நல்ல நண்பர்கள். இப்படியாக சிறு வயதிலிருந்து இன்றுவரை வாழ்க்கையில் எந்த குறையும் இருந்ததில்லை எல்லா செல்வங்களுமே எனக்குக் கிடைத்தன. இந்தப் பிறவியில் இப்படியாக எனக்கு நிறைவான வாழ்வைத்தந்த இறைவனுக்கு நன்றிகூறி முடித்துவிடுங்கள்" என்றார்.

ஐயா சொல்லிய அந்த வார்த்தைகள்தான் இந்த நூலின் முடிவுரை!

இந்த நூலுக்கு அணிந்துரை, மதிப்புரை, வாழ்த்துரைகளைத் தந்த இலங்கை வானொலியின் முன்னாள் பணிப்பாளர் திரு.மதியழகன் அவர்கட்கும், இலங்கை வானொலியில் கிராமிய நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக இருந்து "முகத்தார்வீடு" நாடகத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்த திரு.டேவிற்-ராஜேந்திரன் அவர்கட்கும், அமரராகிப்போன கவிஞர் திரு.செல்வக்குமார் அவர்கட்கும், ஐயாவின் ஆயட்கால நண்பரான திரு.அப்புக்குட்டி-ராஜகோபால் அவர்கட்கும், ஐயாவை தங்கள் இதயத்தில் வைத்து நேசிக்கும் நல்ல உள்ளங்களான விக்கி-நவரட்ணம், மற்றும் கல்லாறு சதீஸ் ஆகியோரோடு ஐயாவின் இள,வயதுக் காலங்களை தனது சிறு,வயதுக்காலத்தில் இருந்து இரைமீட்டித்தந்த அவரது மூத்த மகள் திருமதி. கலா அவர்களுக்கும், மற்றும் வாழ்த்துரைகள் தந்தவர்களுக்கும். இந்த நூலை அழகாக வடிவமைத்துத் தந்த கொப்பி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாசப்பல் அரவிந்தன் அவர்கட்கும், முகப்பு அடடையை வடிவமைத்துத் தந்த திரு.ஓசை, மனோ அவர்கட்கும். நூலாக்குவதில் உதவி புரிந்த திரு. ரவி, மாஸ்றர் மற்றும் அச்சகத்தாருக்கும் ஜயாவின் குடும்பத்தார் சார்பில் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


சுவைஞர்களே! ஆங்கில அறிஞர் பேகன் சொல்கின்றார் “சில புத்தகங்களைச் சுவைக்க வேண்டும், சில புத்தகங்களை அப்படியே விழுங்கிவிட வேண்டும், சில புத்தகங்களை மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக அசைபோட்டு ஜீரணிக்கசேண்டும்” என்று. கண்டிப்பாக இந்தப் புத்தகத்தை நீங்கள் அசைபோட்டு ஜீரணிப்பீர்கள் என நான் நம்புகின்றேன்.

**“கலைஞர் காவலர்” “மனிதருள்”**
**வண்ணை தெய்வம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ජාතික චිත්‍රපට උළෙල
தேசிய திரைப்பட விழா National Film Festival
ජනාධිපති සම්මාන 1979
ஜனாதிபதி பரிசு 1979 President's Awards 1979
Diploma of Merit
රාජ්‍ය චිත්‍රපට සංස්ථාව ශ්‍රී ලංකා
அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஸ்ரீ லங்கா STATE FILM CORPORATION SRI LANKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Course in Radio Acting & Writing for Radio-1975

# Certificate of Attendance

This is to Certify that

S. JESU RATNAM

has attended a course in

## Radio Acting
## &
## Writing for Radio

Sponsored By

**The Sri Lanka Broadcasting Corporation**
**Tamil Artistes Association**

Organiser — Director of Training Courses

Colombo - 30th November 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Refuge student's drama acting practice**



**Mukathar veedu drama**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Selva registration at India 1998**





**2001 50th wedding anniversary with family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**August 2009 Grand Daughter Janiel Registration**



**March 2010 Grand children's Daniel B'day Function**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**15 December 2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27 November 2010**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








**St Hendry's College all students held at funerial with flag presentation**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பப்பா

அனுபவங்களை இரைமீட்டு அசைபோடுவதே
ஒரு சுகமான அனுபவம்தான்! அதிலும் கலைத்துறையில் அனுபவங்களுக்கா பஞ்சம்?.
எங்கள் பப்பா தனது அனுபவங்களையெல்லாம்
எழுதிவைத்துவிட்டு அமரராகிவிட்டார்.
நான் அதை புத்தக வடிவமாக்கியிருக்கின்றேன்.
சின்ன வயதில் இருந்தே எங்கள் பப்பாவின் ஒவ்வொரு அசைவுகளையும்
பக்கத்தில் இருந்தே பார்த்து பார்த்து ரசித்தவர்கள் நாங்கள்.
எங்கள் பப்பாவிற்கு இரண்டு குடும்பங்கள்!
ஒன்று மம்மியோடு பிள்ளைகள் ஐவர் அடங்கியது.
இரண்டாவது அவரது கலைத்துறையும், அத்துறைசார்ந்த நண்பர்களும்.
இந்த இரண்டு குடும்பங்கள்ளயும் பப்பா என்றுமே மோதவிட்டதும் இல்லை.
அதுவேறு, இதுவேறு என்று பிரித்துப் பார்த்ததும் இல்லை.
இது எங்கள் பப்பாவிடம் இருந்த மிக உயர்ந்த பண்பாகும்.

இந்த நூலில் மார்கழி மாதத்து விடிகாலையில் ஏற்படும் பனியின் குளிரும்,
சூரியனின் வெய்யில் தரும் மெல்லிய இளம் சூட்டையும்போல
தனது இரண்டு குடும்பத்தைப்பற்றியும் ஒளிவுமறைவின்றி எழுதியிருக்கின்றார்.

தனது கலைக்குடும்பதைப்பற்றி எழுதிய குறிப்புக்குளுக்கு
அருகில் சம்பத்தப்பட்டவர்களின் புகைப்படங்களையும்
பதியவைக்கவேண்டும் என்பது எங்களது ஆசை.
ஆனால் எங்களால் முடியவில்லை.
இருந்தாலும் பப்பா சம்மந்தமான எங்களிடம் இருந்த புகைப்படங்களை
இந்த நூலில் பதியவைத்திருக்கின்றோம்.

ஒரு மனிதருக்கு இத்தனை நண்பர்களா?
என்ற ஆச்சரியமான கேள்வி உங்களுக்கு ஏற்படலாம்!
ஆனால் அதைவிட பெரிய ஆச்சரியம் இத்தனை நண்பர்களையெல்லாம்
தன்னகத்தே கொண்டுள்ள எங்கள் பப்பா தனது வாழ்க்கையில்
ஒரு எதிரியைக்கூட தேடிக்கொள்ளவில்லையே என்பதுதான்.

இப்படியாக உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த
எங்கள் பப்பாவைப்பற்றி மற்றவர்களும்
தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே
இந்த புத்தகத்தை வெளிக்கொண்டு வந்திருக்கின்றோம்.
புத்தகத்தை படித்தவர்களில் யாராவது ஒருவருக்கு
எங்கள் பப்பாவின் வாழ்க்கை முன்மாதிரியாக அமைந்தால்
இந்த புத்தகம் உருவானதின் நோக்கம்
முழுமையடைந்ததாகவே நான் கருதுவேன்.



இந்த நூல் உருவாக்கத்தில் ஈடுபட்ட அனைவருக்கும்
எங்கள் குடும்பத்தின் சார்பாக என் மனதார்ந்த நன்றிகள்.

ஜீவா-மரியதாஸ்
முகத்தார் அவர்களின் இளைய மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org